

மங்கையர்
மலர்
Mangayar Malar
ஆகஸ்டு '85
விலை Rs. 2/-







புதிய பவர் பேக்டு ஸர்ஃப்.

பூரிக்குது இதன் புத்தமைப்பு சக்தி. பொங்குது இதுவரை இல்லாத ஏற்றமான ஆற்றல்: ஆழ ஊடுருவித் துப்புரவாக்குகிறது—உங்கள் வெள்ளைத் துணிகள் எல்லாம் ஒப்பற்ற வெள்ளை-வெளேர், வர்ணத் துணிகளோ உன்னத ஒளிமயம்.

அதே சமயம், துணிகளின் புதுமை காத்து நெடுநாள் வாழ்விக்கிறது: வெளுக்கும் ஒவ்வொரு சட்டையும் ஒவ்வோர் ஆடையும் வெண்மை மிடுக்கு, புதுமைக் கருக்கு ..புத்தாடைபோல் வெளுப்பு...

சலவைக்கு சலவை பொலியும் புதுமை!

**புதுமை தவழும் புதுமணம்:** கமழ்ந்த வண்ணம் இருக்கும் உங்கள் துணிகள்மீது—சுத்தம் தவழும் புத்தம் புதுமை, பக்கத்தில் இருப்பதே இனிமை.

**ஜோரான புதிய பேக்:** சக்திச் சுரங்கமான இத் தயாரிப்புக்கு உற்ற பொருத்தம்.

வாரீர் இன்றே வாங்கிக்கொள்வீர் பவர் பேக்டு ஸர்ஃப்.

**ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர், சகல துணிகளுக்கும் புதுமை ஜோர்!**

LINTAS-SU-324-2416 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

# பரிசு!

மங்கையர் மலர்

கடந்த ஆறு மாதங்களாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் எரிவாயுப் போட்டியின் மூலம் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள். இப்போட்டியை மங்கையர் மலருடன் இணைந்து நடத்திய அகில இந்திய எரிவாயு விநியோகிப்பாளர் சங்கமும் (தென்பகுதி), அகில இந்திய எரிவாயு பயன்படுத்துவோர் சங்கமும் மேலும் ஒரு சிறப்புப் பரிசைத் தர முன்வந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

## Super Flame அளிக்கும்

## ரூ. 5000/-

## மதிப்புள்ள 'குக்கிங் ரேஞ்ச்' ஒன்று பரிசாகத் தரப்படும்.

என்ன போட்டி?

## 'சிறந்த சமையலறை இப்படித்தான் இருக்கும்!'

இந்தத் தலைப்பில் ஒரு சிறந்த சமையலறை எப்படியெல்லாம் இருந்தால் சிறப்பாக இருக்கும் எனக் கட்டுரை வடிவில் எழுதி அனுப்புங்கள். முடிந்தவர்கள் வரை படத்துடன் அனுப்பலாம். சிறந்த கட்டுரைக்கு Super Flame வழங்கும் ரூ. 5000/— மதிப்புள்ள 'குக்கிங் ரேஞ்ச்' ஒன்று பரிசளிக்கப்படும்.

பிரசுரமாகும் மற்ற கட்டுரைகளுக்கு வழக்கமான சன்மானம் உண்டு.

கட்டுரை அனுப்பவேண்டிய கடைசி தேதி: 15-8-85.

1. இது தொடர்பான கடிதப் போக்குவரத்து இடையாது.
2. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

# மஞ்சுளா ரமேஷ்

"பாலும், தெளிதேனும், பாகும் பருப்பும்....."

அந்தக் குழந்தை இந்தப் பாட்டைச் சொல்வதற்குள் பட்டபாடு! பார்க்கும் எந்த மனிதரும் கண்களில் நீர் ததும்பாமல் இருக்கவே முடியாது. எனக்கும் கண்ணீர் கண்ணை மறைத்தது.

இவர்கள் காது கேளாத குழந்தைகள். காது கேட்காததால் ஒலி என்றால் என்னவென்றே தெரியாமல், அதனால் வாயும் பேச வரவில்லை. பெற்றோர்களுக்கோ, எங்கள் வீட்டில் ஒரு 'செவிட்டுக் குழந்தை' இருக்கிறது எனச் சொல்லிக் கொள்ள வெட்கம். விளைவு? அந்தக் குழந்தைகளின் எதிர்காலம் இருள் மயமாகிவிடுகிறது.

அப்படி இருண்டு போன வாழ்விற்கு ஒரு சிறு அகல் தீபமாகத்தான் மாயவரத்தில் 'அன்பகம்' தோன்றியிருக்கிறது. தருமபுர ஆதினம் இப்பள்ளியை அன்புடன் பாதுகாக்கிறது. முப்பது குழந்தைகள் இங்கு பயிலுகிறார்கள். இவர்களுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து, 'ஸ்பீச் தெரபி' யெல்லாம் படித்து தங்கள் மூச்செல்லாம் இந்தக் குழந்தைகளின் வாழ்விற்காகத்தான் என வாழ்கிறார்கள்' ஞானசம்பந்தம் தம்பதியினர். இந்தப் பள்ளியைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் நிறுத்த மாட்டேன் என்கிறார் ஞானசம்பந்தம்.

"என் பையனை 'சைனிக்' ஸ்கூலில் சேர்ப்பதற்கு முயன்றபோது அவனுக்கு 'ழ, ழ' வராத குறையைச் சுட்டிக்காட்டினார்கள். சென்னையில் 'ஸ்பீச் தெரபிஸ்ட்' ஷாதிவாலைத் தேடி ஓடினேன். அங்கு என் மகனுக்காக ஒரு மாதம் தங்கியிருந்தபோதுதான் காது கேளாத குழந்தைகளைப் பார்த்தோம்.

காது கேளாதவர்களுக்கு ஒலி என்றாலே என்னவென்றே தெரியாது. அவர்களுக்குச் சாதாரண ஒருவர் பேசும்போது தொண்டையில் கைவைத்து இதுதான் ஒலி என உணர வைப்பார்கள். பிறகு உதட்டசைவின் மூலம் ஒலிகளை உணர வைத்து, அதன்பிறகு பேச்சைச் சொல்லித் தருகிறார்கள். அதைக் குழந்தைகள் கேட்டு மிகவும் கஷ்டப்பட்டுப் பேசும் போது..... அப்பப்பா, அதை நேரில் பார்த்தால், அழாமல் இருக்க முடியாது.

இப்படி எத்தனை மக்கள் இருக்கிறார்கள் என நினைக்கிறீர்கள்? நம்முடைய நாட்டில் அறுபது மில்லியன் காது கேளாதவர்கள் இருக்கிறார்கள், தெரியுமா?

பிறந்ததிலிருந்து தன் குழந்தை பேசாமல் இருந்துவிட்டு இப்படிப்பட்ட பயிற்சியின் மூலம் பேசுவதைப் பார்க்கும்போது அந்தப் பெற்றோரின் மகிழ்ச்சிக்கு அளவேது?

இவற்றையெல்லாம் பார்த்துவிட்டுத்தான் மாயவரத்தில் இந்த அன்பகத்தை ஆரம்பித்தோம். முப்பது குழந்தைகள் இப்போது பயிலுகிறார்கள்" என்கிறார்.



* அன்பகத்தில்

கர்ப்பமாக இருந்தபோது, அதிகமாக ஆன்டி-பயாடிக்கை டாக்டர் கொடுக்க, அதனால் இரு குழந்தைகளை காது கேளாதவர்களாகப் பெற்ற தாய் கண்ணீர் வடிக்கிறார். பிறவியிலேயே சிலருக்குக் குறை... 'ஹியரிங் எய்ட்' போன்ற பெரிய சாதனத்தை மாயவரம் ரோட்டரி கிளப் இன்னர்வீல் அளித்திருக்கிறது. இதன் மூலம் பேச்சு சொல்லித் தருகிறார்கள். இப்போது சிறிய இல்லத்தில் இந்தப் பெரிய சேவை நடந்து வருகிறது.

"வெளிநாடு, பம்பாயில்லெல்லாம் காது கேளாதவர்களுக்கான சிகிச்சை முறைகள் எவ்வளவோ முன்னேறியிருக்கிறது. சிறந்த கருவிகள் இருக்குமானால் இந்தக் குழந்தைகளுக்கு இன்னும் எவ்வளவோ செய்யலாம். அதிகப் பண வசதி இல்லாத நிலையில் எங்களால் முடிந்த அளவு போராடி வருகிறோம்' என்று வருத்தத்துடன் புன்னகைக்கிறார் இவருடன் அனைத்து வேலைகளிலும் ஒத்துழைக்கும் துணைப் பேராசிரியர் இராமலிங்கம்.

* * * * *

மயிலாடுதுறையில் ஏதேனும் சமூக நலப் பணியா, கல்விக் கூடத்திற்கு உதவியா, பொதுக்காரியமா? எல்லாவற்றிலும் முன் நிற்கிறார்கள் மேலையூர் தாசில்பண்ணை ராஜசேகரனும் அவர் மனைவி ஜீவா ராஜசேகரனும். ஏனெனில் இது அவர்கள் தலைமுறையாக வரும் பழக்கம். தமிழகத்தில் எங்குமே இல்லாத படிக்குக் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் எழுப்பியவர்களாயிற்றே இவர்கள்.

* பூம்புகார் கலைக் கூடத்தில்.......)



பூம்புகார் ஒரு சிறு கிராமமாக இருந்த போதே, இதுதான் சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட காவிரிப்பூம்பட்டினம் எனக் கூறி சிலப்பதிகார மாநாட்டிற்கே ஏற்பாடு செய்தவர் இவருடைய தந்தையார் இராம லிங்கம். அப்புறம்தான் அது அரசாங்கத் தின் கண்ணில்பட்டு இன்றைய அழகுநிலையை எய்தியிருக்கிறது.

அழகிய சிலப்பதிகார கலைக்கூடம் எழு நிலை மாடத்தின் மாடலிலும், பாவை மன்ற மும், இலஞ்சி மன்றமும், அந்தப் பக்கம் கடல் கொஞ்சும் கடற்கரையும்.... இங்கே தான் அழகு மயில் மாதவி, கோவலனுடன், எப்போதோ ஒரு காலத்தில்யாழ் மீட்டினள் என நினைக்கும்போது சிலிர்க்கிறது.

மாதவி மட்டுமா, ஏன் கால் காலமாக எத்தனை கதைகள் இந்த மண்ணில். எல் லாமே மணலாய் உதிர்ந்து போயின. நான் மட்டும் நிரந்தரம், நிரந்தரம் என ஆர்ப்பரிக் கும் கடல்.... நாணத்திலே தயங்கி நிற்கும் காவிரி.

* * * * *

''இங்கே மாம்பழ விழா நேத்துதான் நடந் தது. இப்ப வந்திருக்கிறீயே....'' என நீட்டி முழக்கும் கிழவி.

அந்தக் காரைக்கால் அம்மையாரின் கோவிலின் உள்ளே இரண்டடி உயரத்தில் அமைதி பொங்க நிற்கும் அம்மையாரைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கும்போது தூக்கிவாரிப் போடுகிறது.

''அது என்ன மாம்பழ விழா.....''

''ஐயே, இது தெரியாதா? இந்த அம் மாக்கு (காரைக்கால் அம்மையார்) ஐயா கடையிலேந்து ஒரு மாம்பழம் கொடுத்தனுப் பறாரு. அத ஐயா சாப்பாட்டுக்கு மதியம் வர்றதுக்குள்ளே ஒரு சந்நியாசி வாங்கிட்டுப் போயிட்டாரு. புருஷன்காரன் இலைக்கு முன் னாடி உக்காந்துகிட்டு மாம்பழம் கேட்கறான் என்ன செய்வா? சிவனை வேண்டி வாங்கிக் கொடுத்தாளாம்.

# மாம்பழ விழா தெரியுமா?



* திருநள்ளாறு

இது என்னடா, இவ்ளோ சுவையா இருக் கேன்னு இன்னொண்ணு கேட்டாராம். அவரு முன்னாடியே இன்னொண்ணு வுழவும் பயந்து கிட்டாரு. ஓடியே போயிட்டாரு. அப்புறமா வேற பொண்சாதிய கட்டிகிட்டு இந்தம்மா கால்லேயே வுழவும் வெறுத்துப் போச்சு. சிவனைத் தேடிக் கிளம்பிட்டா....''

மீதிக் கதையெல்லாம் விடு. அந்த மாம் பழம் வந்த நாள்னு குறிச்சு செய்வாங்க. அன்னிக்கு அம்மையாரை ஊர்வலமா கொண்டு போய், மாம்பழம் இறைப்பாங்க. அது கிடைச்சு சாப்ட்டா ரொம்பப் புண்ணிய மாம்....''

* * * * *

ஒவ்வொரு புண்ணிய ஸ்தலத்திலும் சுவை யான கதைகள்தான். ஆனால் ஒவ்வொன்றி லும்தான் எத்தனை பெருருள் பொதிந்த தத் துவங்கள்!


நளனைப் பிடித்திருந்த சனி பகவான் வைத் தீஸ்வரனுக்குப் பயந்து கோபுர வாசலிலேயே தங்கிவிட்டாராம். அங்கே பூஜை செய்தால் சனி பிடித்திருப்பவர்களுக்குக் கஷ்டங்கள் குறையுமாம். உள்ளே சென்று தர்ப்பாரண் யேசுவரைப் பார்த்தால் எத்தனை சுகம்பிரம்!

* * * * *

* திருக்கடையூர்



இம்மாத இல்லத்தரசி போட்டியில் பரிசாகத் தரப்பட்ட பாத்திரங்கள்.



அபிராமி பட்டருக்காக தன் காதணியை வீசி அமாவாசையை பௌர்ணமியாக்கிய திருக்கடையூர் அபிராமி சர்வாலங்கார பூஷிதையாகப் புன்னகை புரிகிறார்.

இங்கே அம்மா 'ஸ்ட்ராங்' போல 'ஐயா'வும் பலமானவர்தான். காலசம்ஹார மூர்த்தி அமிர்தகடேசுவரர் மார்கண்டேயனுக்கு என்றும் பதினாறு வரம் கொடுத்த இடமல்லவா?

இந்தப் பக்கக் கோயில்களில் அர்ச்சகர்கள் எத்தனை ஆத்மார்த்தமாக, ஸ்பஷ்டமாகப் பூஜை செய்கிறார்கள்? சந்தோஷமாக இருக்கிறது. கலையும், தெய்வீகமும் மணந்த தஞ்சை மாவட்டமல்லவா?

* * * * *

கலை, தெய்வீகம் மட்டுமல்ல சேவைக்கும் நிற்பது மாயவரம் என்று நிரூபிக்கிறது மாயவரம் ரோட்டரி கிளப்பின் பெண்கள் பகுதியான இன்னர்வீல்.

சுற்றுப்பட்ட கிராமங்களுக்குச் சென்று ஏழை எளிய மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதுடன், ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தகுந்த நிவாரணங்களை அளிக்கிறார்கள். அந்த ஊரில் நல்ல மதிப்பெண்களுடன் தேறும் ஏழைக் குழந்தைகளுக்குக் கல்விக்கான உதவிகளைச் செய்கிறார்கள்.

"இன்னும் என்னென்ன செய்யலாம், சாதாரணமாக மற்ற லேடீஸ் கிளப் போன்றவற்றில் எல்லாம் என்னென்ன செய்கிறார்கள், சொல்லுங்களேன். நாங்களும் செய்ய ஆவலாகக் காத்திருக்கிறோம்...." என்கிறார் இவ்வருடத் தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜீவா ராஜசேகரன்.

* * * * *

அரை மணி என்றது இரண்டு மணி நேரமாக நீண்டு போயும் இன்னும் உரையாடல் பாக்கி நின்றது மாயவரம் லேடீஸ் கிளப்பில். வயதான பெண்மணியிலிருந்து இளைய தலைமுறை வரை அத்தனை பேரும் ஆவலோடு கூடியிருந்தார்கள். மங்கையர் மலரில் குறை சொல்லும்படியாக ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டுப் உபயோகமான குறிப்புகளைத் தந்தார்கள். ஒரு பெண்மணி,

"ஒரு குழந்தை நன்றாக வருவது, வராமல் போவது எல்லாவற்றிற்குமே தாய்தான் காரணம். நாம் இப்படிச் செய், அப்படிச் செய் என்றால் செய்யமாட்டார்கள். நாம் அப்படி நடந்து காட்டினால் தானாகவே பின்பற்ற ஆரம்பிப்பார்கள்.

தினமும் சுவாமிக்கு விளக்கேற்று என்று சொல்லாமல் நீங்கள் விளக்கேற்றிக் கும்பிடுங்கள். பத்தாவது நாள் நீங்கள் சொல்லும் சுலோகம் குழந்தைக்கு மனப்பாடமாகும்!"

என்றார். எத்தனை உண்மையான வார்த்தை.

ஜீவா ராஜசேகரன்







# சமைத்த பண்டங்கள் மிஞ்சி விட்டதா?

நாம் தினமும் சமைக்கும் சாப்பாடு, டிபன் எதையுமே மிஞ்சாமல் கரெக்டாகச் சமைப்பது என்பது கொஞ்சம் சிரமம்தான். சில சமயங்களில் கொஞ்சமாக மிஞ்சும். சில சமயங்களில் நிறையவே மிஞ்சிவிடும். இது ஒரு தடுக்க முடியாத பிரச்னையாக இருக்கிறது பெண்மணிகளுக்கு. விலைவாசி இருக்கும் நிலையில் இதை வீணாக்கலாமா? அதை வைத்துக் கொண்டு எவ்வளவோ செய்யலாமே!

## சாதம்

மிஞ்சிய சாதத்தில் லேசாகத் தண்ணீர் தெளித்து, மறுபடியும் ஒருமுறை வேக வைத்து எடுத்து, அத்துடன் வேண்டிய உப்பு, மிளகாய்ப் பொடி, சீரகம் போட்டு நன்றாகப் பிசைந்து கலக்கவும். இத்துடன் பொடியாகத் துருவிய உருளைக் கிழங்கையும் சேர்த்து கலந்து, சிறிய உருண்டைகளாக உருட்டி வெயிலில் காய வைக்க வேண்டும். நன்றாகக் காய்ந்தவுடன், காற்றுப் புகாத டப்பாவில் போட்டு வைத்துக் கொண்டால், வேண்டிய பொழுது எண்ணெயில் பொரித்துச் சாப்பிட ருசியான டிபனாக இருக்கும்.

2. மிஞ்சிய சாதத்தில் கொஞ்சம் தண்ணீர் சேர்த்து, அத்துடன் வறுத்த பயத்தம் பருப்பு, உப்பு, மிளகு, சீரகம், இஞ்சி, நெய் முதலியவைகளைச் சேர்த்து நன்றாகக் கலந்து, மறுபடியும் குக்கரில் வைத்துப் பொங்கல் போல் செய்தும் சாப்பிடலாம்.

## வேக வைத்த காய்கறி, கூட்டுகள்

1. அலுமினிய வாணலியில் 4 ஸ்பூன் எண்ணெய் விட்டுக் காய்ந்தவுடன், மிஞ்சிய காய்கறி, கூட்டுகளைப் போட்டு, அதிலுள்ள நீர் வற்றும் வரை கிளறவும். அத்துடன் கொஞ்சம்கடலைமாவையும்சேர்த்து,வேண்டுமானால் சிறிது எண்ணெயும் விட்டு,நன்றாகக் கிளறி கெட்டியானவுடன் இறக்கவும். ஆறிய

வுடன் உருண்டைகளாக உருட்டி, தட்டி, தோசைக் கல்லில் எண்ணெய் விட்டு அடைகளாகத் தட்டிக் கொடுக்கலாம்.

வேக வைத்த உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, பட்டாணி முதலியவற்றில் கொஞ்சம் மிளகாய்ப் பொடி போட்டு கலந்து, நன்றாக அழுத்திப் பிசைந்து கொள்ளவும். வேண்டிய அளவு கோதுமை மாவு எடுத்துக் கொண்டு, ஜலம் சேர்த்து, சப்பாத்தி மாவு பிசைந்து கொள்ளவும். பிசைந்த மாவை உருண்டைகளாக உருட்டி, பூரி போல் இட்டு, அதன் நடுவில் கிழங்கு பூரணத்தை வைத்து மூடி, போளி போல் தட்டவும். தோசைக் கல்லில் எண்ணெய் விட்டு, காய்ந்தவுடன், போளிகளை போட்டு சுட்டு எடுக்கவும். அல்லது எண்ணெயால் பொரித்தும் எடுக்கலாம். சாப்பிட கரகரப்பாகவும் ருசியாகவும் இருக்கும்.

3. மிஞ்சிய உருளைக்கிழங்குக் கறியை நன்றாக மசித்துக் கொள்ளவும். 4, 5 ரொட்டித் துண்டங்களைத் தண்ணீரில் அமுக்கி உடனே எடுக்கவும். எடுத்தவுடனேயே, உள்ளங்கையில் வைத்து அமுக்கி, தண்ணீரைப் பிழிந்து எடுக்கவும். இவைகளைக் கிழங்குடன் சேர்த்து, நன்றாகக் கலந்து, வேண்டிய உப்பு, மிளகாய் பொடி போட்டு பிசைந்து கட்லெட்டுகளாகவும் செய்து சாப்பிடலாம்.

## ஊறவைத்த பருப்பு வகைகள்

1. சுண்டலுக்காக ஊற வைத்த பருப்புகள் அதிகமாகி விட்டதா? கவலை வேண்டாம். மிஞ்சிய பருப்பு, தானியங்களில் உள்ள தண்ணீரை வடிகட்டி, அதனுடன் சிறிது உப்பு, காரம் போட்டுக் கலந்து, வாணலியில் வறுத்துச் சாப்பிட கரகரப்பாக இருக்கும்.

2. ஊற வைத்து, மிஞ்சிய பருப்புகளை, ஒரு மெல்லிய துணியில் கட்டி 48 மணி நேரம் வைக்கவும். இதில் முளை கட்டி வரும். இந்த முளை கட்டிய பருப்புகளை நெய்யில் வறுத்து எடுத்து, அதனுடன் உப்பும், மிளகாய்ப் பொடியும் சேர்த்துச் சாப்பிட்டால் ரொம்ப ருசியாக இருக்கும். அதனுடன் உடலுக்கும் ஆரோக்கியமான உணவாகும்.

## சப்பாத்தி

1. காய்ந்த வறண்ட சப்பாத்திகளை, சிறு துண்டங்களாக்கி, வாணலியில் வறுத்து எடுக்கவும். பின்பு மிக்ஸியில் போட்டு நைஸாக பவுடர் பண்ணவும். இந்தப் பவுடரை சல்லடையில் சலித்து எடுத்துக் கொள்ளவும். இத்துடன் ருசிக்கு ஏற்றபடி உப்பு, மிளகாய்ப் பொடி, நெய், தண்ணீர் சேர்த்து, நன்றாய்ப் பிசைந்து, சிறிய சீடைகளாக உருட்டவும். இவைகளைக் காய்ந்த எண்ணெயில் பொரித்து எடுத்துச் சாப்பிடலாம்.

காய்ந்து, வறண்ட மிஞ்சிய சப்பாத்திகளை மேலே கூறியபடி பவுடர் செய்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் விட்டு, அத்துடன் கொஞ்சம் கொஞ்சம் துருவிய தேங்காய்; அரை கோப்பை நெய் விட்டுக் கொதிக்க ஆரம்பித்தவுடன், சப்பாத்திப் பவுடரையும் போட்டு, நன்றாகக் கிளறி, வெந்து ஹல்வா பதம் வந்தவுடன், சர்க்கரையும் சேர்த்து நன்றாகக் கிளறவும். பாத்திரத்தில் ஒட்டாமல், சுருள வந்தவுடன், இறக்கி, ஆற வைத்து, ஹல்வா போல் சாப்பிடவும்.

3. காய்ந்து, மிஞ்சிய சப்பாத்திகளை சிறு துண்டங்களாக செய்யவும். அத்துடன் உப்பு, மிளகாய்ப் பொடி போட்டு, பஜ்ஜி மாவு தயார் செய்து கொள்ளவும். சப்பாத்தி துண்டங்களை இந்த மாவில் தோய்த்து எடுத்து, காய்ந்த எண்ணெயில் போட்டு பொரித்து எடுக்கவும். பஜ்ஜி போல் சாப்பிட ருசியாக இருக்கும்.

ஜானகி சுந்தரம்

## திடீர் மிளகுக் குழம்பு

1 பிடி து. பருப்பு, ½ பிடி கடலை பருப்பு, ¼ பிடி மிளகு தனித்தனியாக வறுத்து (1 ஸ்பூன் நெய் விட்டு வறுக்கவாம்.) 2 மிளகாயும் வறுத்துக் கொண்டு மிக்ஸியில் வெகு நைஸாக அரைத்து வைத்துக் கொள்ளவும். மிளகு குழம்பு செய்ய புளியை ஊறப் போட்டு கரைத்துக்கொண்டு உப்புப் போட்டுக் கொதிக்கும் போது இந்த பவுடரை 2, 3 நிமிடம் தண்ணீரில் பேஸ்டு மாதிரி குழைத்து வைத்துக் கொண்டு புளி ஜலத்தில் கொட்டி கிளறி கொடுத்து 1 ஸ்பூன் ந. எண்ணெய் விட்டு பிறகு இறக்கினால் இதோ மிளகு குழம்பு தயார்.

—சாமா.

எப்பொழுதும் எனக்கு அழகாக, சுத்தமாக, பார்ப்பதற்கு 'ட்ரீம்' மாக இருக்க வேண்டும். நான் மட்டுமல்ல; நான் பார்ப்பவர்கள் அத்தனை பேருமே அந்த மாதிரி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைப்பவள் நான். அதனால்தானோ என்னவோ நான் இந்தத் துறைக்கு வந்திருக்கிறேன்...''

என்கிறார் திருமதி ரீடாலால். புகழ்பெற்ற (ஜெமினி) பார்சன் அபார்ட்மெண்ட்ஸின் 'மேட்மாய்சல்' எனும் 'நாகரீக ஆடைகள்' கடையை வைத்திருக்கிறார். என்ன விசேஷம் இவர் கடையில்?

''நான் 'பதிக்' வேலையை மேக்ஸி, மிடி, கரிதாரில் செய்து தருகிறேன். ஒருவர் ஒரு டிசைனை வாங்குகிறார் என்றால் அதைப் போல இன்னொரு டிசைனை நான் செய்யவும் மாட்டேன். வேறெங்கும் இருக்காது. அந்தக் குறிப்பிட்ட டிசைனை அணியும் பெண் தான் ஒருத்திதான் என்ற பெருமையை நிச்சயம் அவர் பெறலாம்...'' என்கிறார் இவர்.

'ஒருவருக்கே ஒரு டிசைன்' என்ற இந்தக் கொள்கை இவருக்கு எப்படி வந்தது?

நான் பம்பாயில் பிறந்து வளர்ந்தவள். அங்கே டெக்ஸ்டைல்ஸ் டிசைன் படித்து விட்டு புகழ்பெற்ற துணி நிறுவனங்களுக்கு மாடலிங் செய்து கொண்டிருந்தேன். திருமணமாகி சென்னைக்கு வந்த பிறகு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தேன்.

மேல்நாட்டில்தான் இதுபோல 'ஒருவருக்கே ஒரு டிசைன்' தயாரிக்கும் நிறுவனங்கள் இருந்தன. நாமும் அப்படிச் செய்யலாமே எனக் கணவரிடம் சொன்ன போது அவர் என்னை மிகவும் ஊக்கப்படுத்தினார்.

அந்த வகையில் பார்சன் அபார்ட்மெண்ட்ஸில் 'மேட் மாய்சல்' ஆரம்பித்தேன்.

இப்போது இதேபோல நிறுவனங்கள் பலவும் வந்து விட்டன. பரவாயில்லை, போட்டியில்தான் இன்னும் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட வேண்டும் என்ற ஆர்வம் வரும். அது தவிரவும் இப்படி ஒருவருக்கு மட்டுமே ஒரு டிசைனைக் கற்பனை செய்து பலநாள் சிந்தித்துச் செய்வதால் அதற்கேற்ப விலையும் இருக்கும். முன்பெல்லாம் 'அம்மாடி, இவ்வளவு விலையா?' எனப் பிரமித்தவர்கள் இப்போது பல நிறுவனங்களிலும் பார்தது விட்டு 'இவர்களே பரவாயில்லை' என்கிறார்கள்.

அது தவிரவும் இது ஒரு விதத்தில் பெண்களின் சைகாலஜியைப் புரிந்து கொண்டு திருப்தி செய்கிறது எனவும் சொல்லலாம். தன்னிடம் இருப்பது போல அடுத்தவரிடம் இல்லை என்னும் பெருமையே அவர்களை இன்னும் கொஞ்சம் தலைநிமிரச் செய்யும்....''

என்று சிரிக்கிறார் ரீடா. பிரபல மிக்ஸி கம்பெனியின் உரிமையாளர்களில் ஒருவரான லால் தன் மனைவியைப் பற்றிப் பெருமையாகவே சொல்கிறார்:-

# அம்மாதான் கடுமையா இருப்பா!



"ரீடாவுக்கு எல்லாமே சுத்தமா பர்ஃபெக்டா இருக்கணும். இந்த வீட்டோட இன்டீரியர் டெகரேஷனைப் பாத்தே நீங்க புரிஞ்சுக்கலாமே அவன் எத்தனை கலை ரசனையுள்ளவன்னு. இதே கலை ரசனையைத்தான் அவன் நான் தயாரிக்கும் ஆடைகளிலும் காண்பிக்கிறான்..."

ரீடா சிரிக்கிறார்.

"மெட்ராஸ் ரொம்ப பழமை விரும்பி ஊர், உன் டிசைன்ஸ் எல்லாம் அங்க எடுபடாதுன்னாங்க. ஆனா நிறைய பேர் வராங்க. சொன்னா ஆச்சர்யப்படுவீங்க. கோயம்புத்தூர், கொச்சின்லேந்து என் கடைக்காக வந்துட்டுப் போறவங்கள்ளாமே இருக்காங்க..."

"அது சரி. நீங்க புடவைக்கு டிசைன் போடறதில்லே. எல்லாமே மேக்ஸி, மிடி தான். இது நம்ப கலாசாரத்திற்கு எதிரா இருக்கவில்லையா?"

"கலாசாரம் பண்பாடுங்கறது வேற. பாஷன்ங்கறது வேற. பழைய காலத்துலேந்து கலாசாரம் ஒண்ணுத்தான் இருக்கு. ஆனா பாஷன் மாறிட்டுதான் வருது. நம்ப ஊர் சிலைகள்ளாம் கச்சையும், லோஹிப்பும்தான் கட்டியிருக்கு. அப்புறம் ரவிக்கையும் புடவையும் வந்தது. காலத்துக்கு காலம் பாஷன் மாறிட்டு வருது.

பண்பாடோட இருக்கணும்கறதுக்காக பாக்க அழகா, நீட்டா இருக்கக் கூடாதா என்ன? அலங்கோலமா இருக்க வேண்டாம். மேல்நாட்டிலிருந்து பிசினஸ் முறைகள், பார்ட்டி சிஸ்டம், கம்ப்யூட்டர் என நிறைய பின்பற்றுகிறோம். அவர்களுடைய உடைகளிலே நமக்குப் பொருத்தமா இருக்கிற டிசைன்களை ஏன் கவிகரித்துக் கொள்ளக் கூடாது?"

எனக் காரமாகக் கேட்கிறார் இவர்.

சரி, எவ்வளவு தூரம் இவருடைய டிசைன்களை கஸ்டமர்கள் ரசிக்கிறார்கள்?

"இந்தக் கேள்வி ரொம்ப சுவாரசியமானது. கணவனும் மனைவியுமா குறிப்பா இளம் தம்பதியர் வர்றாங்கன்னு வச்சுப் போம். கணவர் ரொம்ப மாடர்னா டிரெஸ்ஸை மனைவிக்கு செலக்ட் செய்கிறார். மனைவியோ கொஞ்சம் கட்டுப்பெட்டியா இருக்கா.

தந்தையும் மகளுமா வந்தாலும் தந்தை மகளுடைய விருப்பப்படி எடுத்துக்கச் சொல்றார். ஆனா தாய் வயதுப் பெண்ணோட வரும் போது கொஞ்சம் கடுமையாத்தான் இருக்கா. ஸ்லீவ் லெஸ் வேணாம், நெக் இவ்வளவு லோவா இருக்கே என்றெல்லாம் சொல்வாங்க.

நான் 'ஜஸ்ட்' எல்லாத்தையும் 'வாட்ச்' செய்துக்கிட்டு சும்மா இருப்பேன்..."

என்று புன்னகைக்கிறார் ரீடாலால்.

(இவர் தயாரித்த உடைகளின் சாம்பிள்களில் சில அடுத்த மாதம்.)

பேட்டி: **ராமேஸ்வரி**

படங்கள்: **பி. ஈ. ரமணன்**

# புதுமையான ஒரு புத்தகாலயம்

பெங்களூர் மகாத்மா காந்தி சாலையில் பெண்களுக்கென்றே பிரத்யேகமாக ஒரு புத்தகக் கடை திறக்கப்பட்டிருக்கிறது.

இதன் பெயர் ஸ்திரீ லேகா.

சினிமா தியேட்டர்களுக்கும், நகைக் கடைக்கும் மத்தியில், அமைதியான, ஒரு சின்ன, ஆனால் விஸ்தாரமான அறையில், ஷெல்பில் புத்தகங்களும், நடுவில் ஒரு சின்ன மேஜையும் நாற்காலியும் போடப்பட்டிருப்பதைப் பார்த்தாலே, உட்கார்ந்து படிக்கலாம் போலவும், மனம் விட்டு யாருடனாவது பேசலாம் போலவும் ஆசையாக இருக்கிறது.


இங்கு போய் சமையல் புத்தகம், எம்ப்ராய்டரி புத்தகம், அல்லது மில்ஸ் அண்டு பூன்ஸ் காதல் கதைப் புத்தகமும் கேட்டால் கிடைக்காது. ஸ்திரீ லேகாவின் லட்சியமே பெண்களை இந்த நிலைக்கு மேலே உயர்த்தி ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதுதான்.

அமெரிக்கா, ஐரோப்பாவிலிருந்து வெளியாகும் பெண்ணுரிமை பற்றிய புத்தகங்களும், இனத்தின் (ஆண், பெண்) காரணமாக வேற்றுமை காட்டாத குழந்தைகள் புத்தகங்களும், கஷ்டப்பட்டு முன்னேறிய பெண்களைப் பற்றிய கதைகளும், இது தவிர மற்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் (அமெரிக்க நீக்ரோ, ஜெர்மன் ஜூ, ரஷ்ய விவசாயி, இந்திய ஹரிஜன் போன்றவர்களின்) சமூகப் போராட்டங்கள் பற்றிய புத்தகங்களும், இவைகளைச் சார்ந்த சில கதைப் புத்தகங்களும் உள்ளன.

பெண்ணுரிமைக்காக, அவர்கள் நலத்திற்காகப் பாடுபடும் 'விமோசனா' என்ற பெங்களூர் பெண்கள் சங்கம் இதை நடத்துகிறது. பெண்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட மற்ற சங்கங்களும் இதை ஆதரிக்கின்றனர்.

**ஜெயா வி. ராமன்**





பருவத்தின் எல்லையில் என் பாசத்துக்குரிய மகள், சங்கடமான இந்தக் காலகட்டத்தில் அந்த இளம் உள்ளம் படும் வேதனை, தாயாகிய எனக்குத் தான் புரியும்.

# "என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித் தர நான் முடிவு செய்தது ஏனென்றால்"..

ஒரு சிறுமியின் வாழ்க்கையில் அவள் வயதுக்கு வரும் காலகட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பயமும், வெட்கமும், தவிப்பும் நிறைந்து, உடலளவில் மட்டுமின்றி மனத்தளவிலும் அவள் பாதிக்கப் படும் நேரமும் அதுதான்.

நான் ஒரு தாய். இந்தக் கால கட்டத்தை அனுபவித்தவள். அதன் சிரமங்களை நன்கு உணர்ந்தவள். குறிப்பிட்ட அந்த ஐந்து நாட்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படும் சங்கடமும் தொல்லையும் எனக்கு நன்றாகவே தெரியும்.

**இத்தனை வருடங்களாக, சானிடரி பாதுகாப்புக்குத் தேவையானதை நான் வீட்டிலேயேதான் தயாரித்துக் கொள்வேன். அது மிகவும் தர்மசங்கடமான வேலைதான்!**

மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காக நன்றாகத் துவைத்து, காயப்போட்டு.. போதும் போதும் என்றாகி விடும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குக் கூட நமது 5 நாள் பிரச்னை விளம்பரப்படுத்தப்பட்டு விடும். இத்தனை அவஸ்தைப் பட்டாலும்,

நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

**ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது... பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.**

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது கேர்ஃப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே என் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நான் வளர்ந்த காலம் வேறு. என் மகள் வளரும் சூழ்நிலை வேறு இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடிதுடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக... மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருககிறது... படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி. நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்ஃப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்ஃப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது.

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.

ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின் மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்ஃப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

**கேர்ஃப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.**

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்ஃப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்ஃப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அதை நாம் வேண்டாம் என்று ஒதுக்குவானேன்?




கிடைக்கிறது. 10 உள்ள பேக் மற்றும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்குகளிலும்
தனியும் கிடைக்கிறது. கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ் 10 உள்ள பேக்கில்

*கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்— பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு —மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.*

Johnson & Johnson



# ஹாக்கிக்கு ஒரு தவச்செல்வி

முருகப்பா தங்கக் கோப்பை இறுதி ஆட்டத்தன்று தமிழக ஹாக்கி பெண் குழு படே படே ஹாக்கி ஆட்டக்காரர்களான பீட்டர்ஸ், கௌஸ் அடங்கிய குழுவினரோடு ஆடியதைக் கண்டு மூக்கில் விரல் வைத்தனர் ஹாக்கி ரஸிகர்கள்.

காப்டன் குமாரி ஈ. எச். தவச்செல்வி ராஜை மாட்சு முடிந்ததும் பார்த்து வாழ்த்துக் கூறிய போது. அவரது விளையாட்டுத் திறமை பற்றிப் பல ருசிகரமான தகவல்கள் கிடைத்தன. அவருக்கு ஹாக்கியில் எப்படி ஆர்வம் ஏற்பட்டது என்று கேட்ட போது—

"எனது தாத்தா தங்கசாமி பிரபலமான ஹாக்கி ஆட்டக்காரர். இளமையிலேயே ஹாக்கி ஆட்டத்திலே எனக்கு விருப்பம் உண்டு. பெண்கள் கிறிஸ்துவக் கல்லூரியில் பயிலும் போது ஹாக்கி ஆட்டத்தில் தீவிர கவனம் செலுத்தினேன். 'கோல் கீப்பிங்' கலையில் தேறுவதற்கு எனது ஹாக்கி ஆட்டத்துக்குப் பயிற்சியாளர் வேணுகோபால் ஊக்கம் கொடுத்தார். இந்தியாவிலுள்ள அனைத்து சர்வகலா சாலைகளுக்கான ஹாக்கி குழுவில் இடம் பெற்ற ஒரே தமிழக ஆட்டக்காரி — பாக்கியசாலி நான். தமிழகப் பெண்கள் ராஜ்யப் போட்டியிலும் பங்கு பெற்றேன். மாவட்ட ஹாக்கிப் போட்டியில் எங்கள் குழுவே வெற்றி பெற்றது. நான் கோல் கீப்பர். வெற்றியும் தோல்வியும் என் தலைப் பொறுப்பு ஆயிற்றே!" என்கிறார் தவச்செல்வி.

"உங்களுக்கு ஆண்களோடு ஹாக்கி ஆடும் போது தயக்கமோ, பயமோ இருக்கிறதா?"

"நான் ஆவடி ஹெவி சைக்கிள்' தொழிற்சாலை கேந்திரிய வித்தியாலயாவில் பயிலும் போது எங்களுக்கு **'Co-Education'** வாலிபால் போன்ற ஆட்டத்தில் ஆண்களுடன் போட்டியிட வாய்ப்புக் கிடைத்தது. ஒலிம்பிக் கோல் கீப்பர் சார்லஸ் கார்னிலியஸ் ஹாக்கி நுணுக்கங்களைக் கற்றுத் தந்ததோடு, தைரியமாக ஆண்களோடு ஆடும் ஊக்கத்தையும் பெற்றுத் தந்தார். அதனால் நீங்கள் சொல்லும் அந்தப் பிரச்னை எனக்கு நினைவுக்கே வருவதில்லை..."

சென்னை மாநிலக் கல்லூரியில் எம். ஏ. (பொது நிர்வாகம்) பயிலும் தவச்செல்விக்கு ஹாக்கி என்றால் அளவற்ற ஆசை. சர்வதேசப் போட்டிகளிலும் பங்கேற்கும் வாய்ப்பு தமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இவருக்கு உண்டு.

குமாரி தவச்செல்வியின் சாதனைப் பட்டியல் 1982—லிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகள் சென்னைப் பல்கலைக்கழகத்திற்காக ஆடிய பெருமை இவருக்கு உண்டு. 1984—ம் ஆண்டில் தமிழகப் பெண்கள் ஹாக்கி ஆட்டக் குழுவில் இடம் பெற்றார். 1985—ம் வருஷம் அனைத்து சர்வகலாசாலைகளுக்கான ஹாக்கிக் குழுவில் அங்கம் வகிக்கும் தனிச் சிறப்பு கிடைத்தது.

உடலை 'ஸ்லிம்'மாகப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்வதோடு ஹாக்கிப் பயிற்சியில் விடாமல் ஈடுபடும் குமாரி தவச்செல்வி ராஜு சர்வதேச ஹாக்கிப் போட்டிகளில் கலந்து கொள்ளும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்.

பேட்டி:—பி. எஸ். மணி.



6

# எரிவாயுப் போட்டி

இம்மாதத்துடன் எரிவாயுப் போட்டி முடிவடைகிறது என்றுதான் நினைத்தோம். ரூ 6,000/-த்துக்கும் மேற்பட்ட பரிசுகளை வழங்கிய அகில இந்திய எரிவாயுப் போட்டி விநியோகஸ்தர்கள் சங்கமும், அகில இந்திய எரிவாயு பயன்படுத்துவோர் சங்கமும், ஒரு சிறப்புப் பரிசையும் தர முடிவு செய்துள்ளது. அதற்கான அறிவிப்பை முதல் பக்கத்தில் பார்த்திருப்பீர்கள்.

**ஜூலை மாத எரிவாயுப் போட்டியில் பரிசு பெறுபவர்கள்:—**

இரு பர்னர் ஸ்டவ் — முதல் பரிசு பெறுபவர்:

திருமதி ஆர். ஜெயந்தி,
55, பஜனை கோவில் தெரு,
திண்டிவனம்.

ஒரு பர்னர் ஸ்டவ் — இரண்டாம் பரிசு பெறுபவர்:

திருமதி லதா ரகுபதி,
16/69 தெப்பக்குளம் தெரு. நெ. 4.
கோயம்புத்தூர்— 641 001.



**இருபது ரப்பர் இணைப்புக் குழாய்களைப் பரிசு பெறுபவர்கள்:—**

1. கீதா நடராஜன், சென்னை—4.
2. எஸ். அம்பாலட்சுமி, பம்பாய்—3.
3. பானுமதி சுப்பிரமணியன், சென்னை—88.
4. வி. ராஜலட்சுமி, ஈரோடு.
5. ராஜலட்சுமி ராகவன், திருவனந்தபுரம்—8.
6. வி. கமலா மச்சர், தர்மபுரி—5.
7. கீதா ஹரி, கோவை—3.
8. ராஜிமோகன், சென்னை—87.
9. ரேவதி நாராயணசாஸ்திரி, பெரியகுளம்.
10. ராஜலட்சுமி, தூத்துக்குடி—3.
11. கே. முத்துலட்சுமி மூர்த்தி, மயிலாடுதுறை.
12. கமலா சுந்தரம், சென்னை—53.
13. எஸ். பத்மாவதி, சென்னை—93.
14. கல்யாணி, சென்னை—44.
15. ஆர். சாவித்ரி, கோவை—22.
16. லலிதா பாஸ்கரன், சென்னை—34.
17. பத்மினி துரை, புளியம்பட்டி.
18. என். ருக்மணி, சென்னை—2.
19. ஜெயந்தி ஜெயராமன், கொச்சின்—11.
20. விக்டோரியா தாஸ். குன்னூர்.

**ஆகஸ்டு மாத எரிவாயுப் போட்டி**

இங்கு தரப்பட்டுள்ள கேள்விகளுக்கான பதில்களை ஓரிரு வரிகளில் சுருக்கமாக, எரிவாயுக் கூப்பனுடன் அனுப்பி வையுங்கள்.

முதல் பரிசு: இரண்டு பர்னர் ஸ்டவ்
இரண்டாம் பரிசு: ஒரு பர்னர் ஸ்டவ்
மூன்றாம் பரிசு: இருபது பேருக்கு இருபது ரப்பர் இணைப்புக் குழாய்கள்.

**ஆகஸ்ட் மாத எரிவாயுப் போட்டிக்கான கேள்விகள்:**

1. இணைப்பு ரப்பர் குழாய் எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்?
2. ஸ்டவ் சில சமயம் கீழ்ப் பகுதியில் எரியும், ஏன்?
3. அதைச் சரி செய்ய என்ன செய்ய வேண்டும்.

4. ஸ்டவ்வை அடிக்கடி கழற்றி சுத்தப் படுத்தலாமா?

5. எப்படிச் சுத்தப்படுத்த வேண்டும்?

6. வேறு ஊருக்கு மாற்றலாகிப் போகும் போது சிலிண்டரை என்ன செய்யலாம்?

7. ஒருவரின் சிலிண்டரை மற்றவர் உபயோகப்படுத்தலாமா?

8. ஒவ்வொரு சிலிண்டரிலும் கடைசியில் கொஞ்சம் எரிவாயு மிச்சமிருக்குமாமே, உண்மையா?

9. ஆம் (அல்லது) இல்லை என்னும் இந்த பதில்களுக்கான காரணம்?

10. தமிழகம் முழுவதும் எரிவாயுவை கவனமாகப் பயன்படுத்துவது எப்படி என 'Safety Clinic' நடத்தி வருபவர்கள் யார்?

## ஜூலை மாதக் கேள்விகளுக்கான பதில்கள்

1. வெடிக்காது; 2. வால்வு சில சமயம் பொருந்துவதில்லை வேறு வேறு கம்பெனிகளில் வாங்குவதால்; 3. மெகானிக்கைக் கூப்பிட வேண்டும்; 4. காஸின் அழுத்தத்தை சாதா ரப்பர் டியூபால் தாங்க இயலாது; 5. விரிசல், கசிவு ஏற்படும்; 6. தூசு, அழுக்கு சேரும்; 7. சத்து வீணாகாது; சீக்கிரம் சமையல் ஆகும்; 8. அழுத்தம் அதிகமாவதால்; 9. சத்து வீணாகிறது; 10. இல்லை.

### எரிவாயுப் போட்டி கூபன்

இத்துடன் ஆகஸ்ட் மாத எரிவாயுப் போட்டிக் கேள்விகளுக்கான பதில்களை அனுப்பி உள்ளேன். என்னுடைய முகவரி:

.....................................................................

.....................................................................

.....................................................................

கையெழுத்து

## சொல்ல விரும்புகிறோம்

* சனிக்கிழமை அரசு விடுமுறை சரியோ! தவறோ! அது பிரச்னை இல்லை. ஆனால் வளரும் குழந்தைகளின் (எல். கே. ஜி போன்றவை) பள்ளி அவசியம் சனிக்கிழமை இருக்க வேண்டும். தினமும், 'அம்மா, நீ ஸ்கூலுக்கு அழைச்சிண்டு போ' என்று அழும் குழந்தைகளுக்கு சனிக்கிழமை பள்ளி வைத்தால் என் போன்ற வேலைக்குப் போகும் தாய்மார்களுக்கு வசதியாக இருக்கும். அதே சமயம் சனிக்கிழமை குழந்தையை பள்ளிக்குக் கொண்டு போய் விட்டு விட்டு அழைத்து வருவதால் அவர்கள் டீச்சரிடம் குழந்தைகள் எப்படிப் படிக்கிறார்கள் என்றும் தெரிந்து கொள்ளலாம்.

சென்னை — 53. பவானி வாலாம்பாள்

* எல்லைகளின் விளிம்பில் மிக விறுவிறுப்புடன் செல்கின்றது. அதன் தெளிந்த நடை தொடருக்கு ஒரு ப்ளஸ் பாயிண்ட்.

காரைக்குடி. எஸ். பிரபா.

* நாடாளுமன்ற நடவடிக்கைச் செயலமைச்சர் திருமதி மார்கரெட் ஆல்வா பெண்களின் பிரச்னைகளை பற்றி மிகவும் ஆழ்ந்த ரீதியில் சிந்தித்து தீர்க்கமான கருத்து முத்துக்களைச் சிந்தியுள்ளார். இங்கு சமீபத்தில் இண்டியன் கவுன்சில் ஆப் எஜுகேஷன் மாநாட்டில் பெண்களின் கல்வி முன்னேற்றத்தைப் பற்றிய அவரது ஆணித்தரமான கருத்தும் பெண்களின் பிரச்னைகளைத் தீர்க்க அதைப் பெண்களின் பிரச்னைகளாக இல்லாமல் சமுதாய பிரச்னையாக நினைத்து களைவதற்கான வழி வகைகளை ஆலோசிக்க வேண்டும் என்று ஹிந்தியில் குறிப்பிட்ட போது அவரது கருத்துக்கள் தமிழகத்தை எட்ட வேண்டுமே என்ற எனது ஆதங்கத்தை மங்கையர் மலர் தீர்த்துவிட்டது.

புதுதில்லி — 19. சுதமதி.

* இப்போதே பெண்களைப் பெற்றெடுத்த பெற்றோர்கள், வரதட்சணைக் கொடுமையினாலும், சரியாக சீர்வரிசை கொடுக்காததால் பெண்களை வாட்டும் ஆண்களையும், மாமியார்களையும் கண்டு அஞ்சி அஞ்சி கல்யாணம் செய்கிறார்கள். 'இவளுக்கு என்ன விலை?' சம்பவத்தைப் படித்தால் நம் தாய்மார்களும், தந்தைமார்களும் இன்னும் விழிப்படைவார்கள். பெண்களை ஏமாற்றும் கயவர்கள் நம் நாட்டில் இருக்கும்வரை நம் நாடு மேன்மை அடையாது என்று கூறிக் கொள்கின்றேன்.

வேலூர். டி. பி. தேவிகா பார்த்தசாரதி.

* 'உங்கள் மகளைக் கொஞ்சம் கவனியுங்கள்' பேட்டிக் கட்டுரை மிகவும் அருமை. பெண்களுக்கே பெண்களைப் பற்றித் தெரியாத பல உண்மைகளை தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. டாக்டர் கூறிய அறிவுரைகளை பள்ளிகள் கடைபிடித்தால் பல தாய்மார்களுக்குக் கவலை குறையும். பல உபயோகமான அறிவுரைகளைக் கூறிய டாக்டர் யசோதா பாராட்டுக்குரியவர்.

விழுப்புரம். கே. வி. துளசிபாய்.



# எலக்ட்ரிக் பில் ஷாக் அடிக்கிறதா?

இல்லத் தலைவியை விழி பிதுங்க வைப்பதில் 'மின்சார பில்'லும் சேர்ந்து கொள்கிறது. 'ஸ்விட்சை' ஆன் ஆஃப் செய்வதோடு நின்று விடாமல் நாம் உபயோகிக்கும் மின்சார சாதனங்களால் எவ்வளவு யூனிட் செலவாகிறது எனத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளது. இல்லத்தரசிகள் வெட்டி வைத்துக் கொள்ளலாம்.



வளர்ந்து கொண்டிருந்த உலக முன்னேற்றம், சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தது மின்விசை கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான். மின்விசை மனிதனின் சேவகன் என்ற காலம் போய், இன்று நாம் அதற்கு அடிமையாகி நிற்கிறோம். அது இல்லாமல் ஒரு வினாடி கூட இன்று வாழ்வில்லை. மிக்ஸி முதல் மின்ரயில் வரை, விளக்கு, விசிறி, இஸ்திரிப் பெட்டி முதல் டேப் ரிக்கார்டர், டீ.வி வரை, எங்கும் அதன் ஆதிக்கம்தான்.

இத்தனை மின் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் மனிதனுக்கு மின்சாரத் தேவை அதிகம். ஆனால் மின் உற்பத்தியோ மிகக் குறைவு. விளைவு 'பவர்கட்'! நீர்மின் நிலையங்களில் ஆண்டு முழுவதும் உற்பத்தி ஒரு சீராக இருப்பதில்லை. காரணம், இது மழையின் அளவையும், நீரின் தேக்கத்தையும் பொறுத்தது. அனல் மின் நிலையங்களும், முழுத்திறனில் இயங்குவதில்லை. சில இயங்குவதே இல்லை. ஆக ஏதோ ஓரிரு மாநிலங்கள் தவிர, மற்ற எல்லாமே 'பற்றாக்குறை மாநிலங்கள்' ஆகி, இது ஒரு தேசியப் பிரச்னையாக உருவெடுத்து அச்சுறுத்துகிறது. எல்லாரும் தவிப்பது போல, இல்லத்தரசியும் தன் பங்குக்குத் தானும் தவிக்கிறாள்.

ஸ்விட்சை ஆன், ஆஃப் செய்வதுடன் திருப்தி அடைந்து விடாமல், தான் உபயோகிக்கும் மின் உபகரணங்களைப் பற்றியும், அவைகளைச் சிக்கனமாக உபயோகிப்பது எப்படி என்றும் சிறிது தெரிந்து கொண்டால் ஏறும் மின் பில்லை சற்றுப் பின் இழுக்கலாம்.

மூன்று ரூம்கள் கொண்ட ஒரு சிறிய குடும்பத்தில் மாதம் நூறு யூனிட்கள் ஆகலாம். (இதில் விளக்குகள், விசிறிகள், டீ.வி., மிக்ஸி, இஸ்திரிப் பெட்டி, எப்போதாவது மின் ஹீட்டர் எல்லாம் அடைக்கலம்.) ஆக மாதம் 'சக்தி'யின் பில் மட்டும் ரூ. 150—200 ஆகிறது. எத்தனை மத்தியதரக் குடும்பங்களில் இதைத் தாக்குப் பிடிக்க இயலும்?

ஆகையால் குடும்பத் தலைவிக்கு சக்தியைச் சமாளிக்கத் தெரிந்தே ஆக வேண்டும். கண் மூடித்தனமாக மாதம் முழுவதும் மின் செலவு செய்து, மீட்டர் ரீடிங் எடுக்க வரும் போது, 'இவ்வளவு எப்படி ஏறிற்று' என்று வேதனைப்படுவதிலோ, 'கரண்ட் எங்கோ 'லீக்' ஆகிறது' என்றோ, 'எதிர் வீட்டு கரண்டு நம் மீட்டரில் ஏறுகிறது' என்றோ ஐயப்படுவதில் அர்த்தமில்லை. தோராயமாக இவ்வளவு கரண்டு நம் வீட்டுக்கு செலவாகலாம் என்று சின்னக் கணக்குப் போடக் கற்றுக் கொள்ளுங்கள். பிறகு சவாலை சமாளிப்பதோ, சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதோ எளிது.

கணக்கு ரொம்ப சிம்பிள். நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதெல்லாம் ஒரு யூனிட் என்பது 'ஆயிரம் வாட்'டை ஒரு மணி நேரத்தில் செலவிடும் சக்தி என்பதுதான்.

அடுத்தது எத்தனை யூனிட்டுகள் என்று கணக்கிட உங்கள் மிஷின் (அ) பல்ப் (அ) டீ. வி. எத்தனை வாட் உபயோகிக்கிறதோ அதை உபயோகிக்கும் நேரத்துடன் (மணிகளில்) பெருக்கவும். பெருக்கிவந்த தொகையை ஆயிரத்தால் வகுக்கவும். கிடைப்பது யூனிட்கள்.

ஒரு சின்ன உதாரணம். உங்கள் டீ.வி. '250 வாட்' என்று வைத்துக் கொள்ளுங்கள். தினமும் அது சராசரி நான்கு மணி நேரம் வேலை செய்வதாக வைத்துக் கொள்ளுங்கள். 250—ஐ நான்கால் பெருக்கினால் கிடைப்பது



ஆயிரம். இதை ஆயிரத்தால் வகுத்தால் கிடைப்பது ஒன்று. அதாவது ஒரு யூனிட். முப்பது நாளில் செலவு 30 யூனிட்

அடுத்தது சற்று வித்தியாசமான உதாரணம். ஹாலில் 100 வாட் பல்பும், கிச்சனில் 60 வாட் பல்பும், பெட்ரூமில் 40 வாட் பல்பும் போட்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். தினமும் இவை சராசரி நான்கு மணிநேரம் எரிவதாய் வைத்துக் கொள்ளலாம். மூன்றும் சேர்ந்து ஒரு மணி நேரத்தில் 100 + 60 + 40 = 200 வாட் சக்தி செலவழிக்கும். நான்கு மணியில் 200 X 4 = 800 'வாட்'கள். 30 நாட்களில் 800 X 30 = 24,000 'வாட்'கள். இதை ஆயிரத்தால் வகுத்தால் கிடைப்பது 24 யூனிட்டுகள்.

ஆக. ஒரு டீ.வி., 100, 60, 40 வாட் பல்புகள் மூன்று. தினமும் நான்கு மணி உபயோகித்தால் உங்கள் மீட்டரில் 30 + 24 = 54 யூனிட்டுகள் ஏறி இருக்க வேண்டும். அதாவது 50—60 யூனிட்டுகள் காண்பித்தால் ரொம்பவே கரெக்ட். இன்னும் சற்று ஏறக்குறைய இருந்தால் கூடப் பரவாயில்லை. ஆனால் 30 யூனிட்டுகள் காண்பித்தாலோ, 80 யூனிட்டுகள் காண்பித்தாலோ, ஓடுங்கள் எலக்டிரிக் டிபார்ட்மெண்ட்டுக்குக் கம்ப்ளெயிண்ட் கொடுக்க!

அடுத்தது எந்த மிஷின் எவ்வளவு கரண்ட் 'சாப்பிடுகிறது' என்பதை நீங்கள் தெரிந்து கொண்டால்தான், அவைகளின் மின் செலவு பில்களைப்பற்றி பிளான் பண்ணி கண்ட்ரோல் செய்ய இயலும். நான் மேலே சொன்னது போலக் கணக்குச் செய்வது சுலபம். அதையே மாற்று முறையாக, ஒரு யூனிட் உபயோகிக்க எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளும் என்றும் கணக்கிடலாம். இந்த சார்ட்டை வெட்டி எடுத்து வைத்துக் கொள்ளவும்.

இவை தவிர, வீட்டு உபயோகத்துக்காக சில மோட்டார்களும் (தையல் மிஷின், கிணற்றிலிருந்து மேலே 'டாங்'குக்குத் தண்ணீர் 'பம்ப்' செய்ய, போன்றவை) பயன்படுகின்றன. இவற்றின் வாட்டேஜ் குதிரை சக்தியில் (ஹார்ஸ் பவரில்) குறிப்பிடப்பட்டிருக்கலாம். ஒரு ஹெச்.பி. (ஹார்ஸ் பவர்) என்பது 750 வாட் சக்தியைக் குறிக்கும். மற்றபடி கணக்கு ஒரே மாதிரிதான். (அதாவது ஒரு யூனிட்டுக்கு 1 மணி 20 நிமிடம்). இனி மின் சக்திக்காகச் செலவிடும் பணத்தில் கூடுமான வரை சேமிக்கும் வழிகளைக் காண்போம்.

வயோதிகர்கள், வாத நோய்க்காரர்கள் தவிர, மற்றவர்கள் வெந்நீரில் குளிப்பதைக் கைவிடவும். வடநாட்டில் குளிர் கால மூன்று மாதங்கள் தவிர மற்ற ஒன்பது மாதங்களிலும் எல்லோரும் பச்சைத் தண்ணீரில்தான் குளிக்கிறார்கள். தென்னாட்டிலும், கிராமவாசிகள், குளங்களிலும் ஏரி, கிணறு, நதிகளிலும் தண்ணீரில்தான் குளிக்கின்றனர். வெந்நீர் என்பது, அதிகப்படியான ஒரு பழக்க தோஷமே தவிர வேறில்லை.

டேபிள் லாம்ப்களுக்கு அதிகபட்சம் 40 வாட், சிறிய ரூம்களுக்கு 60 வாட், பெரிய ஹாலுக்கு 100 வாட் பல்புகள் போதும். அதிகம் வெளிச்சத்திலிருந்து பழக்கப் பட்டு விட்டால், பிறகு கம்மி வெளிச்சத்தில் வேலை செய்ய இயலாது. பிரகாசமான பல்பை உபயோகிப்பது, கண்ணுக்கும் கெடுதல், பணத்துக்கும் கேடு.

பாத்ரூம், லெட்ரின், நைட் லாம்ப் ஆகியவைகளுக்கு 'பூஜ்ய' வாட் பல்பு போதும். (பூஜ்ய வாட் என்பது உண்மையில் 5, 10 வாட்டாவது உபயோகிக்கிறது. பூஜ்ய சக்தி என்பது நடைமுறையில் சாத்தியமல்ல.)

நம் நாட்டில் எலிமெண்டுகள தரக் குறைவுக்குப் பேர் போனவை. மிகவும் அவசரமான சமயத்தில் காலை வாரி விடுவது அவைகளின் பொழுது போக்கு. ப்ளவுஸின் ஒரு கையை இஸ்திரி போட்டபின், இன்னொரு கையைப் போடுவதற்குள் பெட்டியிலுள்ளே 'கிர்ர்' என்றுஓசை கேட்கும். அவ்வளவுதான். எலிமெண்ட் கட். எலக்டிரிக் கெட்டில்களும் அப்படியே. விருந்தாளிகளுக்குக். காப்பி போடும்போது ஜலம் கொதிப்பதற்குள் உள்ளே 'பர்ர்' ...ஓசை தீர்ந்தது. வேறு அடுப்பு மூட்ட வேண்டியதுதான். இந்த இக்கட்டைச் சமாளிக்க ஒரு 'எக்ஸ்ட்ரா' எலிமெண்டைத் தயாராக வைத்துக் கொள்ளவும்.

ஒரு நூறு வாட் பல்பு கொடுக்கும் வெளிச்சத்தை ஒரு 40 வாட் ட்யூப் லைட் கொடுக்கிறது என்பது என்னவோ உண்மை. ஆனால் ஒரு ட்யூப் லைட் ஃபிக்ஸ் பண்ண முதலில் ரூ. 100 செலவழிகிறது. பல்புகளைப் போல ட்யூப் லைட்களும்தான் அடிக்கடி 'ப்யூஸ்' ஆகிவிடுகின்றன. பல்பின் விலை நான்கு ரூபாய். ட்யூபின் விலை நாற்பது ரூபாய். எந்தச் சிக்கனமும் இதில் அடிபட்டுப் போய் விடுகிறது. குளிர்ச்சியான, நிழல் விழாத வெளிச்சம் என்பதுதான் ட்யூப் லைட்டின் ஆதாயம்.

பழைய மாடல் மின் விசிறி ரெகுலேட்டர்களில், ஃபான் மெதுவாக சுழன்றாலும், வேகமாகச் சுழன்றாலும், கரண்ட் செலவு ஒன்றுதான். ஆனால் இப்போது வரும் எலக்ட்ரானிக் ரெகுலேட்டர்களில் ஃபான் சுழலுவதற்கேற்ப கரண்ட் செலவாகிறது என்பதையும் அறியவும்.

ரூமை விட்டு வெளிவரும்போதே விளக்கையும் ஃபானையும் கையோடு அணைத்து விட்டு வரும் பழக்கத்தை வீட்டில் எல்லோரும் கைக்கொள்ள வேண்டும். ஹாலில் ஒரே ஒரு நூறு வாட் பல்பில் குழந்தைகளும் எழுதிப் படிக்கலாம், தந்தையும் பேப்பர் படிக்கலாம், அக்காவும் இஸ்திரி செய்யலாம். அன்னையும் தையல் தைக்கலாம். ஒவ்வொரு ரூமில் ஒவ்வொருவர் ஒவ்வொரு காரியம் எதற்காகச் செய்ய வேண்டும்?

மின்சக்தி சிக்கனம் என்பது, இன்று வீட்டுக்கு அத்தியாவசியமான தேவை. அதைவிட, முக்கியம், இது நாட்டுக்கே சேவை!

எஸ்.டி. ராகவன்

| மின்சாதனத்தின் பெயர் | எத்தனை 'வாட்' உபயோகிக்கிறது | ஒரு யூனிட் உபயோகிக்கத் தேவையான நேரம். மணி | நிமிடம் |
|---|---|---|---|
| கெய்ஸர் (சுடு தண்ணீருக்காக) | 3000 | 0 | 20 |
| குக்கிங் ரேஞ்ஜ் (மின் சமையல் அடுப்பு) | 2000 | 0 | 30 |
| ஹாட்பிளேட் அல்லது இஸ்திரிப் பெட்டி (பெரியது) | 1000 | 1 | 00 |
| இஸ்திரிப்பெட்டி (மீடியம்)—(நடுத்தரம்) | 750 | 1 | 20 |
| 500 W பல்பு அல்லது இஸ்திரிப்பெட்டி (சிறியது) | 500 | 2 | 00 |
| டி. வி. பெரியது (டேபிள் மாடல்) | 250 | 4 | 00 |
| டி. வி. சிறியது (போர்ட்டபிள்) | 150 | 6 | 40 |
| 100 W பல்ப் | 100 | 10 | 00 |
| 60 W பல்ப் அல்லது 48'' சீலிங் விசிறி (பெரிய சைஸ்) | 60 | 16 | 40 |
| ட்யூப் லைட் (அ) 36'' சீலிங் விசிறி (சிறிய சைஸ்) | 40 | 25 | 00 |
| ஏர்கண்டிஷனர் (1 டன்) | — | 0 | 40 |
| ஏர்கண்டிஷனர் (1½ டன்) | — | 0 | 30 |
| ப்ரிட்ஜ் (சிறிய சைஸ்)—மாதம் 40 யூனிட்டுகள் (தினமும் 1½ யூனிட்டுகள்) (தோராயமாக) | | | |
| ப்ரிட்ஜ் (பெரிய சைஸ்)—மாதம் 70 யூனிட்டுகள் (தினமும் 2½ யூனிட்டுகள்) (தோராயமாக) | | | |

# லாலாவின் புதிய சுலபமுறை சாம்பார் பவுடருக்கு நன்றி!

சுவையான சாம்பார்
தயாரிக்க அதிக நேரமா ?

தேவையே இல்லை. இதோ...
லாலாவின் புதிய சுலபமுறை
சாம்பார் பவுடரால்
நொடியில் சுவையான
சாம்பார் நம் முன்னால்.

சாம்பாருக்குத் தேவையான
சகல பொருட்களும்
லாலாவுக்கே உரித்தான
முறையில் சரியான விகிதத்
தில் அடங்கியுள்ளன—புளி
உட்பட. ஊறவைத்து,
கரைத்து பிழியும் நேரமும்
மிச்சம்.

வேகவைத்த பருப்புடன்
லாலாவின் சாம்பார் பவுடரை
கலந்துவிட்டு - இரண்டு
கொதிப்பிற்குப் பின் அடுப்பி
லிருந்து இறக்கினால் மீண்டும்
மீண்டும் சாப்பிடத்தூண்டும்
சாம்பார் தயார்.

சமையலறையில் முடங்கிக்
கிடக்கவேண்டிய வேதனை
இல்லை. சந்தோஷமான
நேரத்திற்கும் குறைவு இல்லை.

---

மேலும் லாலாவின்
மசாலா பவுடர், ரசம் பவுடர்
மற்றும் மிளகாய்ப் பொடி
இவைகளும் கிடைக்கிறது.

---

**லாலாவின் புதிய சுலபமுறை சாம்பார் பவுடர் நாவில் தங்கிடும் ருசி.**

---

பாரம்பரிய சுவைக்கு — *லாலாஸ்*

---



# சீதனம் பெண்களுக்கே உரியது



ஒரு கணவன், தன் மனைவி, பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வரும் சீதனத்தை அபகரித்தாலோ, அல்லது மணமுறிவு ஏற்பட்டு, மனைவி கணவன் வீட்டை விட்டு வெளியேறும் போது திருப்பிக் கொடுக்க மறுத்தாலோ அது நம்பிக்கை துரோகம். சட்டத்தின்படி அது கிரிமினல் குற்றம் என்று இந்திய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது. இத்தீர்ப்பு, இந்தியப் பெண்கள் வரலாற்றிலே ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்திருக்கிறது என்று கூறலாம்.

வரதட்சிணை பெற்றுக் கொள்வது சட்டப்படி குற்றமாக்கப்பட்டாலும் இன்னமும் இந்த வழக்கம் இருந்து வருகிறது. ரொக்கப் பணமாகக் கேட்காமல் பிரிட்ஜ், கிரைண்டர், டி. வி., ஸ்கூட்டர் போன்று சாமான்களாகப் பெற்றுக் கொள்கிறார்கள் பிள்ளை வீட்டார். மணமுறிவு ஏற்பட்டு, மனைவி தன் பிறந்த வீடு செல்லும் போது, அவள் கொண்டு வந்த பொருட்களையெல்லாம், திருப்பிக் கொடுக்காமலேயே, அவளை விரட்டியடிக்கின்றனர். ஆகவே, பெரும்பாலும் கட்டிய புடவையோடுதான் பெண்கள் திரும்பி வருகிறார்கள்.

பெற்றோர்கள் இருந்தால் சரி, அவ்வாறு திரும்பி வந்த பெண்களைத் தம்மால் இயன்ற அளவு காப்பாற்றுவார்கள். ஆனால் கூடப் பிறந்த சகோதர, சகோதரிகள் மட்டும் இருந்தால் இப்படிப்பட்ட பெண்களின் கதி அதோ கதிதான்.

கூட்டுக் குடும்பமாக இருந்த காலத்தில். வாழாவெட்டியாக வரும், சகோதரியை வைத்துப் பராமரிக்கும் பழக்கம் இருந்தது. கூட்டுக் குடும்பம் உடைந்து விட்ட இந்தக் காலத்தில் வாழாவெட்டி சகோதரியின் நிலை பெரிய கேள்விக் குறி. மேலும் வேலை பார்க்காத பெண்ணாக இருந்து விட்டால்நினைத்துப் பார்க்கவே முடியாத அவஸ்தை. கொண்டு போன சீதனப் பொருள்களை அவளால் திரும்பப் பெற முடிந்தால், அப்பொருள்களை விற்றுப் பணமாக்கி ஓரளவு சமாளிக்கலாம்.

இந்த வகையில், அண்மையில் நாட்டின் மிகப் பெரிய நீதி மன்றமாகிய சுப்ரீம் கோர்ட் அளித்திருக்கும் தீர்ப்பு, பெண்களின் துன்பத்தை ஓரளவு மட்டுப்படுத்தும்.

மனைவி, புகுந்த வீட்டுக்கு வரும் போது கொண்டு வரும் சீதனம், அவளுக்கே முழுதும் உரிமையானது. இதில் புகுந்த வீட்டு மனிதர்களுக்கோ அல்லது கணவனுக்கோ எந்த உரிமையும் கிடையாது. ஆகவே சீதனத்தைத் திருப்பிக் கொடுக்க மாட்டோம் என்று கூறுவது சட்டப்படி நம்பிக்கைத் துரோகம் என்ற கடுமையான கிரிமினல்குற்றமாகும் என்று ஆணித்தரமான தீர்ப்பு அளித்திருக்கிறது சுப்ரீம் கோர்ட்.

மனைவியின் சீதனத்திற்கு கணவன் ஒரு டிரஸ்டி அதாவது பாதுகாவலன் தான். பொருளுக்கு உரிமையாளராகிய மனைவி அதைத் திருப்பிக் கேட்கும் போது, அது திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். அப்படி திருப்பிக் கொடுக்க மறுத்தால், அது இந்திய பீனல் கோடு 405—ம் பிரிவின்படி, நம்பிக்கை மோசடிக் குற்றம் என்றும், இப்படி மோசடி செய்பவர்களுக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை உண்டு என்றும், சிறைத் தண்டனையோடு சில் சமயம் அபராதமும் விதிக்கப் படலாம் என்று கூறியிருக்கிறது சுப்ரீம் கோர்ட்.

இப்படிப்பட்ட தீர்ப்புக்குக் காரணமாகிய வழக்கு என்ன என்பதைச் சற்றே பார்ப்போமா? பிரதிபாராணி, சூரஜ்குமார் வழக்கில்தாம் இப்படிப்பட்ட தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. பிரதிபா 'ராணி, சூரஜ்குமார் திருமணம், 1972—ஆம் ஆண்டில் ஹரியானா (பஞ்சாப்)வில் இந்து முறைப்படி நடந்தது. திருமணத்தின் போது சுமார் 60,000 ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் சீதனமாகக் கொடுக்கப்பட்டன. ஆனால் போதுமான சீதனம் கொண்டு வரவில்லை என்று பிரதிபா ராணியைப்புகுந்தவீட்டார்கொடுமைப்படுத்தினர்.

ஐந்தாண்டு கழித்து இரண்டு குழந்தைகளுடன் அவள் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டாள். சில பெரியவர்கள் கூடி சமாதானம் செய்ததாலும், இனி அப்படித் துன்புறுத்த மாட்டேன் என்று சூரஜ்குமார் கூறியதாலும், பிரதிபா ராணி மறுபடி, புகுந்த வீடு சென்றாள். ஆனால் மறுபடியும் மூன்றாண்டுகளுக்குப் பிறகு அவளை மறுபடியும் இம்சித்து வீட்டை விட்டுத் துரத்தினர்.

தான் கொண்டு வந்த சீதனப் பொருட்களைப் பிரதிபாராணி கேட்டபோது அவளுக்குக் கிடைத்ததெல்லாம் பலமான அடி உதைகளே. இதற்குப் பிறகே, சூரஜ்குமார், நம்பிக்கை மோசடி செய்ததாகவும், அதனால் இ. பி. கோ. 405—ம் பிரிவின்படி அவன் தண்டிக்கப்பட வேண்டும் என்று ஹரியானா கோர்ட்டில், பிரதிபா ராணி வழக்குத் தொடர்ந்தாள். இதை எதிர்த்து சூரஜ்குமார் பஞ்சாப் ஹரியானா ஹைகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தான். 'ஒரு பெண்ணுக்குச் சீதனம் கொடுக்கப்படுகிறதே தவிர, அவள் கணவனிடம் ஒப்படைக்கப்படுவதில்லை. ஒரு பொருளை ஒருவர் ஒப்படைத்து விட்டு மீண்டும் கேட்கும் போது தர மறுத்தால்தான் அது நம்பிக்கைத் துரோகம்' என்பது வாதம்.

அந்த மாதிரியில், திருமணத்திற்குப் பிறகு ஏதும் நடக்கவில்லை. ஆதலால், சீதனத்தைத் தராமல் மறுத்து நம்பிக்கை மோசடி செய்ததாக சூரஜ்குமார் மீது பிரதிபா ராணி தொடர்ந்த வழக்கு செல்லுபடியாகாதென்று, பஞ்சாப், ஹரியானா கோர்ட் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்தே, பிரதிபாராணி சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தாள்.

இந்து திருமணச் சட்டத்தின் 27—வது பிரிவிலோ அல்லது இந்து வாரிசு உரிமைச் சட்டத்தின் 14—வது பிரிவிலோ, இந்துப் பெண்ணுக்கு, தனக்குக் கொடுக்கப்பட்ட சீதனத்தின் மேல் உரிமை கிடையாது என்று கூறப்படவில்லை.

மேலும் திருமணத்தின் போது கொடுக்கப்பட்ட சீதனத்தின்மேல், கணவனுக்கோ அல்லது அவன் வீட்டாருக்கோ எந்த உரிமையில்லை. அவள் அதைத் திருப்பிக் கேட்கும்போது, திருப்பிக் கொடுத்தாக வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட் கூறியுள்ளது.

இத்தீர்ப்பு கணவனால் விரட்டப்படும் பெண்ணுக்கு விரைவில் மறுவாழ்வு வாழ வழிகாட்டும். இத்தீர்ப்புக்குமுன்னால், கணவனால் வீட்டை விட்டு விரட்டப்படும் பெண்ணுக்கு வரதட்சிணை தடைச் சட்டமும், தான் புகுந்த வீட்டிற்குக் கொண்டு வந்த பொருள்களைத் திருப்பிக் கேட்டு சிவில் வழக்குப் போடலாம் என்ற இரண்டே வழிகள்தாம் துணை புரிந்தன. ஒரு பெண், தான் கொண்டு வந்த சீதனத்தைத் திருப்பிப் பெற்றுக் கொள்ள வழக்குத் தொடர வேண்டுமென்றால், திருமணம் ஆகிய ஒரு வருடத்திற்குள்ளேயே வழக்குத் தொடர வேண்டும் என்ற ஒரு விதியிருக்கிறது. இது சாத்தியமில்லை. மனைவி, கணவனை விட்டுப் பிரிந்து வாழ வேண்டும் என்ற நிலை ஏற்படும் போது, சமரசம் செய்ய ஏற்பாடுகள் செய்வதற்குள்ளேயே, காலம் ஓடிவிடும். சமரசப் பேச்சு முறிவடைந்தபிறகுதானே, தம்பதிகள் பிரிந்து வாழ முடிவு செய்கின்றனர்?

மேலும் வரதட்சிணையாக, இத்தனை கொடுத்தார்கள் என்று நிரூபிப்பதும் கடினம். மேலும் சிவில் வழக்குகளில், விரைவாகத் தீர்ப்பும் அளிக்கப்படுவதில்லை. கணவனால் கைவிடப்பட்ட பெண்களில் எத்தனை பேருக்கு, நீண்ட கால கோர்ட்டு வழக்காட, பணபலம், மனிதர் ஆதரவு உள்ளது?

இத்தீர்ப்பினால், தற்போது போலீஸ் வழக்குப் பதிவு செய்து, விசாரித்து, சீதனப் பொருள்களை எடுப்பதற்காகக் கணவனின் வீட்டைச் சோதனை போட்டு அப்பொருள்களை மீட்டு பெண்களிடம் கொடுக்க வழி செய்துள்ளது.

திருமணங்கள் பதிவு செய்யப்படுவதோடு பெண், புகுந்த வீட்டுக்கு வரும் போது கொண்டு வரும்பொருள்களைப்பற்றிய பட்டியல் ஒன்றும், பதிவு செய்யப்பட வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே ஒரு கருத்து இருக்கிறது. இவ்வகையில், சீதனப் பொருள்களின் பட்டியல் பதிவு செய்யப்பட்டால், பிற்பாடு அவசியம் ஏற்படும் போது, அப்பொருள்களைத்திருப்பிப் பெற உதவுகிறது.

திருமணங்கள் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட வேண்டும். இன்றைக்கு இந்தியாவில் பெண்கள் அவர்களுக்கு பாதுகாப்புச் சட்டங்கள் இருக்கின்றன என்று கூடத் தெரியாமல் இருக்கிறார்கள். அதனால் வாழ்க்கையில் கொடுமைகளை அனுபவிக்கிறார்கள். டீ. வி. ரேடியோ, பத்திரிகைகளே தங்கள் பிரசாரங்களின் மூலமாக இவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

—ராஜி.

ஸ்வெட்டர்களின் முழங்கையின் உட்பக்கம் சிறிய நைலான் துணியைத் தைத்து விட்டால், ஸ்வெட்டர் நீண்ட நாட்கள் உழைக்கும்.


அழகிய
மென்மைப் பொட்டு,
அற்புத
கருமைக் கோடு...
அடடா ஓ!
உம்மைக்
கவர்ந்திடும்
பெண்மை.
சிங்கார் குங்கும்
பொட்டு
சீராக பரவுவதற்கு மிகச்சிறப்பான
தரமுள்ள பொருள்களால்
தயாரிக்கப்பட்டது... விரியாது.
பரவாது. உங்கள் ஆடைகளுக்குப்
பொருந்தும் வண்ணங்கள்
சிங்கார் கண்மை
மென்மையான, இதமான,
வளமான கருமை. உங்கள்
கண்களை குளிர்ச்சியோடும்
அழகோடும் வைத்துக்
கொள்வதற்காக தூய்மையான
பொருட்களால் தயாரிக்கப்
பட்டுள்ளது. இடுவதும் எளிது
அதனை நீக்குவதும் அதேபோல்
எளிது.
S
சிங்கார்
குங்கும் பொட்டு மற்றும்
கண்மை.
தூய்மையானது, மென்மையானது
அழகானது – உங்களைப்போல்!


# இலக்கியம் படைத்த அணிகலன்கள்

வல்லோன் வகுத்த நல்வினைக் கூட்டத்து
யவனப் பேழையுள் அடைத்தோர் ஏந்திய
தமனியப் பல்கலம் தளிரியல் மாதர்
ஆற்றுந் தகையென ஆற்றுளி வாங்கி
(பெருங்கதை)

'பணிப்பெண்கள் பேழையை ஏந்தி நிற்க, அதிலிருந்து அணிகளைத் தேர்ந்தெடுத்து மகளிர் அணிந்து கொண்டனர்.' தொன்று தொட்டு வந்த ஒரு அலங்காரக் கலை. காலத்திற்கு ஏற்ற கோலம் என வளர்ந்து வந்துள்ளது. ஆபரணங்கள் அணிதலும் ஒப்பனைக் கலையும் இணைந்தவை. இயற்கை நிலைக்கு செயற்கை எழில் ஊட்டுவது என இருந்தாலும் உடலோடு ஒட்டிய ஒன்றாகும். ஒத்திருக்கத் தக்க ரசனையும், செயல்முறையும் தேவை. அலங்காரம் அலங்கோலமாவது இவ்விரண்டின் பிழைகளினால்தான்.

அணிகலன்கள் உடல் எழிலுக்கு மட்டுமல்ல. அணிவோரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் பின்னிப் பிணைந்தவை. சரித்திர நாயகி கண்ணகியின் வரலாற்றைப் போல ஒவ்வொரு மகளிரின் வாழ்க்கையிலும் ஒரு வரலாறு புதைந்து கிடக்கும். சிலர் மகிழ்ச்சியடைவர். சிலர் துயரடைவர்.





கணவன் மனைவியை இணைப்பது தாலி, மோதிரம். பர்த்ருஹரி என்னும் வடமொழி கவிஞன் கூறுகிறான், 'பண்பாடற்ற உடல் உறுப்புகளுக்கு ஆபரணம் இருந்து என்ன பயன்?' 'ச்ரோத்ரம் ச்ருதேனைவ ந குண்டலேன, தானேன பாணிர்ந கங்கணேன, விபாதி காய: கருணாகுலானாம் பரோபகாரேண ந சந்தனேன.' காதுக்கு அலங்காரம் தோடு அல்ல, நல்லவை கேட்பதுதான்.

கி. ராதாகிருஷ்ணன் I.P.S.

# இப்படியும் சில டாக்டர்கள்!



வேலூரில் ஒரு நர்ஸிங் ஹோமில் எங்கள் சித்தி மூன்றுமாதத்திலிருந்தே மருத்துவரிடம் தம் உடல்நிலையைக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இது மூன்றாவது குழந்தை. பத்து வருட இடைவெளிக்குப் பின் ஜனித்திருக்கிறது. டாக்டரிடம் காண்பித்ததற்கு "கவலைப்படாதீர்கள், எல்லாம் நார்மலாகவே இருக்கிறது" என்றார். குறிப்பிட்ட நாள் கழித்து ஒரு வாரம் ஆகியும் டெலிவரி ஆகவில்லை. லேசாக வலி இருந்தது.

டாக்டரிடம் நீங்கள் சொன்ன தேதி தாண்டி விட்டதே என்றதும், மீண்டும் பரிசோதனை செய்துவிட்டு, 'குழந்தைக்குத் தலை பெரிதாக உள்ளது. ஆதலால் என்னால் பார்க்க முடியாது' என்று நிர்த்தாட்சண்யமாகக் கூறி விட்டார்கள்.

அன்று ஒரே மழை, பலத்த காற்று, கரண்ட் வேறு இல்லை. அந்நிலையில் இரவென்றும், மழையென்றும் பாராமல் என் சித்தப்பா காட்பாடி சென்று டாக்ஸி பிடித்து வந்தார். பிறகு சி. எம். சி. சென்று அட்மிட் செய்தோம்.

அங்கேயோ டாக்டர்கள் 'ஏன் முன்னமே அழைத்துக் கொண்டு வரவில்லை? கடைசி நிமிடத்தில் வந்தால் என்ன செய்வது?' என்று திட்டினார்கள். இறைவனது அருளால் எந்த விதச் சிக்கலுமின்றி அட்மிட் ஆன ஒரு மணி நேரத்திலேயே அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார் சித்தி.

இப்படியும் சில டாக்டர்கள் இருக்கிறார்கள் என வேதனையாக இருந்தது. நம்பிக் கைவிட்ட கதைதானே! இதுவே டாக்ஸி, பெரிய மருத்துவமனை எனச் செலவிட முடியாத எளியவர்களாக இருந்தால் என்னவாகி இருக்கும்?

—என். உமா.

---

கைக்கு அழகு காப்பல்ல, தானம் செய்வது. உடல்சந்தனம்பூசிமகிழ்வதற்கல்ல.பரோபகாரம் செய்வதற்கு

தமிழ், சமஸ்கிருத இலக்கிய நூல்கள், இராமாயணம், மஹாபாரதம் இவற்றில் கூறப்படும் அணிகலன்கள், ஒப்பனை முறைகள், அவை மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்த சில நிகழ்ச்சி வரலாறுகளைத் தொகுத்து அளிக்க விரும்புகிறேன். நடைமுறை வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் அவரவர்களுக்கேற்ற வகையில் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். வரதட்சணை பேரம், சங்கிலி பறிப்பு, அடமானம், ஒப்பனை நிலையங்கள் எனப் பல கோணங்கள் கிடைக்கும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு!

தலைமுதல் பாதம் வரை அணிகலன்களுக்கு இடமுண்டு. ஒப்பனைக்கு வகையுண்டு. செயல்முறை எழிலூட்டும், குறைக்கும், சிதைக்கும். துன்பம் தரும். மகிழ்ச்சியூட்டும். தகுதி, ரசனை, மற்றும் பல மனநிலைகளைப் பொறுத்தது. அணிகலன்கள் சரித்திர வரலாறு கொண்டவை, இலக்கிய வளம்; காவிய நயம் படைத்தவை.

கர்ப்பப்பையில் தவழும்போதே தாயின் அணிகளின் ஒலிகளுடன் இணைந்து வளர்கிறது சிசு. எட்டு மாதத்தில் வளைகாப்பு அணி விழா. கைகளில் அடுக்கிய வளைகளின் ஒலி அலைகள் சிசுவின் செவிக்குள் இசையாகப் பாய்கின்றன. இசை மட்டுமல்ல அது தாயின் காக்கும் கரங்களின் அரவணைப்பு

'பிறந்த மேனி'யுடன் உலகத்தில் உதித்த அச்சிசுவிற்கு சில நொடிகளிலேயே ஒப்பனை துவங்குகிறது. சில நாட்களில் காப்பு அணிவிப்பு. பிஞ்சுக்கரங்களையும், விரித்த விரல்களையும் அது தானே பார்த்துப் பார்த்து மகிழ்வதைக் கண்டு அது விரலுக்கு மோதிரத்தையும், கரத்திற்கு வளையல்களையும் விரும்புகிறதோ என நினைத்து அவற்றை அணிவித்து நிறைவு காண்பது தாய்மையின் பெருமை. முலைகள் மீது படர்ந்து தவழும் தாயின் தாலியைத் 'தொட்டுக் கொண்டு' தாய்ப்பாலைப் பருகினால்தான் சுவையேறுகிறது. தாயை உச்சி மோந்த வைக்கிறது.

தரையில் நீந்த, தவழ முயற்சிக்கும் நிலைகளுக்கு ஏற்ற அணிகள். அடி வைத்து நடக்க ஆரம்பிக்கும் போது காலணி வகைகள். ஒரு ஆண்டில் காதணி. இவ்வாறாக அணிவகுப்பு தொடரும் வாழ்நாள் முழுவதும். திருமணக் கோலத்தில் சீதனமான அணிகளும் மகளுடன் புக்ககம் அடையும். கடலில் விளைந்த முத்தினால் நன்மையில்லை, முத்தை அணிவோர்க்கு மகிழ்ச்சி. சந்தனத்தினால் சந்தன மரத்திற்கு நன்மையில்லை, சந்தனம் பூசிக் கொள்வோர்களுக்கு மகிழ்ச்சி எனக் காவியங்கள் கூறும்.

எங்கிருந்தாலும் அணிக்கு ஏற்ற பண்பாட்டுடன் வாழ்வது உடலுக்கு எழில், உள்ளத்திற்கு மேன்மை. அணிகலன்களுக்கு எடையுண்டு விலை மதிப்பிடும் போது. தரம் உயர்ந்தால் விலை மதிக்க முடியாது. எடை கிடையாது. தங்கநகை என்று நகையைப் பார்த்தால் தங்கம் தெரியாது. தங்கம் என்று பார்த்தால்நகைதெரியாது. 'தான்,' ஆன்மா இவற்றைப் போன்றது அந்நிலை.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன் கரணங்களாம்
தன்னின் மறைத்தது தன் கரணங்களே.

(திருமூலர்)



இது மிக நீளமான நேப்கின்.



இது மிக அகலமான நேப்கின்.



இது மிக தடிப்பான நேப்கின்.

புதிய

# கேர்ஃப்ரீ* எக்ஸ்ட்ரா லார்ஜ்

## சில பெண்களுக்கு இது தேவை.

கூடுதலான பெரிய சைஸிலே தரமுள்ள நேப்கினின் முழுமையான சுகமும், பாதுகாப்பும் தேவைப்படும் பெண்களுக்கு—இதோ! புதிய கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ். ஆம் உங்களுக்காகவே.

நீளத்திலேயும், அகலத்திலேயும், தடிப்புத்தன்மையிலேயும் கூடுதலாகவே பெற்றிருக்கும் இந்த நேப்கினின் நூலிழைகள் உறிஞ்சும் திறன் அதிகமாகப் பெற்று மிகுந்த நம்பிக்கையைத் தருகிறது.

ஒன்டர்ராப் உறைகள் ஈரத்தை உள் அடுக்கிற்குள் செலுத்துவதால் ஈரம் சீராக உறிஞ்சப்பட்டு உலர்வினையும் சுகத்தினையும் உங்களுக்குத் தருகிறது. நாப்கினின் இந்த சிறப்பான டாப்-நுனிகள் சரியாகப் பொருந்த உதவுவதோடு கச்சிதமாகவும் இருக்கிறது.

அத்துடன் ஈரம் கசியாத "நீல-பிளாஸ்டிக் ஷீல்டு" நேப்கினின் அடிப்பகுதியினையும், இரண்டு பக்கப்பகுதியினையும் சூழ்ந்து கொண்டு, கசிவோ, கறையோ மற்ற விபரீதங்களோ ஏற்படாமல் பாதுகாக்கிறது.

புதிய கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்—முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு, கூடுதலான பெரிய சைஸில்




## முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு கூடுதலான பெரிய சைஸில்.

Johnson & Johnson

தமிழ்நாட்டில் மட்டுமே கிடைக்கும்.

'சமையலறையில் நடந்த சுவையான சம்பவம்' போட்டிக்கு ஏராளமான கடிதங்கள் வந்திருந்தன. ஒரு பெண்மணி எழுதியிருந்தார்.

'சமையலறை வெறும் சமையலறை மட்டுமல்ல என நீங்கள் எழுதியிருந்தது ரொம்பவும் உண்மைதான். அது பெண்களின் அடைக்கலரும் என்று சொல்லலாம். கணவர், மாமியார் வகையறு கொடுமைகளுக்காக வருந்தும் எத்தனை பெண்கள் தன் கண்ணீரால் சமையலறையைக் கழுவுகிருர்கள்! அன்பை, ஆசையை, அக்கறையைத் தன் கணவனுடன் பகிர்ந்து கொள்ளும் இடமும் அதுவே. கோபத்தைப் பாத்திரத்தின் மேல் காட்டிப் பதம் பார்க்கும் இடமும் அதுவே.

மொத்தத்தில்பெண்களின்உணர்ச்சிகளின் வடிகாலாக இருக்கிறது. சமையலறையே பெண்களின் மௌன சாட்சி!''

என அற்புதமாக எழுதியிருந்தார்.

இந்த இதழில் முதல் பரிசான 'கிருஷ்ணு மிக்ஸ்' பரிசு பெறும் சம்பவம் இடம் பெறுகிறது.

## முதல் பரிசு

### என்னைக்கொல்லசதியாபண்ணிருய்?

அன்று வெள்ளிக்கிழமை. காலையில் குழாய்த் தண்ணீர் நிற்பதற்குள் பாத்திரங்களைக் கழுவி சமையல்வேலைகளை தொடங்க வேண்டும். சாம்பலும் கையுமாக இருந்த என்னை என் மாமியார் கூப்பிட்டார்.

''அடுப்பில் என்னடி வைச்சுருக்கே... ரொம்ப நாழியா கொதிக்குது?'' என்று கேட்டாள். காப்பியை சுட வைத்துவிட்டு மறந்து போயிருந்தேன். ''அம்மா... ஹீட்டரை ஆப் பண்ணி அதை இறக்கிடுங்கோ'' என்று பதில் குரல் கொடுத்தேன். ''உனக்கு என்ன மறதியோ...போ...'' என்றுமுணுமுணுத்துக் கொண்டே மாமியார் சமையலறைக்குள் போனுர். அடுத்த நிமிடம் 'ஐயோ' என்ற அலறல். ஓடிப் போய் பார்த்த பொழுது... காப்பிப் பாத்திரம் தரையில் கிடக்க மாமியார் கையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

''ஷாக் அடிச்சுடுச்சுடி... ஐயோ... கையே வராது போலிருக்கே.... பாவி.... உன்னுலதான் எல்லாம்.... ஷாக் அடிக்காம இருக்க அவன் கீழே ரப்பர் போட்டிருந்தானில்ல... அத எங்கடி காணும்... அதை எடுத்துட்டுதான் என்னைத் தொடச் சொன்னியா... ஐயோ'' என்றுபுலம்ப ஆரம்பித்துவிட்டாள். தற்காப்புக்காக ஹீட்டரில் சமைக்கும் போது நிற்பதற்கென்று ரப்பர் மிதியடி போட்டிருந்தார் என் கணவர். அந்த சுத்தம் செய்வதற்காக எடுத்து வைத்திருந்தேன்.

நேரம் ஆக, ஆக மாமியாரின் சிணுங்கல் ஜாஸ்தியாக ஆரம்பித்தது. சாப்பாட்டுக்கு அவர் வரும் நேரம். நான் திகைத்து நின்று கொண்டிருந்தேன். மாமியாருக்கும் எனக்கும் இந்த மாதிரி பெரியதாக ஒன்றும் இதுவரை நடந்ததில்லை. மாமியார் என் மேல் லேசாக 'வன்மம்' வைக்கக் காரணம், என் (கணவர்) வரதட்சிணை ஒரு பைசா கூட வாங்காமல் வசதியில்லாத என்னை திருமணம் செய்து கொண்டதுதான். அடிக்கடி மாமியார் என்னிடம் 'அன்பாக'(?!) நடந்து கொள்ளும் போதெல்லாம் நான்தான் தாழ்ந்து போவேன்.

அவர் வந்தவுடன் மாமியார் விவகாரத்தை ஆரம்பித்துவிட்டார். 'அவளுக்கு நான் இருக்கறது புடிக்கலேடா... ஊமையாட்டம் இருந்து என்னெல்லாமோ பண்ரு... உன்னை விட்டா எனக்கு வேற நாதியில்லே...'' என்று ஆரம்பித்து என்னுல்தான் ஷாக் அடிக்க நேர்ந்தது என்பதை விளக்கிக் கூறினுர். என் கண்களில் நீர் தாரையாக வழிந்து கொண்டிருந்தது. கணவர் என்னை ஒரு முறை பார்த்துவிட்டு,

''உனக்கு அறிவிருக்கா... அம்மாவை ஏன் ஹீட்டர்கிட்ட போகச் சொன்னே... போய் அந்த டெஸ்டரையும், ஸ்க்ரூட்ரைவரையும் கொண்டா, ஹீட்டரைப் பாக்கலாம்....'' என்று சொல்லிவிட்டு உடை கூட மாற்ருமல் ஹீட்டரை சரி செய்யப் போனுர். இரண்டு நிமிடம் ஆராய்ந்தபின் ஸ்விட்சைப்



# சமையலறையில் நடந்த

போட்டார். மறுநிமிடம் அவருக்கும் ஷாக் அடித்தது. 'ஆ'வென்று கத்திய வண்ணம் கையைப் பிடித்துக் கொண்டு ஓடிப் போய் மெயினை ஆப் செய்தார். நானும் மாமியாரும் பதறிப் போனோம். மாமியார் எல்லா தெய்வங்களையும் வேண்டினார்.

"ஒண்ணுமில்லே. நேத்திக்கு ஒயர் மாத்தின போது நான்தான் சரியா 'எர்த்' கனெக்ட் பண்ணலே. இனிமே சரியாய்டும்" என்று சொல்லிவிட்டு அதை சரி செய்து, சாப்பிட்டு விட்டுப் போனார். பக்கத்து வீட்டு அம்மாளிடம் மாமியார், ஹீட்டர் ரிப்பேராகி தனக்கும் தன் மகனுக்கும் ஷாக் அடித்து விட்டதாக கூறியதைக் கேட்டதும் எனக்கும் நிம்மதியாக இருந்தது.

ராத்திரி அவருடைய ஷாக் அடித்த கையில் வலி இருக்கிறதா என்று கேட்டேன். "ஷாக்கா.... நீ வேற.... எப்படியாவது அம்மாவை அட்ஜஸ்ட் பண்ணி போ. வயசான காலம் பாரு.... அம்மா எல்லார்கிட்டயும், மருமகள் வேணும்னே இப்படி பண்ணிட்டான்னு சொல்லுவான்னு, நான் வேணும்னே ஷாக் அடிச்சுகிட்டேன்.... நான் செட் பண்ண ஹீட்டர்ல ஷாக்காவது, ஒண்ணாவது..." என்று கூறிச் சிரித்தார். இப்படிப்பட்ட என் கணவரின் அன்பின் வலிமையில் பொறுமையாக இல்லறத்தில் வெற்றி பெற்றேன்.

— பத்மாவதி ராஜன்.
நெய்வேலி — 3.

பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவங்கள்:

## பில்டருக்கு ஒரு பாட்டு!

படிப்பு முடிந்தவுடன் திருமணமான எனக்கு சமையலில் அனுபவம் போதாது. ஏன், காப்பி கூடப் போட வராது. இந்நிலையில் தனிக் குடித்தனம் என்பதால் எல்லாவற்றையும் தனியே செய்து திணறிப் போவேன்.

ஒருநாள் என் கணவரின் நண்பர் ஒருவர் வந்திருந்தார். அவருக்கு காப்பி அளிக்க பில்டரில் பொடி போட்டு கொதி நீர் ஊற்றினேன். சற்றைக்கெல்லாம் நண்பர் அவசர வேலையென்று கிளம்புவதாகச் சொன்னார். அப்பொழுது பார்த்து சண்டித்தனம் செய்த பில்டரை மூடியால் தட்டினேன்; வேகமாக டிகாக்ஷன் கிடைக்க வேண்டுமென்று. இதைக் கண்ட நண்பர் சிரித்தவாறே, "தட்டினால் இறங்காது; பாடினால்தான் இறங்கும்" என்றார். நான் ஆச்சரியத்துடன் பாட்டா" என்றேன். அவர் பாடியே காட்டினார். பின் வருமாறு.

"நீ இறங்காயெனில் புகலேது?"

— லலிதா, சென்னை — 40.




## தோசையைச் சாப்பிட்டது யார்?

நான் அப்போது பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் மாலை பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்ததும், எனது அண்ணார் சாப்பிட தோசை வார்த்துக் கொடுக்கும்படி கேட்டார். நானும், சமையலறையில் பாய் போட்டு, தட்டு வைத்து, நீர் வைத்துவிட்டு, தோசைகள் இரண்டை சுட்டு தட்டில் வைத்துவிட்டு, அவரை அழைத்துவிட்டு வந்து மீண்டும் சுட ஆரம்பித்தேன்.

தட்டை சரி செய்து கொண்டு சாப்பிடும் சப்தத்தைக் கேட்டு— அவர்தான் சாப்பிடுகிறார் என நினைத்து அன்று பள்ளியில் நடந்த சுவையான கதைகளைக் கூறிக் கொண்டே, மேலும் சூடாக ஒன்றைப் போட்டுக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, சட்டுவத்தில் சூடான தோசையை எடுத்து நீட்ட — தன் முகத்துக்கு நேராக வந்த சூடான ஆவியை சற்றும் எதிர்பார்த்திராத குரங்கு உறுமிக் கொண்டு என் மீது பாய வந்தது.

ஆம்! இதுவரையில் என் அண்ணாவுக்குப் பதில் அங்கு உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டே என் கதைகளை ரசித்தது ஒரு பெரிய ஆண் குரங்குதான்! இருபுறமும் வாசல் கொண்ட எங்கள் சமையலறையிலிருந்து நானொரு புறமும், குரங்கு ஒரு புறமுமாக அலறிக் கொண்டு ஓடினோம். மும்முரமாக அரட்டையிலிருந்த என் அண்ணாவும், மற்றவர்களும் திடுக்கிட்டு ஓடி வந்து, நடந்ததைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

— ஜி. வசந்தராணி, சேலம் — 5.

(மீதி அடுத்த இதழில் இடம் பெறும்)

# சுவையான சம்பவம்!

காலையில் உங்களுக்கு புத்துணர்ச்சி கொடுக்க ஒரு புது முறையின் அறிமுகம்...



# ட்ரஸ்ட்

**ஒரு புதிய பற்பசை**
**உங்களுக்கு புத்துணர்ச்சியும், உறுதி கொண்ட புன்சிரிப்பும் கொடுக்க.**

காலை கதிரவனின் புத்துணர்ச்சியைப் போன்ற
புன்சிரிப்புடன் உங்கள் நன்னாட்களை
ஆரம்பியுங்கள். உங்கள் பற்களை
ட்ரஸ்ட் (மார்னிங்) பற்பசையினால்
துலக்குங்கள். ட்ரஸ்ட் பற்பசையில்
அடங்கியுள்ள வீரியமான
கலவைப் பொருட்கள் உங்கள்




பற்களை முற்றிலும் சுத்தப்படுத்தி,
பளிச்சிட்டுப் பிரகாசிக்க செய்கின்றன.
ட்ரஸ்ட் பற்பசையில் அடங்கியுள்ள
அபூர்வமான இனிய வாசம் வாயில்
துர்நாற்றத்தைப் போக்கி, உங்கள் சுவாசத்தை
குளிர்ச்சியுடனும், புத்துணர்ச்சியுடனும் மிளிரச்
செய்கின்றது. ட்ரஸ்ட்டுடன் பல் துலக்கும்
நற்பழக்கத்தை உடன் கொள்ளுங்கள்.




**ட்ரஸ்ட்... ஒரு விசேஷமான பற்பசை.**

பற்களை பாதுகாக்க ஒரு நற்பழக்கத்தின் அறிமுகம்...



# ட்ரஸ்ட்

**பற்சிதைவு உண்டாக்கும் கிருமிகளிடமிருந்து இரவு முழுவதும் உங்கள் பற்களை பாதுகாக்க ஒரு விசேஷமான பற்பசை.**

நீங்கள் உறங்கும்பொழுது உங்கள் பற்களினிடையே சிக்கி இருக்கும் உணவுப் பண்டங்களின் மீதங்கள் வாய் கிருமிகளை பெருகச் செய்து 'ப்ளாக்' என்ற மெல்லிய மேற்பூச்சை படரச் செய்கின்றன. அதிலிருந்து சில அமிலங்கள் உண்டாகி பற்சிதைவு, பற்குழிகள் ஏற்படுத்துகின்றன.

உங்கள் பற்களைப் பாதுகாக்க இரவில் உறங்கு முன் ட்ரஸ்ட் (நைட்) பற்பசையினால் பல் துலக்குங்கள்






அதில் இருக்கும் ஒரு பிரத்தியேக கலவைப் பொருள் பல மணி நேரம் வாயில் தங்கி பற்களைக் கெடுக்கும் கிருமிகளை கொல்லுகின்றது. ட்ரஸ்ட் (நைட்) மூலம் இரவில் பல் துலக்கும் பழக்கத்தை உடன் மேற்கொள்ளுங்கள் - உங்கள் பற்களின் ஆரோக்கியத்திற்காக

**ட்ரஸ்ட்...ஒரு விசேஷமான பற்பசை.**

# ராசிபலன்

## ஆகஸ்ட் '85

### மேஷம்



பல நாட்களாக தொடர்பு அற்றிருந்த நண்பர் ஒருவரின் திடீர் வருகையால் முக்கியமான பிரபலஸ்தரைச் சந்திக்க நேரிடும். அவரின் மூலமாக வாழ்க்கையின் தரம் உயர்வதுடன், உங்களுடைய லட்சியங்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் விளங்குவார்கள். இம்மாதம் முழுவதும் பணத்திற்கு பிரச்னைகள் இராது. குடும்ப நபர்களிடையே சுமுக நிலைமை இருப்பதுடன் சிலர் வீடுகளில் சுப காரியங்களும் நடைபெறும்.

### ரிஷபம்




இம்மாதத்தின் முதல் வாரம் அலைச்சல் மிகுந்த வாரமாக இருக்கும். எடுத்துச் செய்யத் தொடங்கிய காரியத்தில் பல தடங்கல்களும் குறுக்கிட்டு ஓரளவு உற்சாகத்தையும் இழக்க நேரிடும். எனினும் வாரத்தின் இறுதியில் வேலைகள் நல்ல முறையில் முடிவடையும். குடும்பத்தில் தம்பதியரிடையே ஓரளவு மனஸ்தாபங்கள் ஏற்படலாம். பொறுமையுடன் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

### மிதுனம்




எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்த ஒரு பெரியவரின் அறிவுரையால் சிலருக்கு வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்பம் இம்மாதம் ஏற்படும். நல்ல முன் யோசனையுடனும், தைரியத்துடனும் தொடர்ந்து செல்வார்களேயானால் மிகப் பிரகாசமான எதிர்காலம் இவர்களுக்கு உண்டு. சிலருக்கு எதிர்பாராத தனலாபமும் கிடைக்கும். குழந்தைகளினால் புதிய நண்பர்கள் கிடைப்பார்கள்.

### கடகம்



இந்த மாதம் வேலைகளின் பளு அதிகரிக்கும். குறிப்பிட்ட சில நண்பர்களின் உதவியால் சிரமமான நாட்களை ஓரளவு சுலபமாகத் தாண்டி விடுவீர்கள். குழந்தைகளின் பொருட்டு வெளியூர்ப் பிரயாணங்கள் மேற்கொள்ள நேரிடலாம். உடலில் இருந்து வந்த உபாதைகளின் கடுமைகள் குறைந்து ஆரோக்கியத்தைப் பெறுவீர்கள். பொருளாதார நிலைமை சுமுகமாக இருக்கும்.

### சிம்மம்



அதிக விசேஷங்கள் எதுவும் இல்லாமல் இம்மாதம் அமைதியாகச் சென்றுவிடும். குடும்பத்தில் பூசல்களும் அதிகம் ஏற்படாது. தம்பதியரிடையே பிரச்னைகள் இருக்காது. அலுவலகங்களில் வழக்கமான வேலைகளுடன் புதிய பொறுப்பொன்றும் சிலருக்கு ஏற்படலாம். தெய்வீகப் பயணங்களும் ஏற்பட வாய்ப்புண்டு. வரவுக்கேற்ற செலவாகச் சென்றுவிடும் இம்மாதம்.

### கன்னி



ஓரளவு சிரமப்பட்டாலும், தெரிந்தவர் ஒருவருக்குச் செய்யும் உதவியால் உங்கள் சுற்றத்தாரிடையே நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மேலதிகாரிகளுடன் சுமுகமான நிலைமையே இருக்கும். மேலதிகாரிகளின்


ஆதரவும் சிலருக்கு உண்டு. குடும்பத்தில் புதிய நபரின் வரவினால் சுபநிகழ்ச்சிகள் ஏற்படும். வேலையைத் தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல பதில்கள் வரும்.

## துலாம்



எவ்வளவுதான் கடுமையாக உழைத்தாலும் நல்ல பெயர் கிடைக்கவில்லை' எனும் சலிப்பை அடையும் நிலைக்குத் தள்ளப்படுவீர்களானாலும், பொறுமையுடன் இருந்தீர்களானால் தெய்வம் உங்கள் பக்கம் நின்று துணை புரியும். குடும்பத்தில் அதிகம் பாதிப்புகள் இல்லாமல் சாதாரணமான நிலைமையே நிலவும். மாத இறுதியில் வெளியூர்ப் பிரயாணங்களினால் நிலைமை உங்களுக்குச் சாதகமாகத் திரும்பும்.

## விருச்சிகம்



வழக்கு, வியாஜ்ஜியங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இம்மாதம் அதிகச் செலவோ, அலைச்சலோ, இருக்காது. சிலருக்குச் சுமுகமாகப் பிரச்னைகள் தீர்ந்து விடவும் செய்யும். வெளியூரிலிருந்து வரும் ஒரு எதிர்பாராத செய்தியினால் செலவினங்கள் ஏற்படுவதுடன் நீண்ட தூரப் பிரயாணங்களை மேற்கொள்ளவும் நேரிடலாம். குழந்தைகளினால் குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும்.

## தனுசு



கல்வி, விஞ்ஞானம், எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்ல ஆதாயமான மாதமிது. பொது மக்களிடையே பெரும் புகழும், பெறுவதுடன் சிலருக்கு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் அதிர்ஷ்டமும் ஏற்படும். அரசாங்கத் துறையில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வுக்கான வாய்ப்புக்களும் உண்டு. பொருளாதார நிலைமை பிரகாசமானதாக இருக்கும்.

## மகரம்



திருமணம் வேண்டி நிற்பவர்களுக்கு நல்ல வரன்கள் கைகூடும். தெய்வ சம்பந்தமான காரியத்தை மேற்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுவதுடன், அதனால் பல புதிய பிரமுகர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைக்கும். பண நிலைமை வரவுக்கேற்ற செலவாக இருக்கும். மாதத்தின் இறுதியில் ஏற்படும் செலவினங்களைக் கொஞ்சம் கட்டுப்படுத்தினால் அதிகம் சிரமம் இல்லாமல் மாதம் சென்றுவிடும்.

## கும்பம்



தனியார்த் துறையில் இருப்பவர்களுக்கும், சுய தொழில் செய்பவர்களுக்கும் அரசாங்கத்திலிருந்து வர வேண்டிய சாதகமான பதில் வந்து சேரும். உயர் அதிகாரிகளின் பரிவும், ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு எதிர்பார்த்ததற்கும் அதிகமாக தனலாபம் உண்டாகும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த செய்தியொன்றும் சாதகமாகவே வந்து சேரும். நண்பர்களின் உதவியால் பல பிரச்னைகளையும் எளிதாகச் சமாளித்து விடுவீர்கள்.

## மீனம்



பல நாட்களாகத் தொல்லை கொடுத்து வந்த உங்களுடைய பிரச்னை இந்த மாதம் மட்டுப்படுவதுடன் விரைவில் மறைவதற்கும் சாத்தியக் கூறுகளைக் காணலாம். சிலருக்கு ஆடை ஆபரண சேர்க்கை ஏற்படுவதுடன், தனலாபமும் உண்டாகும். குழந்தைகளின் உடல்நிலையில் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத்தில் சிறுசிறு மனஸ்தாபங்கள் இருந்தாலும் பெரிய பிரச்னைகள் எதுவும் இராது.

## முதல் பரிசு

### சாக்கி பிக்கி கேக்

**தேவையான பொருட்கள்:**

80 கிராம் விதம் 2 பாக்கெட் க்ளூகோஸ் பிஸ்கட்
2 டேபிள் ஸ்பூன் வெண்ணெய்.
3 டேபிள் ஸ்பூன் சீனிப்பொடி.
2 டேபிள் ஸ்பூன் கொக்கோ பௌடர்.
1 கிளாஸ் வெந்நீர்.
பொடித்த 'வால்நட் அல்லது முந்திரிப் பருப்பு.
இன்ஸ்டன்ட் காப்பி பௌடர் — ஐந்து ஸ்பூன்



ஜோதி



மீனு



லீலாவதி

**செய்முறை:**

காப்பிப் பொடியை வெந்நீரில் கலக்கவும். வெண்ணெய் கொக்கோ பௌடர் சீனி இவைகளை நன்றாகக் கலந்து வைக்கவும். பிஸ்கட்டை காப்பிப் பொடி கலந்த வெந்நீரில் முக்கி, ஒரு தட்டில் மூன்று அல்லது நான்கு விதம் இடைவிடாமல் வரிசையாக வைக்கவும். அதன்மேல் வெண்ணெய்க் கலவையை தடவவும். அதன்மேல் மேலும் சில பிஸ்கட்டுகளை எடுத்துக் காப்பிப் பொடி கலந்த வெந்நீரில் நனைத்து முன்பு வரிசையாக வைத்திருக்கும் பிஸ்கட்களின் மேலேயே அடுக்கவும். அதன்மேலே பழையபடி வெண்ணெய்க் கலவையைத் தடவவும். இப்படியே எல்லா பிஸ்கட்களையும்வைத்து மேலேபாக்கி வெண்ணெய்க் கலவையைச் சமமாகத் தடவி அலங்காரமாக பொடித்த வால்நட் அல்லது முந்திரிப் பருப்பைத் தூவி பிரிட்ஜில் குளிரவிடவும். நன்றாகக் குளிர்ந்ததும் நம் இஷ்டப்படி துண்டங்கள் போடவும்.

—மீனு கிருஷ்ணன், புதுதில்லி—64.

## இரண்டாம் பரிசு

### பாம்ப்ராக்

**தேவையான பொருட்கள்:**

உருளைக் கிழங்கு ¼ கிலோ (சுமாரான 5)
கோதுமை அல்லது கடலை மாவு — 2 கரண்டி (½ கப்).
உப்பு — தேவைக்கேற்றபடி.
பச்சை மிளகாய் — 4.
கொத்துமல்லி — 1 சிறிய கட்டு.
வெங்காயம் — 3.
பூண்டு — 8 (பற்கள்).
இஞ்சி — 1 சிறிய துண்டு.
எண்ணெய் — ½ கப்.
பெருங்காயம்— 1 சிறிய கட்டி (அ) கொஞ்சம் தூள்.

**செய்முறை:**

உருளைக்கிழங்கைத் தோல்சீவி பொடியாக நறுக்கி அலம்பிக் கொள்ளவும்.

வெங்காயம்—மிளகாய் இஞ்சி—கொத்துமல்லி இவைகளை தனித்தனியாக நறுக்கவும்.

பெருங்காயத்தை ஜலத்தில் ஊறவைத்துக் கொள்ளவும்.



இம்மாத இல்லத்தரசி போட்டிக்கு நடுவர்
களாக இருந்தவர்கள்:

வளசரவாக்கம் மாதர் சங்கம், சென்னை—87.

கிழங்கு,மிளகாய்,இஞ்சி,உப்பு—இவற்றை மிக்ஸியில் (அ) (ஆட்டுக்கல்லில்) அரைக் கல்லில் கொஞ்சம் ஜலம் விட்டு அரைக்கவும். பூண்டையும் சேர்த்து அடைக்கு அரைப்பது போல் அரைக்கவும். அரைத்து எடுக்குமுன் பெருங்காய ஜலம், பொடியாக நறுக்கிய வெங்காயம் சேர்த்து அரைத்து எடுக்கவும். கொத்துமல்லியைச் சேர்க்கவும்.

மாவில் கோதுமை (அ) கடலை மாவை சேர்த்து அடைமாவு போலக் கலக்கவும்.

அடுப்பில் தோசைக் கல்லைப் போட்டு அடை வார்ப்பது போலக் கெட்டியாக வார்த்து சுற்றி (2 ஸ்பூன்) எண்ணெய் விடவும்.

அடுப்பு நிதானமாக எரிய வேண்டும்.

சிவக்கும்முன் எடுத்துத்திருப்பிப்போட்டு எண்ணெய் விட்டுச் சூடாக அடைபோல எடுக்கவும்.

—லீலாவதி விஸ்வநாத், சென்னை—15.

# இல்லத்தரசி

## மூன்றும் பரிசு

## சால்ட் பிரட் முட்டை மிக்ஸர்

**தேவையான பொருட்கள்:**

சால்ட் பிரட் — 1.
முட்டை — 6.
பெரிய வெங்காயம் — 2.
பெரிய தக்காளிப் பழம் — 5.
பூண்டு பற்கள் — 6.
பட்டை — சிறுதுண்டு.
இஞ்சி — சிறுதுண்டு.
பெருஞ்சீரகம் — 1 சின்ன ஸ்பூன்.
மிளகாய்த் தூள் — 1 பெரிய ஸ்பூன்.
உப்பு — தேவையான அளவு.
நெய் — 2 பெரிய ஸ்பூன்.
கடுகு — ½ சின்ன ஸ்பூன்.
கொத்துமல்லி இலை — கொஞ்சம்.

**செய்முறை:**

பிரட்டை சிறு துண்டுகளாக்கிக் கொள்ளவும். வெங்காயத்தைச் சின்னதாக வெட்டி வைத்துக் கொள்ளவும். முட்டையை உடைத்துப் பாத்திரத்தில் போட்டு, மிளகாய்த்தூள்,

உப்பு சேர்த்து நன்றாக அடித்து வைத்துக் கொள்ளவும். தக்காளிப் பழங்களை கையினாலேயே பிசைந்து, சாற்றை எடுத்துக்கொண்டு சக்கையை வீசி விடவும். பூண்டு, பட்டை, இஞ்சி, பெருஞ்சீரகம் ஆகியவற்றை அம்மியில் நன்றாக அரைத்தெடுத்து அதை தக்காளி சாற்றுடன் கலக்கிக்கொள்ளவும். பின் வாணலியை அடுப்பில் வைத்து நெய்யை ஊற்றிச் சூடானதும் கடுகைப் போட்டுத் தாளித்து, வெங்காயத்தையும் போட்டுப் பொன்னிறமாக வதக்கியதும் தக்காளிச் சாற்றையும் அதில் போட்டு மெது நெருப்பில் கொதிக்க விட வேண்டும். அதன் பின் முட்டைக் கலவையையும் சிறிது சிறிதாக ஊற்றி முள் கரண்டியினால் கிளறிவிட்டு, கொஞ்ச நேரத்தில் பிரட்டையும் போட்டுக் கிளறிவிட அது உதிரி உதிரியாக வரும். கடைசியாக ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் கொட்டி அதன் மேல் வெட்டி வைத்துள்ள கொத்துமல்லி இலைகளைத் தூவி விட வேண்டும்.

—ஜோதி, சென்னை—30.

ஆறுதல் பரிசு

## ரவா பழ கேக்

**தேவையான பொருட்கள்:**

ரவை — 2 கப்,
பூவன் பழம் — 4,
பால் — ½ கப்,
சர்க்கரை — 1 கப்,
ஏலக்காய் — 2 (பொடி செய்யவும்.),
வாழை இலைத் துண்டு — 6,
நெய் — 2 தேக்கரண்டி.

**செய்முறை:**

ரவை, சர்க்கரை, பால், ஏலப்பொடி இவைகளை நன்றாகக் கலந்து 3 நிமிடங்கள் ஊற வைக்கவும். ரவை ஊறுகின்ற நேரத்தில், அடுப்பில் இட்டிலி வாணலியில் நீர் வைத்து மூடவும். மூன்று நிமிடங்கள் கழித்து ஊறிய ரவை கலவையில் பழங்களை உரித்துப் பிசைந்து சேர்க்கவும்.

வாழை இலைத் துண்டுகளில் நெய் தடவி, பிசைந்த ரவை கலவையில் 1'' சதுரங்கள் செய்து நெய் தடவிய இலைத் துண்டுகளில் வைத்து இலையை மூடி, இட்டிலி வாணலியில் ஆவியில் வேக வைக்கவும். மூன்று நிமிடங்களில் ருசியான கேக் தயார்.

—சிவகாமி, சென்னை—31.

ஆறுதல் பரிசு

## அவசர வடை

**தேவையான பொருட்கள்:**

பொட்டுக்கடலை — 150 கிராம்,
சிறு வெங்காயம் — 50 கிராம்,
பச்சை மிளகாய் — 4,
சோம்பு — 1 ஸ்பூன்,
கருவேப்பிலை, கொத்துமல்லி — தேவையான அளவு,
கடலை எண்ணெய் — 200 மில்லி லிட்டர்,
உப்பு — தேவையான அளவு.

**செய்முறை:**

முதலில் வெங்காயத்தை உரித்து இரண்டு இரண்டாக நறுக்கிக் கொள்ள வேண்டும். கடலை பாதி மசியும் வரை ஆட்ட வேண்டும். அத்துடன் நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், சோம்பு, உப்பு சேர்த்துக் கெட்டியாகவும் நறநற வென்று அரைத்துக் கொத்துமல்லி, கருவேப்பிலையை நறுக்கிப்போட்டு கலந்து கொள்ளவும்.

வாணலியில் 200 மில்லி எண்ணெயை விட்டு அடுப்பில் வைக்கவும். எண்ணெய் காய்ந்ததும் எலுமிச்சை காய் அளவு மாவை எடுத்து கையிலேயே உருட்டி தட்டிப் போடவும். ஒரே சமயத்தில் ஐந்து வடைகளை எண்ணெயில் போட்டு எடுக்கலாம். பத்து நிமிடத்தில் வடை ரெடி. இது பருப்பு வடையை விட ருசியாக இருக்கும்.


—டி. லில்லி, திருச்சி.

மோர் அதிகமாக இருந்தாலோ, ரொம்பவும் புளித்துவிட்டாலும் தூர கொட்ட வேண்டாம். சுலபமான புது வழியில் உபயோகப்படுத்தலாம்.

மீதம் உள்ள மோரை வாய் அகன்ற பாத்திரத்தில் ஊற்றி உப்பு தேவையான அளவு போட்டு நன்றாக அடுப்பில் வைத்து கெட்டியாகும் வரை (அல்வா பதம்) கிளற வேண்டும். இப்போது கெட்டியானது ஆறிய பிறகு ஒரு பாட்டிலில் போட்டு மூடி வைக்கவும்.

தேவையான போது தேங்காய், பச்சை மிளகாய் அரைத்து எடுத்துக் கொண்டு தீய்த்து வைத்துள்ள மோர் விழுதை போட்டுக்கொண்டு மோர் குழம்பு செய்யலாம். இதேபோல அவியலும் செய்யலாம். மிகவும் ருசியாக இருக்கும். இந்த மோர் விழுது 15 நாள் முதல் ஒரு மாசம் வரை கெடாமல் இருக்கும். நாம் நன்றாகத் தீய்க்கும் விதத்தில் உள்ளது.

— ஜெயலக்ஷ்மி வெங்கடேசன்.



சின்னஞ்சிறு காயத்தில்கூட அழுக்குப் புகுந்துவிடும்
இதனுல் காயம் பெரிதாகும், கஷ்டம் உருவாகும்.

# உடனடியாக பாண்ட்-எய்ட் உபயோகியுங்கள்




உலகில் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்—அது, காயங்களில் அழுக்குப் புகாமலும், தொற்றிலிருந்தும் காயங்களைப் பாதுகாக்கிறது.

ஆகவேதான் பாண்ட்-எய்ட் முழுப் பாதுகாப்பானதாகும். பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள நிரூபணமான ஆண்டிஸெப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலுள்ள நுண்துளைகள் காயங்களை விரைந்தாற்றிட உதவுகின்றன. ஒட்டிக்கொள்ளாத வசதிமிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.

**கைவசம் வைத்திருங்கள் பாண்ட்-எய்ட்**
**ஏனென்றால், காயங்கள் எங்கும் எந்நேரமும் ஏற்படலாம்.**

OBM/2514/TM

Johnson & Johnson

# மணியே மணியின் ஒளியே

ஸ்ரீ மகா திரிபுர சுந்தரியை, அபிராமியாக் அறிந்த அபிராமிபட்டர் அவளைத் தன்னுடைய விழுத்துணையாகவும் தொழும் தெய்வமாகவும் கொண்டு வாழ்ந்து வந்தவர் ஆவார். தேவியைத் தன்னுடைய வழிபடும் ஒரே தெய்வமாக ஏற்றுக் கொண்ட காரணத்தினால் வேறொரு தெய்வ உருவைத் தியானம் செய்யாமலும், அவளை வழிபடும் மெய்யன்பர் கூட்டத்தையும் பிரியாமல் இருந்தவர்.

ஒருவர் தான் வழிபடும் தெய்வத்திடம் பக்தி முதிர்ந்து விளங்க வேண்டுமானால் பட்டரைப் போன்று இம்மாதிரியான சில அடிப்படை ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர், திரிபுரசுந்தரியைக் குறித்து ஸ்ரீ திரிபுரசுந்தரி வேதபாஸ்தோத்ரம் என்னும் கிரந்தத்தில் "எங்கெங்கு என் மனமுளதோ அங்கங்கு உன்னுருவம் இருக்கிறது. எங்கெங்குஎன் சிரமானது இருக்கிறதோ அங்கெல்லாம் உன் இணையடிகள் இருக்கின்றன" என்ற கருத்தை,

"யத்ரைவ யத்ரைவ மனோமதீயம்
தத்ரைவ தத்ரைவ தவ ஸ்வரூபம் |
யத்ரைவ யத்ரைவ ஸிரோ மதீயம்
தத்ரைவ தத்ரைவ பதத்வயம்தே ||"

என்று கூறியுள்ளார். இப்படியே அபிராமி பட்டரும் காணுமிடமெங்கும் அபிராமியையே காணுகிறார்.

அபிராமியைத் தன் வழிபடும் தெய்வமாகக் கொண்டதற்கு சில விளக்கங்களை பட்டர் கூறியுள்ளார். முதலில் அவளுடைய கோலத்துக்கு அழகு செய்து ரசிக்க விரும்புகிறார். தேவி அழகுக்கு இருப்பிடமாக ஸர்வாங்க சுந்தரியாக இருப்பவள். அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக விளங்கும் அவளுக்கு ஆபரணங்களால் அழகு கூடப் போவதில்லை. ஆபரணங்கள் அவள் மீது அணியப்படுவதால் அவை அழகு பெற்று விளங்குவதாகக் கூறலாம். இருப்பினும் தன்னுடைய பக்தர்கள் தன்னை வர்ணனை செய்வதை அவர்களுடைய 'தூய்மையான பக்தி'யின் காரணமாக ஏற்று அருள் புரிகிறாள்.

வைரம், நீலம், முத்து, பவளம், மாணிக்கம், மரகதம், கோமேதகம், புஷ்பராகம், வைடூர்யம் என்று ஒன்பது வகையான இரத்தினங்கள் உண்டு. ஒன்பது கிரகங்களில் சூரியன் சிறந்து நிற்பது போல, ஒன்பது மணிகளுள் மாணிக்கம் சிறந்து நிற்கும். கல்ப சூத்திரம் என்னும் நூல், "நவமணி மகுடம் முதல் மாணிக்கப் பாதுகை முடிய" இருபத்தாறு ஆபரணங்களைத் தேவிக்கு உரியதாகக் கூறியுள்ளது. அம்பிகை செக்கச் செவேலென்றவண்ணத்தையுடையவளாகக் காட்சியளிக்கிறாள். சிவந்த திருமேனியுடன் பிரகாசிக்கின்ற அவளுடைய கோலத்துக்குச் செம்மணியான மாணிக்க மணியை உவமையாகக் கூறுகிறார்.

"மணியும் ஒளியும் போல" என்ற பழமொழிக்கேற்ப, மாணிக்கத்துக்கு நிறத்தினால் மட்டும் பெருமை ஏற்படவில்லை. அதனுடைய ஒளியினாலும் பெருமை உண்டு. தேவி, 'லினைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும் ஒளியாக'க் காட்சியளிப்பவள். உள்ளும், புறமும் ஒளி வடிவினளாகத் திகழும் அபிராமியை மாணிக்கம் என்று சிறப்பித்த பட்டர், அதைவிட ஒருபடி மேலாக அம் மணியின் ஒளி போன்றவளே என்று போற்றி உவகை கொள்கிறார்.

பிரகாசம் பொருந்திய மணியைச் சிவனாகவும், அந்த மணியின் பிரகாசத்தை வெளியே பரப்பும் விமர்சாம்ஸம் பொருந்திய தேவியை மணியின் ஒளியாகவும் இங்கு பட்டர் கூறுவதாகக் கொள்ளலாம். எனவே, மணியின் ஒளி போல சிவனிடம் நின்று நிலவுகின்ற அன்னையை மாத்திரம் எண்ணி, 'மணியே' என்று சொல்லப் புகுந்த பட்டர், அப்பனையும் அம்மையையும் இணைத்து ஒரே கோலத்தில் காண்கிறார்.

சீதாப்பிராட்டியின் அவயவங்களில் புனையப்பட்டதால் ஆபரணங்களின் அழகும் ஓர் அழகு பெற்றது என்று கம்பர் பால காண்டம் மிதிலைக் காட்சிப் படலத்தில் கூறுவார். காதணியும், கழுத்தணியும் மழை போன்று குளிர்ச்சி பொருந்திய கண்களையுடைய பெண்களின் அவயவங்களில் பொருந்துவதால், அவர்களுக்கு அழகை உண்டாக்கின. ஆனால் சீதை அவதரித்தபின், சீதாப்பிராட்டியின் அவயவங்களில் படும் பாக்கியத்தால் அவ்வணிகளின் அழகும் ஓர் தனி அழகு பெற்று விளங்குவதை.



"இழைகளும், குழைகளும் இன்ன
முன்னமே
மழைபொரு கண் இணை மடந்தை
மாரொடும்
பழையது எனினும், இப்பாவை தோன்ற
லால்
அழகெனும் அழகும் ஓர் அழகு
பெற்றதே".

என்ற பாடலில் கவிநயமும் பொருள் நயமும் தோன்றக் கூறியுள்ளார் கம்பர்.

தேவியின் அழகைப் போற்றிய பட்டர், அவளுடைய பெருமையைக் கூறப் போகிறார். கருணைக் கடலாக விளங்கும் அன்னை, தன்னை அணுகி பக்தி புரிபவர்களுக்குத் தன்னுடைய இனிய கோலத்தைக் காட்டி அருள் புரிகிறாள், அவ்வாறு அருள்பெற்ற பக்தர்கள் அன்னையின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு துன்பங்களிலிருந்து விடுதலை பெறுகிறார்கள். தேவியின் திருவடிகளை கதி என்று அடைக்கலம் அடையாதவர்களுக்கு அவள் நோய் போன்று துன்பம் விளைவிக்கிறாள். இதன் உட்பொருளைச் சிறிது சிந்திக்க வேண்டும்.

தேவிக்கு லலிதா ஸஹஸ்ர நாமத்தில் "துஷ்ட—தூரா" என்று ஒரு நாமம் உண்டு. "கெட்டவர்களுக்கு எட்டாதவள்" என்பது அதன் பொருளாகும். தேவியின் அருளைப் பெறாது பிரபஞ்ச வாசனையில் ஈடுபட்டு இந்திரிய நுகர்ச்சிகளில் உழலும் மக்களுக்கு அவள் துன்பத்தைக் கொடுத்துத் திருத்துகிறாள். அவளுடைய திருவடிகளை அடைக்கலமாக அடையாதவர்களுக்கு நோய் போன்று துன்பம் விளைவிக்கிறாள். அவர்களைத் திருத்தும் பொருட்டு தண்டிப்பவளாக, நோயாக வருகிறாள். தன்னை அணுகாதவர்களுக்குத் திரும்பத் திரும்ப பிணியைக் கொடுத்துத் திருத்தி நல்வழிப்படுத்துகிறாள்.

உடலில் தோன்றும் பிணிகளுக்குச் சாதாரண மருந்துகள் குணத்தையளிக்கும். ஆனால், அவளுடைய திருக்கோலத்தைக் கண்டு இயானிப்பவர்களுக்குப் பிறவி என்னும் பெரும் பிணி தீரும் என்கிறார் பட்டர். மனிதர்களுக்கு மாத்திரம் அவள் மருந்தல்ல. தேவர்களுக்கு அசுரர்களால் ஏற்படும் தொல்லைகளைப் போக்கும் பெருவிருந்தாக விளங்குபவளும் அவளே. அதாவது பெரு விருந்தாக நின்று அமரர்களுக்கும் இன்ப வாழ்வை அருளுபவள்.

தேவியின் அழகு கண்ணுக்கு விருந்து. மதுரவசனம் காதுக்கு விருந்து. அருள் உள்ளத்துக்கு விருந்து. நறுமணம் நாசிக்கு விருந்து என்பது போல தேவர்களுக்கு அம்பாள் பெருவிருந்தளிக்கிறாள். இவ்வளவு பெருமைகளை உடைய அவளுடைய திருவடிக் கமலங்களை பணிந்த பட்டர், வேறொருவரையும் பணியாதவர். சீரிய உயர்ந்த இவ்வளவு அரிய கருத்துக்கள் தோன்றுமாறு,

"மணியே! மணியின் ஒளியே! ஒளிரும்
மணி புனைந்த
அணியே! அணியும் அணிக்கழகே!
அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர்
பெரு விருந்தே!
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம்
பணிந்த பின்னே"

**மாயூரம் அபிராமிதாஸன்**

# இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள்:
கட்லெட்

கடைசி தேதி:
15-8-85

## சமையல் கூப்பன்

...................என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பி-யுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்.

# இன்சுவை ஜோடி!

## சக்திக்கும் சுவைமிகு மொறுமொறுப்புக்கும் ஸ்பென்ஸர்ஸ் ஹைமில்க் மற்றும் நைஸ் பிஸ்கெட்டுகள்







ஸ்பென்ஸர்ஸ் ஹைமில்க்—கறந்த பாலின் இனிமையுடன் சக்தி தரும் புரதச் சத்துக்களும் சேர்ந்த முத்தான பிஸ்கெட்.

அதனுடன் இணைசேர்ந்து தெவிட்டாத சுவை அளிப்பது தேங்காயும் சர்க்கரையும் பாங்குறக் கலந்த மொறுமொறுப்பான நைஸ் பிஸ்கெட்.
ஸ்பென்ஸர்ஸ் நைஸ்.

**ஸ்பென்ஸர்ஸ்**
**பிஸ்கெட்டுகள்**
**சுவைத்திடச் சிறந்தவை**

**ஸ்பென்ஸர்ஸ்**
ஸ்பென்ஸர் & கோ. லிமிடெட்
769, அண்ணா சாலை,
சென்னை 600 002

FAME/S/1128 TAM

# சிறகு தர நானிருக்கேன்!



**சுபா**

பானுமதி கண்களை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் நின்றிருந்த மொட்டை மாடியிலிருந்து பக்கத்து வீட்டுத் தோட்டம் வெகு ரம்மியமாய்த் தெரிந்தது. வளமையான பூமி. வானத்தை நோக்கி நீண்டிருந்த விரல்கள் மாதிரி வரிசையாய் செடிகள். பந்தலில் போர்த்தி நிழல் தந்த கொடிகள். வம்சமாய் வளர்ந்திருந்த மரங்கள்.

ஆனால் பானுமதியின் கவனத்தை கவர்ந்திருந்தது அந்த வர்ணங்கள் அல்ல. மாமரத்தின் நிழலில் சின்ன நாய்க் குட்டியுடன் சண்டி விளையாடிக் கொண்டிருந்த சின்னஞ்சிறு கவுன் குழந்தை. முதுகில் இருந்த நான்கு பட்டன்களில் இரண்டை மட்டும் போட்டிருந்தது — அதுவும் தப்பான ஓட்டைகளில். தலை கந்தல் துணி மாதிரி கலைந்திருந்தது. கழுத்தில்நூல் தடிமனுக்கு ஒரு தங்கச் சங்கிலி வெயிலில் மினுக்கிற்று, கால்களில் சிகப்பாய் ஷூக்கள், மிக்கி மவுஸ் முகங்களைத் தாங்கி.

"பானு" பின்னாலிருந்து குரல் வந்தது. "இங்கே என்ன பண்ணிட்டிருக்கே?"

பானுமதி பார்வையைப் பறித்துக் கொண்டு திரும்பினாள். சூர்யா தான். லுங்கியை மடித்துக் கட்டியிருந்தான்.

"அந்தக் குழந்தையைப் பாரேன், எவ்வளவு அழகா இருக்கு!" என்றாள் பானுமதி, கண்களை அகல விரித்து. "யாரு சூர்யா அது?"

"சரண்யாவைச் சொல்றியா?"

சூர்யா துணி உலர்த்தும் கம்பிகளைத் தவிர்த்துக் குனிந்து நடந்து பானுமதியை நெருங்கினான். பக்கத்துதோட்டத்தைப்பார்த்தான். "சரண்யாதான், பாவம்" அவன் குரலில் இழைந்த அந்த அனுதாபம் பானுமதியை நிமிர்த்தியது.

"ஏன் சூர்யா பாவம்னு சொல்றே?"

"தாயில்லாத குழந்தை பானு. அதோட அம்மா செத்துப் போய் ஆறு மாசம் தான் ஆகுது. அதுங்கதையே ஒரு பெரிய கதை. பானு."

"கண்ணாடி போட்டுக்கிட்டு டுர்ர்ருன்னு மோட்டார்சைக்கிள்லகௌம்பிப்போறான், ஒருத்தன் — அது சரண்யாவோட அப்பா தானா?" என்றாள் பானுமதி பார்வையை மறுபடியும் பக்கத்து வீட்டுக்குச் செலுத்தி.

"இல்ல பானு. நீ சொல்றது கிருஷ்ணமூர்த்தியை. அவன் தான் பக்கத்து வீட்ல இருக்கான. ரகுவரனோட க்ளோஸ் ஃப்ரெண்ட் அவன். அதனால ரகு அவசரம்னா குழந்தையை இங்க கொண்டு வந்து விட்டுட்டு கடைக்குப்போயிடுவான். கிருஷ்ணமூர்த்தியோட அம்மா தான் பாத்துக்கறாங்க, ரகு வர்ற வரைக்கும்."

கைப்பிடிச் சுவரில் ஒரு காக்கை வந்து தயங்கி உட்கார்ந்தது. சூர்யா கையை வீசி அதை விரட்டினான்.

"இத்தனை அழுக்கா இருக்கே, குழந்தை. யாரும் கவனிச்சுக்க மாட்டாங்களா?"

"உனக்கு அந்தக் குழந்தையை கிட்ட பார்க்கணும், அவ்வளவுதானே? க மா ன், லெட்'ஸ் கோ."

பானுமதியின் முகம் பிரகாசமானது. அவசரமாய் சூர்யாவைப் பின் தொடர்ந்தாள்.

"வா சூர்யா."

கதவைத் திறந்த அம்மாள் புன்னகையை அகட்டினாள். "பானுமதின்னு சொல்லுவியே தங்கச்சி, இவதானா?"

"ஆமாம்மா. ஹாஸ்டல்ல தங்கி படிச்சிட்டிருந்தா, மெட்ராஸ்ல. இப்ப படிப்பு முடிஞ்சாச்சு. அண்ணனுக்கு சமைச்சுப் போட வந்திட்டா."

"நீயும் தான் எத்தனை நாளைக்கு வேகாத காயும், கொதிக்காத ரசமும் செய்ஞ்சு சாப்பிடுவே, பாவம்?" என்று சிரித்தாள் அந்த அம்மாள். "தங்கச்சி வந்திருக்காளேன்னு ஸ்டுடியோவுக்கு லீவு விட்டுட்டியா, சூர்யா?"

"போகணும்மா. பானுவைத் தனியா விட்டுட்டுப் போனா பொழுது போகாம தவிக்கும்னு யோசிச்சிட்டிருந்தேன்."

அவள் சிரிக்கையில் கண்ணோரங்களில் வரி வரியாய் அழகு கூடிற்று. ஒற்றைக் கல் வைரம் மூக்கில் மின்னல் கொட்டியது. வெற்றிலை அரைத்த பற்களில் காவி படிந்திருந்தது.

"எலுமிச்சை ஸர்பத் சாப்பிடறீங்களா, ரெண்டு பேரும்?"

குறுநாவல்

அட்டைப்படக் கதை

''அதெல்லாம் ஒண்ணும் வேணுங்க'' என்று சூர்யா வாய் திறக்கும் அதே நேரத்தில் வாசலிலிருந்து அந்த நாய் பந்து மாதிரி எம்பிக்கொண்டுவந்தது. பின்னாலேயே சரண்யாவும் துள்ளிக் கொண்டு வந்தது. சட்டென்று புதிதாய் இரண்டு முகங்களைப் பார்த்ததும் ஒன்றும் புரியாமல் முகத்தில் இருந்த இயல்பு போய் பயம் வந்து தொற்றிக் கொள்ள, அந்த அம்மாளின் முதுகு தேடி ஓடிற்று.

''இங்க வாம்மா சரண்யா... அங்கிளை உனக்குப் பிடிக்குமே'' என்று கூப்பிட்டான், சூர்யா. இரண்டு மருண்ட விழிகள் மட்டும் எட்டிப் பார்த்தன. பானுமதி முகத்தை எளிதாக்கிக் கொண்டாள்,

''ஆண்ட்டி என்ன கொண்டு வந்திருக்கேன் சொல்லு'' என்று இரண்டு கைகளையும் முன்னால் நீட்டினாள். இறுக மூடியிருந்த கைகளை சரண்யா தயக்கத்துடன் பார்த்தது.

''போ ராஜா... போய் என்ன வாங்கிட்டு வந்திருக்காங்கன்னு பாரு...''

மெல்ல பானுமதியின் முகத்தை மறுபடி மறுபடி ஏறிட்டுப் பார்த்துக் கொண்டு அடி மேல் அடி வைத்து வந்து அரையடி தள்ளியே நின்றது. பானுமதி மூடிய கைகளைத் திறந்து காட்டினாள்.

வலது கையிலிருந்த அழகான பழுப்புக் கிளிஞ்சல்களை ஆசையோடு பார்த்தது. இடது கையில் இருந்த சாக்லேட்டைத்தான் முதலில் எடுத்தது. எடுத்ததும் ஒரே ஓட்டமாய் மறுபடி அந்தப் பரந்த முதுகுக்குப் பின்னால் போய் ஒளிந்தது.

''இதெல்லாம் வேண்டாமா? உனக்குத்தான் இத்தனையும்'' என்றாள் பானுமதி கொஞ்சம் குனிந்து.

''திருப்பிக் கேக்க மாட்டியா?''

''மாட்டேன்... வா...''

பேப்பரை உருவிப் போட்டுவிட்டு சாக்லேட்டை வாயில் அடக்கிக் கொண்டு வந்து கவுனை விசிறியாய் தூக்கிக் காட்டியது. அந்த துணி முறத்தில் கையிலிருந்த கிளிஞ்சல்களை பலபலவென்று போட்டாள் பானுமதி.

சுமையான வேலைக்குப் பிறகு கீழே தரையில் படுத்துக் கால் பாதங்கள் தலையை விடச் சற்று உயரமாக இருக்கும்படி ஒரு ஸ்டூல் மீதோ அல்லது ஒன்றிரண்டு தலையணைகள் மீதோ அவற்றை வைத்து, அதே நிலையில் சுமார் பதினைந்து நிமிடங்கள் இருக்க வேண்டும். அப்படி ஓய்வு எடுத்துக் கொண்டால் களைப்பும், கால் அயர்ச்சியும் தீரும்.

—ஏ. கே. நாசர்.

''நான் வேணா இதை எடுத்திட்டுப் போய் குளிப்பாட்டி ஒழுங்கா டிரெஸ் செய்துக விடட்டா, சூர்யா?''

அந்த அம்மாள் சற்று யோசனையோடு பார்த்தாள். ''சரி... ஆறு பன்னெண்டு மணிக்குக்கொண்டுவந்துவிட்டுடு... அதோட அப்பன் சாப்பிடறதுக்கு வருவான்.''

''சரிங்க...'' என்றாள் பானுமதி சந்தோஷமாய். ''சரண்யா, ஓடியா... நாம போலாம்.''

அந்தக் கிளிஞ்சல்களையெல்லாம் அள்ளி கவுனில் ஒரு பை மாதிரி பிடித்துக் கொண்டு சரண்யா எழுந்து வந்தது.

* * * * *

சூரியன் உச்சி ஏறியிருந்த நேரம். பானுமதி மறுபடியும் அந்தக் கதவுகளைத் தட்டினாள். அந்த அம்மாள் தான் வந்து திறந்தாள். பானுமதியின் கையைப் பிடித்துக் கொண்டு முழங்கால் உயரத்துக்கு நின்ற சரண்யாவைப் பார்த்ததும் அவள் கண்கள் வியப்பால் ஹோவென்று விரிந்தன.

''அட... யார்ருடா இது? இத்தனை அழகாக் குளிச்சிட்டு, தலையெல்லாம் பின்னிக்கிட்டு நீட்டா பவுடர் போட்டு நெத்திக்கு பொட்டு வச்சுக்கிட்டு நான் அனுப்பிச்ச குழந்தை எங்கே பானு? இது யாரு புதுசா ஒரு குட்டி?''

''நாந்தான் பாட்டி'' என்று சரண்யா மார்பில் கைவைத்துக் காண்பித்தது. ''ஆர். சரண்யா.''

''வா... வா... உங்கப்பன் வந்து பாத்திட்டு அசந்து போயிடப் போறான். ரொம்ப கலாட்டா பண்ணிச்சா, பானு?''

''இல்லம்மா. குளிக்கத்தான் கொஞ்சம் அடம் பிடிச்சுது.''

வாசலில் மோட்டார் சைக்கிளின் 'டப் டப டப் டப' கேட்டது.

''அப்பா'' என்று கையைத் தட்டியது சரண்யா. பானுமதி தன்னிச்சையாய்த் திரும்பிப் பார்த்தாள்.

மோட்டார் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியவன் தான் காலையிலேயே பார்த்தவன். கிருஷ்ணமூர்த்தி. பின்னாலிருந்து இறங்கியவன் தான் சரண்யாவின் அப்பாவா?

ரகுவரன் பானுமதியை லஜ்ஜையோடு பார்த்துப் புன்னகைத்தான். சரண்யாவை அள்ளிக் கொண்டான். ''யாருடா உனக்குப் பின்னல்லாம் போட்டு விட்டாங்க?'' அது பானுமதியைக் காட்டியது.

''பக்கத்துவீட்டுப்பொண்ணு ரகு. மெயின் ரோடுல ஸ்டுடியோ வச்சிருக்கானே சூர்யா, அவனோட தங்கச்சி'' என்றாள் அந்த அம்மாள்.

''அப்... அப்புறம் வரேன்...''

சட்டென்று பானுமதி திரும்பி ''நான் வரேம்மா'' என்றுசொல்லி கேட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

"ஆண்ட்டி... ஆண்ட்டி" என்று குரல் வந்தது, கீச் கீச்சென்று.

அதற்குமேல் ஒரு அடி கூட வைக்க முடியவில்லை. திரும்பிப் பார்த்தாள். சரண்யா ரகுவரனிடமிருந்து திமிறிக் கொண்டிருந்தது. அப்பாவிடமிருந்து வழுக்கிக் கொண்டு இறங்கி அவளைப் பார்த்து ஓடி வந்தது. கையைப் பிடித்து இழுத்தது.

ஒரு தட்டில் வெற்றிலை, சீட்டுக் கட்டு மாதிரி பிரித்து அடுக்கப்பட்டிருந்தது. பக்கத்தில் பழைய ஸ்ரே பாட்டிலில் பாக்குத் தூள். இன்னொரு டப்பியில் வர்ண சுண்ணாம்பு. கிருஷ்ணமூர்த்தி காம்பு கிள்ளி, நரம்பு கிழித்துப் பாக்கை வைத்துச் சுருட்டி வாய்க்குள் தள்ளிக் கொண்டிருந்தான். ரகுவரன் சரண்யா ஒவ்வொரு கிளிஞ்சலாய் எடுத்துக் கொடுக்க அதை கர்ம சிரத்தையாய் வாங்கி வாங்கிச் சேர்த்துக் கொண்டிருந்தான். பானுமதி சற்றுத் தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். ரகுவரன் நிமிர்ந்தான்.

"உங்க அண்ணன் சொல்லியிருப்பாரே... அவரை நான் உயிர் இருக்கற வரைக்கும் மறக்க மாட்டேன்... அவர் தான் மாதவியை ஃபோட்டோ எடுத்துத் தந்தாரு..." அவன் குரலில் நன்றியின் கனம் அழுந்தியிருந்தது. குரல் தேய்ந்திருந்தது. பானுமதி புரியாமல் பார்த்தாள்.

"அண்ணன் ஃபோட்டோ பத்தில்லாம் ஒண்ணும் சொல்லலியே...." என்றாள், நெற்றியைச் சுருக்கி.

"ஷ்ஷ்" என்றான் கிருஷ்ணமூர்த்தி. "இப்ப மறுபடியும் மாதவியைப்பத்திப் பேச வேண்டாம் ரகு.... அப்புறம் கண்கலங்கவும் வேண்டாம்."

"யாருங்க மாதவி?" எனக்கு ஒண்ணுமே புரியலையே."

"சரண்யாவோட அம்மா" என்றான் ரகுவரன். "அவ எத்தனையோ தடவை ஆசையா ஃபோட்டோ எடுத்துக்கணுங்கன்னு சொன்னப்பல்லாம் முடியாமத் தட்டிப் போயிடுச்சு. கடைசில அவளை எப்ப ஃபோட்டோ எடுத்தோம், தெரியுமா?"

ரகுவரனின் கண்களில் நீர் திரையிட்டது.

* * * * *

மாதவி தலையைக் குனிந்து உட்கார்ந்திருந்தாள். தாவணியை இழுத்து இடுப்பில் செருகியிருந்தாள். குந்தி உட்கார்ந்து அசுர வேகத்தில் கோலம் இழுத்துக் கொண்டிருந்தாள். ரகுவரன் காலைத் தரையில் ஊன்றி சைக்கிளிலிருந்து. அவளையே வெறித்துக் கொண்டிருந்தான். மாதவி நிமிரவில்லை. கோலத்தின் கடைசி நெளிவில் கவனம் பதித்திருந்தாள். ரகுவரன் சட்டைப் பையிலிருந்து தீப்பெட்டியை எடுத்தான். விசிறி அவள் முன் எறிந்தான். கோலத்தை ஸ்பரிசிக்காமல் அது வழுக்கிக் கொண்டு போய் நின்றது. தடாலென்ற திடுக்கிடலோடு அவள் நிமிர்ந்தாள்.

ரகுவரனைப் பார்த்ததும் முகத்தில் அந்த பிரகாசம் கூடியது. மூடியிருந்த ஜன்னலைத் திறந்துவிட்ட மாதிரி. அவசரமாய் அந்தத் தீப்பெட்டியை எடுத்து ரவிக்கைக்குள் செருகினாள். ரகுவரன் பெடலை மிதித்தான்.

மாதவியின் ரத்தத்தில் வேகம் கூடியிருந்தது. மார்பு படபடத்தது. கோலத்தை முடித்த கையோடு அவசரமாய் பாத்ரூமிற்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண்டாள். தீப்பெட்டியை எடுத்தாள். திறந்தாள். வழக்கம் போல் கடிதம் இருந்தது. கடிதம் இல்லை, குறிப்பு.

மாலை 5.30. ராயல் சர்ச் —

மாலை ஐந்தரை மணி என்று கூண்டுக் கடிகாரம் கை சேர்த்த போது, மாதவி ராயல் சர்ச்சில் இருந்தாள்.

ராயல் சர்ச் வெள்ளைக்காரர்கள் காலத்தில் வெகு பிரசித்தியான மாதா கோவில் என்று அவள் அப்பா அடிக்கடி சொல்வார்.

மூன்று படுக்கைகளின் நீளம் படிகள். இருபுறமும் தொட்டிகளில் பூஞ்செடிகள். கடைசிப் படியில் மாதவி உட்கார்ந்து தூரத்தில் பார்வையைப் பதித்திருந்தபோது, எதிரில் நிழலாடிற்று.

காலை அழுத்தமாய் ஊன்றிக் கொண்டு, மற்றதை நடக்கும் யானையின் முன்கால் போல மடித்து நின்றிருந்தான்.

"ரொம்ப நேரமா வெயிட் பண்றியா, மாதவி?"

ஒரு அழுத்தமான வேரைத் தேர்ந்தெடுத்து அதில் உடம்பை இருத்திக் கொண்டான் ரகுவரன். அவனெதிரில் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு மாதவி உட்கார்ந்தாள். போட்டிருந்த மஞ்சள் நைலக்ஸ் தாவணி தனியே அழகைக் கொட்டியது. காதில் போட்டிருந்த சின்ன குடை ஜிமிக்கிகள் அவள் பேசும் போது ஒப்புதல் தந்தும், மறுத்தும் தலையை ஆட்டின. ரகுவரன் கால்களை நீட்டிக் கொண்டான்.

"நாம காத்திருந்தது போதும்னு நெனைக்கறேன் மாதவி. அடுத்த வெள்ளிக்கிழமை நீ உங்க வீட்டை விட்டு விடிகாலையிலேயே கௌம்பி வந்துடறே. நான், நீ, கிருஷ்ண

கர்ப்பிணிப் பெண் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது பஸ்ஸில் குழந்தை பெற்றுவிட்டால் அந்தக் குழந்தையின் ஆயுள் காலம் முழுவதும் இலவசமாக எந்த இடத்திற்கும் பஸ்ஸில் பிரயாணம் செய்யலாம் என்ற ஒரு சட்டத்தை சீனா செயல்படுத்தியிருக்கிறது.
—எஸ். முகம்மது யூசுப்.

மூர்த்தி மூணு பேரும் கோவிலுக்குப் போறோம். அப்புறம் நாதஸ்வரம் இல்லாம, மேளம் கொட்டாம, அய்யர் மந்திரத்தைச் சொல்லாம, நான் உன் கழுத்தில தாலியைக் கட்டறேன். கட்டி முடிச்சதும் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் போய் கல்யாணத்தை ரிஜிஸ்தர் பண்றோம். அப்புறம் நேரே நம்ம வீட்டுக்குப் போறோம்.''

''கேக்கறச்சே ரொம்ப சந்தோஷமாத்தான் இருக்கு ரகு. ஆனா இவ்வளவு ஈஸியா எல்லாம் நடந்துடும்னு நெனைக்கறீங்க?''

''யாரைப் பார்த்துப் பயப்படறே கண்ணம்மா?''

''பின்னே என்ன ரகு?என்னவோ எல்லாம் இட்டம் போட்டு ஏற்கெனவே சம்மதம் வாங்கிட்ட மாதிரில்ல பேசறீங்க? இந்தக் கல்யாணம் நடக்குதுன்னு தெரிஞ்சா, என் கழுத்துல தாலி ஏறின அடுத்த நிமிஷமே உங்களைத் தலை முழுகிடுவாங்க உங்க வீட்ல. எங்க வீட்ல வாசப்படி மிதிச்சா, காலை ஒடிச்சு பாய்லர்ல போட்டுடுவாங்க... தாலியைக் கட்டிட்டு கோவில் மண்டபத்திலேயேவா குடித்தனம் பண்ண முடியும்? உங்க அவசரம் எனக்குப் புரியுது. ஆனா இன்னும் கொஞ்ச நாள் வெயிட் பண்ணலாம். வீட்ல சமாதானம் பண்ணிப் பார்ப்போம்.''

''மாதவி... இத்தனை நாள் சொல்லாமலே வச்சிருந்த ஒரு விஷயத்தை உங்கிட்ட சொல்லப் போறேன். நீ ஆச்சரியப்பட்டுப் போயிடுவே.

''உங்க வீட்ல சம்மதிச்சுட்டாங்களா?''

''நல்ல ஆளு பாத்தியே. எங்கப்பா அவ்வளவு சீக்கிரமா கௌரவத்தையும், அந்தஸ்தையும், தள்ளி வச்சுட்டு நமக்கு பச்சைக் கொடி காட்டிடுவாராக்கும்.''

''பின்னே?''

''நம்ம வீடுன்னு நான் சொன்னது எங்க வீடு இல்லே. நமக்காகவே ஒரு வீடு பாத்து அட்வான்ஸ் கூட கொடுத்தாச்சு.''

''நி ஜம்மாவா?''

''முழுக்க சொல்லிடறேன். எனக்குன்னு இப்ப ஒருகடையை ஒதுக்கிட்டாரில்லஅப்பா? அந்தக் கடை ஆரம்பிச்ச நேரம், பிஸினஸ் பிரமாதமா களை கட்டிடுச்சு. மாசா மாசம் நாலாயிரம், அஞ்சாயிரம்னு கைல நிக்குது. நம்ம ரெண்டு பேருக்கும் போறாது?''

''அது உங்கப்பாவோட கடை இல்லே?''

''கடைல முதல் எவ்வளவு போட்டு ஆரம்பிச்சாரோ, அந்தப் பணத்தைதனியா எடுத்து வச்சிட்டேன். இப்ப முழுக்க முழுக்க கடை எனக்குச் சொந்தம். வரிசையா அலமாரில அடுக்கி வச்சிருக்கிற துணிங்க, புடவைங்க, மத்த சரக்கு எல்லாமே இப்ப எனக்குச் சொந்தம். நான் பிஸினஸ் பண்ணி லாபத்துல சேர்த்தது.''

''சொல்லவேயில்லையே நீங்க...!''

மாதவி சடாரென்று எழுந்தாள். ரகுவரனை நெஞ்சோடு இறுக்கிக் கொண்டாள்.

அவன் தோளில் முகத்தைத் தேய்த்தாள்.

கண்களில் முத்து திரண்டிருந்தது. குரல் தழுதழுத்தது.

''ரகு.... எத்தனை ஆசை உங்களுக்கு! அப்பப்ப எனக்கு சந்தேகம் வந்துடுது.''

''ஏய், என்ன சந்தேகம்?''




''இத்தனைக்கும் எனக்கு நிஜம்மா யோக்யதை இருக்குதான்னு, நான் என்ன பண்ணிட்டேன் உங்களுக்கு?''

''நான் இதை பண்றேன், பதிலுக்கு நீ அதை செய்யுன்னு பேரம் பேசறதுக்குப் பேர் காதல் இல்லே, வியாபாரம் மாதவி.''

''சொல்லுங்க.''

''நீ வீட்டை விட்டு புறப்படறச்சே உங்க வீட்டுப் பொருள் ஒண்ணு கூட உன் உடம்புல இருக்கக் கூடாது. நீ வெளியே வரச்சே கட்டிக்கற புடவை கூட வாங்கியாச்சு. கிருஷ்ணமூர்த்தி கொண்டு வந்து கொடுப்பான்.''



நான் இன்னும் அதே வீட்லதான் இருக்கேன். ஆனா யாருக்காக பார்த்துப் பார்த்து அந்த எடத்தை ஏற்பாடு பண்ணினேனோ, அவ இப்ப எங்கூட இல்ல."

ரகுவரன் மடியிலிருந்த சரண்யாவை விரல்களால் வருடிக் கொண்டே சொன்னான்.

சூழ்நிலையில் ஒரு கனமான மௌனம் தொங்கியது.

கிருஷ்ணமூர்த்தி நாற்காலி விளிம்பில் சுரண்டிக் கொண்டிருந்தான்.

பானுமதி கதவு நிலையில் சாய்ந்து நின்றிருந்தாள். ரகுவரனின் கண்களுக்குக் கீழே கரு வட்டங்கள் பிறைபிடித்திருந்தன. அடர்த்தியான தலைமயிர் சரியாய் கவனிக்காத மாதிரி வறண்டு கலைந்திருந்தது. நெடுநெடுவென்ற அவன் உயரம், கழுத்தருகே விழுந்திருந்த மிக லேசான கூன் காரணமாய்ச் சற்றுக் குறைந்து காணப்பட்டது.

"ஐ'ம் ஸாரி. என்னென்னவோ சொல்லி உங்க மூட வேற கெடுத்திட்டேன்" என்றான் ரகுவரன் தொடர்ந்து.

'அப்படியெல்லாம் ஒண்ணுமில்லீங்க' என்று அவசரமாய் மறுக்க வேண்டும் போல இருந்தாலும் பானுமதி மறுபடியும் வார்த்தை வராமல் தத்தளித்தாள்.

எதிர்பாராத அந்த கணத்தில் ரகுவரன் சடாரென்று எழுந்தான். சரண்யாவை தோளில் சாத்திக் கொண்டான். கண்களை மூடி அது தூங்க ஆரம்பித்திருந்தது.

"கிருஷ்ணா, கடைக்குப் போக நேரமாச்சு, நான் வரேன். நான் வரேம்மா. வரேங்க." கடைசி 'வரேங்க' பானுமதியைப் பார்த்து.

"குழந்தை?" என்றாள் பானுமதி அவசரமாய்.

"அதுபாட்டுக்கு கடைல வெளையாடிட்டிருக்கும். எடுத்துப் போறேன்."

சமையல் வேலை எல்லாம் முடிந்த பிறகு செய்வதற்கு ஒன்றும் இல்லை. நிமிடங்களைப் பிடித்து நகர்த்த வேண்டியிருந்தது. பானுமதி கடிகார முட்களை வேடிக்கை பார்த்து அலுத்துப் போனாள். ஒரு தீர்மானத்திற்கு வந்தவள் போல எழுந்தாள். முகம் கழுவிக் கொண்டாள். புடவை மாற்றிக் கொண்டாள்.

கதவைப் பூட்டிக் கொண்டு பக்கத்து வீட்டு கேட்டைத் திறந்து நுழைந்தாள்.



சனல் மிதியடிக்க அடியில் Glue—வினால் Paint பண்ணவும். சனல் உதிர்வதைத் தடுக்கும் மிதியடியின் ஆயுளும் நீடிக்கும்.

—ஜெயா வி. ராமன்.

கதவைத் தட்டினாள்.

உடனே தடாலென்று கதவு திறந்தது. வாசலை அடைத்துக் கொண்டு கிருஷ்ணமூர்த்தி நின்றான். பானுமதியைப் பார்த்ததும் நம்பாதவன் மாதிரி நெற்றியைச் சுருக்கினான். மலர்ந்து சிரித்தான். "வாங்க...." என்றான்.

"சும்மாத்தான்.... அம்மாவைப் பார்த்திட்டுப் போலாம்னு...."

"அம்மா டாக்டர் வீட்டுக்குப் போயிருக்காங்க..... வர்ர நேரம்தான். உள்ள வந்து உக்காருங்க."

அவன் நகர்ந்து வழிவிட்டான். 'இல்லை, அப்புறம் வருகிறேன்' என்று சொல்லி திரும்பி விடலாமா என்று ஒரு கணம் பானுமதிக்கு யோசனை ஓடிற்று. அவனை நம்பாதது மாதிரி அவமரியாதை செய்தது மாதிரி அது தோன்றிவிடுமோ என்று தயக்கமாய் இருந்தது.

கிருஷ்ணமூர்த்தி உள்ளே நகர ஆரம்பித்தான். தொண்டையை செருமிக் கொண்டான்.

"சரண்யா வரல்லே?"

"இன்னிக்கு வரலியே. அவளைப் பார்க்கத்தான் வந்தீங்களா?"

"பாத்து மூணு நாளாச்சேன்னு வந்தேன். எப்ப மறுபடி அது வரும்?"

"ரகுவரன் மறுபடியும் எப்ப கொண்டு விடுவான்னு தெரியாதே....."

"அவங்க வீடு எங்கே இருக்கு?"

"பக்கத்துலதான். ஆனா இப்ப கடைலதான் இருப்பான். சரண்யாவும் அங்கதான் இருக்கும். நான் அங்கதான் போறேன் இப்ப. அம்மா வந்தவுடன் சொல்லிட்டுக் கிளம்பலாம். இருங்க வரேன்...."

கிருஷ்ணமூர்த்தி அடுத்த வாசலில் நுழைந்து மறைந்தான்.

பானுமதி அறையைச் சுற்றிப் பார்வையைப் பரவவிட்டாள். சுவரில் வரிசையாய் கடவுள்கள் வர்ண வர்ண காலண்டர்களில் அருள் பாலித்தார்கள். தேதி காலண்டர் இரண்டு நாட்களாய் கிழிக்கப்படவில்லை என்பதைக் காட்டிக் கொண்டது.

கேட் திறக்கும் சத்தம் கேட்டது. எழுந்து வாசல்புறம் பார்த்தாள். கிருஷ்ணமூர்த்தியின் அம்மாதான்.

பத்தாவது நிமிடம் கிருஷ்ணமூர்த்தியும் பானுமதியும் தெருவில் இருந்தார்கள். பானுமதிக்கு ஈடு கொடுக்க அவன் வேகத்தைக் குறைத்துக் கொண்ட மாதிரி இருந்தது.

"எத்தனை நாள் காம்ப் இங்கே?" என்று கேட்டான் கிருஷ்ணமூர்த்தி, மௌனத்தை உடைத்து.




Imageads M- 1808

குழந்தைகளின் ஜீன்ஸ் உடை புதிதாக இருக்கும் போதே உடையின் முழங்கால் பாகத்தில் உட்பக்கம், சிறிய துண்டு துணி யைத் தைத்துவிட்டால், ஜீன்ஸ் சீக்கிரம் கிழிந்து போகாமல் இருக்கும்.

''நான் கணக்குல்லாம் இல்லே. இனிமே இங்கதான்'' என்றாள் பானுமதி.

கிருஷ்ணமூர்த்தி சொன்ன மாதிரி தெரு திரும்பியதுமே கடை இருந்தது, ரகுவரன் வாசலைப் பார்த்து உட்கார்ந்திருந்தான். இவர்கள் இருவரையும் பார்த்ததும் எழுந்து வாசலுக்கு வந்தான்.

''சரண்யாவை பாக்கணும்னுங்க...'' என்றான் கிருஷ்ணமூர்த்தி பானுமதியைச் சுட்டிக் காட்டி.

''உள்ளாற தூங்கிட்டிருக்கு..... வாங்க.''

கண்ணாடி முகமிட்ட அலமாரிகளில் துணி வகைகள் நின்றிருந்தன. படுத்திருந்தன. வெளிவால்களாய்த் தொங்கின. இரண்டு வேட்டி கட்டிய ஆசாமிகள் வேடிக்கை பார்த்தனர். கவுண்டர் அமைப்புக்குப் பின்புறம் இருந்த கதவைத் தள்ளித் திறந்தான் ரகுவரன்.

''சரண்யா யாரு வந்திருக்காங்க, பாரு''

சரண்யா ஒரு முழு நீள பஸ்ஸை பாகம் பாகமாய் பிரித்து வைத்துக் கொண்டிருந்தது. பானுமதியை பார்த்ததும் 'ஆண்ட்டி' என்று குரல் எழுப்பியது.

சரண்யாவைப் பார்த்து பானுமதி திடுக்கிட்ட மாதிரி இருந்தது. நெற்றியிலும், மூக்கோரமும் அழுக்காய் தெருப்புழுதி மாதிரி ஒஷியிருந்தது. புதிதாய் பாவாடை கட்டியிருந்தாலும் வெளியே தெரிந்த பாதங்களில் வெகு அழுக்காய் சேறு காய்ந்து போயிருந்தது. அன்றைக்குப் பார்த்த மாதிரியே தலை குப்பையாய் கலைந்திருந்தது. அது ஓடி வந்து பானுமதியை முழங்கால்களில் கட்டிக் கொண்ட போது, ரகுவரன் பிடித்து இழுத்தான்.

''ஆண்ட்டி புடவையை அழுக்காக்கிடப் போறே....''

''பரவால்லே.... குழந்தைதானே....'' என்று பானுமதி சாக்லேட் பொட்டலத்தை அதனிடம் நீட்டி அதன் முகத்து பிரகாசத்தை ரசித்தாள். ''இன்னிக்கு குளிக்கலேயா, சரண்யா?''

''இல்லே.''

''ஏன்?''

''எங்கே குளிக்கிறது? தண்ணியைப் பாத்தாலே எகிறி எகிறி குதிக்குது. கைக்கு அகப்படாம ஓடுது. இது கூட போராடி சரி பண்ண எனக்கு நேரம் போற பட்டேங்குது. குளிச்சு ரெண்டு நாளாச்சு.''

''அய்யய்யோ... ஷேம் ஷேம்....'' என்றாள் பானுமதி. ''ஆண்ட்டி கூட வரியா, குளிப்பாட்டி அழகா ட்ரெஸ் பண்ணி விடறேன்''

''போறியா?''

''சைக்கிள் தருவியா?'' என்று கேட்டது முகத்தை வெகு மும்முரமாய் வைத்துக் கொண்டு.

''தருவாங்க.... போறியா?'' கிருஷ்ணமூர்த்தி அதை எடுத்துக் கொண்டான்.

''ம்.''

''நான் எடுத்திட்டுப் போறேங்க... கடையிலேயே சாயந்தரம் கொண்டு வந்து விட்டுடறேன்.''

''எதுக்குங்க உங்களுக்கு வீண் சிரமம்?''

''எனக்கும் பொழுது போகணுமே.''

ரகுவரன் கொஞ்சம் தயங்கி விட்டு, ''சரி எடுத்திட்டுப் போங்க. ரொம்ப கலாட்டா பண்ணிச்சுன்னு கொண்டாந்து விட்டுடுங்க'' என்றான்.

அன்றைக்கு அப்படி ஆரம்பித்ததுதான்.

சரண்யாவுக்கு பானுமதியைப் பார்க்காமல் நேரம் நகராது என்னும் அளவிற்கு ஒரே வாரத்தில் நன்றாய் ஒட்டிக் கொண்டது. முதலில் யோசித்துவிட்டு, அப்புறம் ஒரு சமாதானம் ஆகி ரகுவரன் காலையில் கடை போகும் வழியில் அதைக் கொண்டு வந்து இங்கே விட்டுப் போவது வாடிக்கையானது.

'பி.எஸ்ஸி. படிச்சுட்டு நல்ல ஆயா வேலை பாக்கறே நீ'' என்று சூர்யா கூட கேலி செய்தான்.

பானுமதி தையல் மிஷினில் டகடக வென்று சரண்யாவுக்காக புதுத் துணியை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

சரண்யா எதிரே வந்துநின்றது. ''ஆண்ட்டி இது என்னது?''

பானுமதி நிமிர்ந்து பார்த்து அதிர்ந்தாள். சரண்யாவின் கையில் ஒரு காமிரா. சூர்யா நினைவு மறதியாய் வெளியேயே வைத்துவிட்டுப் போய் விட்டானா?

''போத்தோ எடுக்கறதுதானே?

நான் உன்னே எதுக்கறேன்.''

''இன்னைக்கு வேணாம்... ஆண்ட்டி நல்லாவே டிரெஸ் பண்ணிக்கலே. நாளைக்கு எடுக்கலாம் என்ன?''

''எங்கம்மா மாதிரியா?''

''உங்கம்மாவை ஃபோட்டோ எடுத்தாங்களா?''

''ஓ... சாமி ரூம்லே மாத்தியிருக்கே, நீ பாக்கலே.''

பானுமதிக்கு பார்க்க வேண்டும் என்று ஆசையாய்த்தான் இருந்தது. ஆனால் வீட்டிற்கு வா என்று ரகுவரன் இன்று வரை கூப்பிடவில்லை. எப்படிப் போவது?

அந்த ஃபோட்டோ பற்றி சூர்யா சொன்னதிலிருந்து துடிப்பு இருந்தது.

''நான் எப்படிப் பாக்கறது? நீதான் உங்க வீட்டுக்கு அழைச்சிட்டே போகலேயே?''

''ஸாரிங்க'' என்றான் ரகுவரன். ''வீட்டுக்குக் கூப்பிடணும்னே எனக்குத் தோணும

போய்டிச்சு பாருங்க.... வாங்க, இன்னைக்குப் போலாம்."

"அண்ணன் வந்தவுடனே கௌம்பலாம். நீங்க வேணு மொதல்ல போங்க. நான் அப்புறம் வரேன்" என்றான் பானுமதி.

"அவசரம்என்ன?சூர்யா வரட்டும்.சொல்லிட்டே போகலாம்."

"காப்பியை சாப்பிடுங்க."

ரகுவரன் காப்பியை எடுத்துக் கொண்டான். மெல்ல உறிஞ்சிக் குடித்தான்.

"எனக்கு?" என்று அவன் பாண்டடைப் பிடித்து இழுத்தது சரண்யா. ஒரு ஸ்பூன் போல அதன் வாயில் விட்டான் ரகுவரன்.

"மாதவிக்குக் கூட காஃபின்னு உசிரு... ஒரு நாளைக்கு நாலு காஃபி ஓடும்." என்றான் ரகுவரன் கண்களை மூடிக் கொண்டு.

"அவங்களைப் பத்தி நீங்க அப்புறம் சொல்லவேயில்லையே...." என்றான் பானுமதி.

அந்த வெள்ளிக்கிழமை சூரியன் கூட மாதவிக்கு அப்புறம்தான் எழுந்தான். கடிகாரம் நான்கு மணி என்று மணி அடித்து ஓய்ந்த நேரம். மாதவி பாத்ரூமில் நுழைந்தாள். தண்ணீரை மொண்டு எடுத்தால் சப்தம் வருமே என்று நுனி விரல்களை தொட்டுத் தண்ணீரில் தோய்த்து, தூங்காத கண்களை ஈரத்தால் துடைத்துக் கொண்டாள். ரவிக்கையைக் களைந்தாள். புடவையைக் களைந்தாள். மடித்து கம்பிக் கொடியில் போட்டாள். கொண்டு வந்திருந்த புது ரவிக்கையை அணிந்து கொண்டாள். புதுப் புடவையை எடுத்தாள். இடுப்பில் சுற்றிக் கொண்டாள். காதில் இருந்த தோடுகளை அவிழ்த்தாள். கழுத்திலிருந்த மெல்லிய சங்கிலியை தலை வழியே வெளியேற்றினாள். சோப் வைக்கும் பெட்டியில் பத்திரப்படுத்தினாள்.

மெல்ல அடியெடுத்து வைத்து வெளியே வந்தாள்.

எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அம்மாவின் வாய் கொஞ்சமாய் திறந்திருந்தது. புர் புர் என்று குறட்டை விடு தலையானது. அம்மாவின் மேல் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு சின்னவன் ரத்தினம் படுத்திருந்தான். அப்பா வழக்கம்போல ஜன்னலை ஒட்டிய கட்டிலில் ஒருக்களித்திருந்தார்.

சுமார் 25 அல்லது 30 சென்டிமீட்டர் நீளமுடைய மெழுகுவர்த்தியை ஏற்றி, அதிக ஆழமில்லாத, அகலமான நீர் நிறைந்த பாத்திரத்திலே வைத்து முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன் வைத்தால், அதிக வெளிச்சம் கிடைக்கும்.

மனதில் ஒரு குற்ற உணர்வு கூடப் படியவில்லை. எண்ணெய் போடாத தாள் சப்திக்குமே என்று பயமாயிருந்தது. மெதுவாய் கொஞ்சம் கொஞ்சமாய் நகர்த்தினாள் கதவைத் திறந்ததும் எதிரே அவர்கள் தெரிந்தார்கள். மோட்டார் சைக்கிளோடு கிருஷ்ண மூர்த்தியும் ரகுவரனும் நின்றிருந்தார்கள். நின்றிருந்த இடம், அப்பாவின் கட்சிக்கொடி ஏற்றி வைத்த கம்பம் இருந்த மேடை அருகே.

"வா.... வா" என்கிற மாதிரி ரகு சைகை செய்தான்.

அவள் கடைசியாய் வீட்டிற்குள் திரும்பிப் பார்த்தாள். அதிர்ந்து போய் உறைந்தாள். சரவணன் கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார்.

"எங்கேடி கிளம்பிட்டே, ஓடுகாலி?" என்று ஒரே உதறலில் போர்வையை விலக்கி விட்டு எழுந்தார்.

மாதவி வெகு அவசரமாய்ப் படி இறங்கினாள். முகம் தண்ணீர்ப் பந்தை அழுத்திய மாதிரி வியர்த்துவிட்டது. தெருவைக் கடந்து அவர்களருகே ஓடி நின்றாள்.

"அப்பா முழிச்சுக்கிட்டார் ரகு". என்று மூச்சிரைத்தாள்.

"சொல்லிட்டே போலாம். பயப்படாதே மாதவி."

"எழுந்திருடி பொணமே.... பெத்துப் போட்ட பொண்ணு இருட்டோட வீட்டை விட்டே ஓடுறா.... நீ சொப்னம் கண்டுகிட்டு தூங்கிட்டிரு" என்று மனைவியை எட்டி உதைக்க அவளும் பதைத்துக்கொண்டு எழுந்தாள்.

"டேய்பொறுக்கிங்களா...." என்று ஆவேசம் வந்தவர் மாதிரி வாசலில் வந்து இரைந்தார். "இந்த தெருப் பக்கமே தலை வச்சுப் படுக்கக்கூடாதுன்னு அடிச்சு வெரட்டினதை மறந்திட்டீங்களா முட்டாப் பசங்களா?"

"ஷ்.... ஷ்" என்று வாயில் விரல் வைத்தான் ரகுவரன். "இது உங்க கட்சி மீட்டிங் இல்லை. கத்தறதையெல்லாம் கேட்டுக்கறதுக்கு. உங்க பொண்ணுக்கு பதினெட்டு வயசு எப்பவோ தாண்டியாச்சு. சுதந்தரமா தனக்கு இஷ்டப்பட்டவனைக் கட்டிக்கறதுக்கு உங்க கவர்மெண்டுல சட்டம் இருக்குது. உங்க வீட்டுப் பொருள் எதையும் தூக்கிகிட்டு அவ வந்திடலை. கட்டியிருக்கிற புடவை கூட நீங்க வாங்கிக் கொடுத்ததில்லை. அநாவசியமா கூச்சல் போட்டு கூட்டம் சேர்க்கறதில அர்த்தமில்லை.... நீங்களும் கல்யாணத்துக்கு வாங்க. ஆசிர்வாதம் பண்ணுங்க."

"கல்யாணமா? எப்படி நடக்குது பாத்திடலாம்" சரவணன் உதறிக் கொண்டிருந்தார். கோபம் குமுறிக் குமுறி வந்தது.

மோட்டார் சைக்கிளில் மூன்று பேருமாய ஒண்டிக் கொண்டார்கள்.

"மாதவி...." சரவணன் கத்தினார். "பெத்த அப்பன் பேச்சை எதிர்த்துகிட்டு நீ இப்ப கௌம்பினே, இன்னியோட நம்ம உறவு




மிகப் புதியதான காஸ்கட்
ரிலீஸ் ஸிஸ்டம்
MAJESTIC
இந்தியாவின்
100% பாதுகாப்பான
பிரஷர் குக்கரை
உருவாக்குகிறது
உங்கள் நேரம், பணம், எரிபொருள் மூன்றும் தொடர்ந்து மிச்சப்படுகின்றன.
உணவின் மணமும், ருசியும் மாறுமலும் வைட்டமின்கள் சக்தி குறையாமலும் பாது காக்கப்படுகிறது.
3 லிட்டர் முதல் 12.5 லிட்டர் வரை உள்ள மெஜெஸ்டிக் குக்கர்களும், அவை சம்பந்தப்பட்ட இதர பாத்திரங்களும் அலுமினியம் மற்றும் எவர் சில்வரில் கிடைக்கின்றன.
MAJESTIC
PRESSURE COOKER
G.R.
System
எங்கள் மற்றைய பிரபலமான
விசில் செய்யும் சமையலறைத் துணைகள்.
IS:1660
19000
ரைஸ் குக்கர்
மில்க் பாய்லர்
இட்லி குக்கர்
பிரஷர் பான்
DISTRIBUTORS FOR
TAMILNADU
Naik BROTHERS
56, Purushwalkam High Road, 1st floor, MADRAS –7 Phone : 662965 661034

உங்கள் குழந்தைக்கு

# நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்க

## தடுப்பு ஊசிகள் போட்டு விட்டீர்களா?




**தடுப்பு ஊசிகளைத் தவறாமல் போடுங்கள்.**

மதுரை, கோயம்புத்தூர் பெரியார், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் தடுப்பு ஊசி முனைப்பு இயக்கம் இப்போது நடைபெறுகிறது.

கிராமங்களுக்கு அருகிலுள்ள,
முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுக் கூடம்,
அல்லது சுகாதார நிலையங்கள்

தொடர்புப் பிரிவு:
தமிழ்நாடு ஒருங்கிணைந்த
ஊட்டச்சத்துத்திட்டம்
570, அண்ணா சாலை, சென்னை:600 018.

DIPR-1021-85-EP

முறிஞ்சதுன்னு நான் உனக்கு தலை முழுகிடு வேன். இன்னொரு தரம் இந்த வீட்டு வாசல்ல நீ தலைவக்க விடமாட்டேன்.''

மாதவி பதில் பேசாமல் தலைகுனிந்திருந் தாள்.

மாதவியின் அம்மா பேச்சு வராமல் வாச லிலேயே நின்றிருந்தாள். கண்களில் அதிர்ச் சியும் நம்பிக்கையின்மையும் உறைந்திருந்தன. அழுகை கூட மறந்து போயிருந்தது.

மோட்டார் சைக்கிள் தடதடவென்று விழித்தது. விரைந்தது.

கல்யாணம் முடிந்த கையோடு புது வீட்டில் கிருகப்பிரவேசம். வாசலில் மாவிலை கட்டியிருந்தது. சற்று கோணலாய் மாக் கோலம் தரையெங்கும் இறைந்திருந்தது.

''நானே போட்டேன் மாதவி.''

மாதவிக்கு கண்கள் நிறைந்திருந்தன. ரகு வரனின் புஜத்தை இறுக்கமாய்ப் பற்றிக் கொண்டு மெல்ல மெல்ல கால் தேய்த்து நடந்தாள். கிருஷ்ணமூர்த்தி கட்டிலில் மெத் தைகளை சரிப்படுத்தி, போர்வைகளை விரித் துப் போட்டு ஏற்பாடு செய்து கொண்டிருந் தான்.

நுழைந்தவுடன் மாதவிக்குப் பிடித்த வெங் கடாஜலபதி, அலமேலு தாயார் படங்கள். மூன்று பேர் உட்கார்கிற நீளமான சோஃபா. எதிரில் மடக்கிப் போடும் ஜாதியில் இரண்டு நாற்காலிகள். கண்ணாடி அலமாரியில் அழ கழகான குழந்தை பொம்மைகள். பூ அலங் கார ஜாடிகள். சாப்பாட்டு மேஜையின் கால் கள் மரத்தில் குடைந்து ஒரு கலையுணர்வோடு பளபளவென்ற மேஜைப் பரப்பை தாங்கி யிருந்தன. சமையலறையுள் இரண்டு ஸ்டவ் கள், மண்ணெண்ணெய் நிரப்பிய பெட் ரோல் டப்பாக்கள். அலமாரி நெடுகபிளாஸ் டிக் டப்பாக்களில் சமையலுக்கு வேண்டிய அத்தனை சாமான்களும். அம்மி, குழவி, கல்லு ரல், கதவுக்குப் பின்னால் சுவர் மூலையில் தென்னந் துடைப்பம்....

ரகுராமன் எதையுமே மறந்துபோகவில்லை.

மேஜையில் காரியர் சாப்பாடு காத்திருந் தது.

''எனக்கு ஒரே ஒரு ஆசைதாங்க.''

''என்ன மாதவி?''

''நாளைக்கு நம்ம கொழுந்தைங்க கிட்ட காட்டறதுக்கு நாம மாலையும் கழுத்துமா ஒரு ஃபோட்டோ எடுத்திட்டிருக்கலாம்.''

கொஞ்ச நேரம் மௌனம் நிலவியது. கிருஷ்ணமூர்த்தி எழுந்தான்.

''நான் போய் அழைச்சிட்டு வரேண்டா..''

''உக்காருடா'' என்றான் ரகுவரன் அவ னைக் கையமர்த்தி. ''இன்னிக்கில்லாட்டி என்ன? நாளைக்குப் போய் எடுத்துக்கிட்டா போச்சு.''

''ஆமாமா....'' என்று கிருஷ்ணமூர்த்தி சிரித்தான். ''இன்னிக்கு வேற எத்தனையோ முக்கிய வேலை எல்லாம் இருக்கே.''

மாதவி சிவந்து போனாள்.

7

''அன்னிக்கு ஃபோட்டோ எடுக்காம விட்டது தப்பாப் போச்சு....'' என்றான் ரகு வரன், மேலே சுற்றிக் கொண்டிருந்த மின் விசிறியைப் பார்த்துக் கொண்டே.

பானுமதிக்கு சூர்யா ஏற்கனவே சொல்லி யிருந்தாலும், மாதவி பற்றி ரகுவரனே சொல் லட்டும் என்று விட்டாள்.

''அடுத்த நாளே அவளுக்கு ஜுரம் வந் திடுச்சு. ஒரு வாரம் படுக்கையிலே கெடந்தா. உடம்பு தேஞ்சு போயிடுச்சு. அப்புறம் எடுத் துக்கலாம்னு ஃபோட்டோ விவகாரத்தைத் தள்ளிப்போட்டோம். அது தள்ளித்தள்ளியே போயிட்டது.''

''சரண்யா மேலே அவங்கம்மாவுக்கு ரொம்பப் பிரியமா?'' என்று கேட்டாள்.



கேன்வாஸ் ஷூவை சோப்புப் போட்டுச் சுத்தம் செய்துவிட்டு, ஷூவின் கால்விரல்கள் பகுதியில் சிறிய, மிருதுவான, அதாவது கரடுமுரடில்லாத கற்களை வைத்து விட்டால், ஷூ உலரும் போது, ஷூவின் வடிவம் பாதிக்கப்படாமலிருக்கும்.



''பிரியம்னு அப்படி இப்படி இல்லை. கொள்ளைப் பிரியம். ஆனா சரண்யாவை அவ வயித்தில சொமந்துகிட்டிருந்தப்போ அவளுக்கு இருந்த வேதனை கொஞ்ச நஞ்ச மில்லை. எல்லா பொண்ணுங்களுக்கும் இருக் கற மாதிரி பிள்ளைத் தாய்ச்சியா இருக்கறப்ப அம்மா வீட்டுக்குப் போய் சீராடணும்னு அவளுக்கும் ஒரு ஏக்கம் வந்திடுச்சி. எங்கிட்ட சொல்றதுக்கு மொதல்ல கூச்சப்பட்டா. அப் புறம் கூச்சத்தை விட்டு சொன்னா. கிருஷ்ண மூர்த்திதான் பாவம் அவங்க வீட்டுக்குப் போனான். மாதவியோட அப்பா அவனை வாசல்லயே நிறுத்தி வச்சு திருப்பி அனுப் பிச்சிட்டாரு.

அவளை ஆஸ்பத்திரிக்கு அழைச் சிட்டுப் போனது, பத்தியம் சமைச்சுப் போட் டது எல்லாம் நான்தான். மொதல்லலாம் கிருஷ்ணமூர்த்தி எங்களுக்கு எவ்வளவோ ஹெல்ப் பண்ணினான். அவங்கம்மா எங்க கல்யாணத்தை தப்புன்னு சொன்னாங்க. மாதவி போனதுக்கப்புறம்தான் எல்லாருக் குமே எம்மேல திடீர்னு பாசம் வந்திடுச்சி..''

"அவங்களுக்குள்ளை உடம்புக்கு?" பானு மதி சிணுங்கும் சரண்யாவைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே கேட்டான்.

"சரண்யாவுக்கு எட்டு மாசம் இருக்கும். மாதவி மறுபடியும் கர்ப்பமாயிட்டா. அவ்வளவு அவசரமா அடுத்தது வந்திட்டா சரண்யா மேல காட்டற பாசம் கொறைஞ்சு போயிடுமோன்னு அவளுக்கு ஒரு பயம் வந்திடுச்சு. யோசிச்சு யோசிச்சு அது வேண்டாம்னு தீர்மானம் செஞ்சா. அங்கதான் அவளுக்கு எமன் காத்திட்டிருந்தான். அபார்ஷன் பண்ணி ரெண்டாம் நாளே மாதவி என்னையும் சரண்யாவையும் அநாதரவா விட்டுட்டுப் போயிட்டா...." ரகுவரனின் குரல் கரகரத்துப் போனது.

"அன்னிக்குத்தான் சூர்யாவைத் தேடிக்கிட்டு நான் வந்தேன்...."

அத்தனை அசந்தர்ப்பமான நேரத்தில் கதவு இடிபடும் என்று சூர்யா எதிர்பார்த்திருக்கவில்லை. வெளியே சீற்றமும், கோபமுமாய் காற்று, மழை. கதவைத் திறந்ததும் சிலீரென்ற குளிரும் மழைச்சாரலும் அவன் முகத்தில் அறைந்தன.

துணிகளிலுள்ள வியர்வை நாற்றம், கறைகளைப் போக்க, விளிகர் மிகச் சிறந்தது. துணிகளைத் துவைப்பதற்கு, நீரில் நனைக்கும் முன்பு வியர்வை பட்ட இடங்களிலும், கறை பட்ட இடங்களிலும், சிறிது விளிகரைத் தடவி விட்டுப் பிறகு நனைத்துத் துவைத்தால், நாற்றம், கறை, மாயமாகும்.

கொட்டும் மழையில் குடை கூட இல்லாமல் அரையிருட்டில் ரகுவரன் நின்றிருந்தான்.

"சூர்யாங்கறது நீங்கதானே? மெயின் ரோடுல ஸ்டுடியோ வச்சிருக்கிறது....?" வாயைத் திறந்தவுடனேயே அவனுடைய பற்கள் தந்தியடித்தன.

"ஆமா.....உள்ள வாங்க....மழைல நனைஞ்சுக்கிட்டு ஏன் நிக்கறீங்க?" என்று சூர்யா அவசரமாய் முழுக்கதவையும் திறந்தான்.

"சூர்யா.... நீங்க உடனே என்னோட கௌம்பி வரணும், ப்ளீஸ்....."

"என்ன சார் நீங்க. ராத்திரி பன்னெண்டு மணிக்கு மேல கொட்ற மழைல என்னை எங்கே கூப்பிடறீங்க?"

சூர்யா ஆச்சரியம் கலந்த குரலில் கேட்டான்.

"காமிராவை எடுத்துக்குங்க சூர்யா. நீங்க எனக்காக இப்ப ஒரு ஃபோட்டோ எடுக்கணும். நான் குடை கூட எடுத்துக்காம கௌம்பிட்டேன்... ப்ளீஸ் வாங்க சூர்யா."

"ஃபோட்டோதானே? காலைல எடுத்தாப் போச்சு. இதுக்காகவா இந்நேரத்துல மழைல வந்தீங்க?"

"காலைல முடியாது சூர்யா. என் வொய்ஃப் விடியற வரைக்கும் காத்திருக்கமாட்டா..."

சூர்யா குழப்பமாய்ப் பார்த்தான். ரகுவரனை அவ்வப்போது பக்கத்து வீட்டிற்கு அவன் வரும்போது பார்த்திருந்தான். அவனைப் பற்றியும், மூராவுனை அவன் திருமணம் பற்றியும் அறிந்திருந்தான். முதல் தடவையாய் கொஞ்சம் பயம் அப்பியது.

"உங்க மனைவிக்கு என்ன ஆச்சு சார்?"

"அரை மணி நேரத்துக்கு முன்னால என் மடில அவ உயிர் பிரிஞ்சிடுச்சி சூர்யா... கல்யாணத்தப்பவே ஒரு ஃபோட்டோ எடுக்க முடியாம போச்சு. இன்னிக்கி வரைக்கும் அதுக்குச் சரியான சந்தர்ப்பமே கெடைக்கலே.... இன்னிக்குநான் விட்டுட்டா இனிமே ஒரு சந்தர்ப்பமும் கெடைக்காது, ப்ளீஸ்."

சூர்யா அவசர அவசரமாய் குடையையும், காமிராவையும், ஃப்ளாஷையும் எடுத்துக் கொண்டான். வீட்டைப் பூட்டினான்.

"வாங்க போலாம்" என்றான்

"அந்த ஃபோட்டோதான் இப்பவும் பூஜை ரூம்ல மாட்டி வச்சிருக்கேன்." என்றான் ரகுவரன் எழுந்து ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு.

பானுமதிக்கு நினைக்க நினைக்க பிரமிப்பாய் இருந்தது. முதுகு காட்டி நின்றவன் மேல் அதீதமான வாஞ்சை ஏற்பட்டது. அவனுடைய துக்கத்தின் நேர்மை அவளை கலக்கிற்று.

"ஐ'ம் ஸாரி...." என்று கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பினான் அவன். குனிந்து சரண்யாவை அள்ளிக் கொண்டான் முகத்தில் அழுந்த துடைத்துக் கொண்டான்

"நாளைக்கு என் வீட்டுக்கு வாரீங்க" என்று சொன்னான். "நான் வரேங்க" என்று கதவைத் திறந்து தெருவில் இறங்கினான்.

"ஆண்ட்டி வந்தாச்சு...."

சரண்யா கூரை வரை குதித்தது. ரகுவரன் சந்தோஷம் பொங்கி வழிய புன்முறுவல் காட்டினான். "வாங்க.... வாங்க"

கிருஷ்ணமூர்த்தி சுவாதீனமாய் உள்ளே நுழைந்து சோஃபாவில் ஒரு ஓரமாய் உட்கார்ந்தான்.

''ஆண்ட்டி எனக்கு என்ன வாங்கித்து வந்தீங்க?''

''மல்லிப்பூ.....''

''சாக்லேட்?''

''ஒழுங்கா தலையைப் பின்னிக்கிட்டு பூவையும் வச்சுகிட்டா சாக்லேட் உண்டு.''

''அப்ப பின்னி விடுங்க ஆண்ட்டி.''

''என்ன சாப்பிடறீங்க?'' என்று கேட்டான் ரகுவரன். ''காஃபி? போர்ன்விடா?''

''சமையலறை எங்கே இருக்கு?''

''எதுக்குங்க?''

''நான் போய் கலந்து எடுத்திட்டு வரேன்... உங்களுக்கெல்லாம் என்ன வேணும் சொல்லுங்க....''

''ஆண்ட்டி எனக்குப் பின்னுங்க...''

''வந்திட்டேன் கண்ணு... மொதல்ல நீ பால் சாப்பிடுவியாம். அப்புறம் பின்னி விடுவேனும். ஆண்டிக்குக் கிச்சன் எங்கே இருக்குன்னு காமி.....''

''ஓ காத்தறேனே ....''

சரண்யா தரையில் எறிந்த பந்து மாதிரி துள்ளிக் கொண்டு போயிற்று. அடுத்த கூடத்தைத் தாண்டியதும் பானுமதி நின்று விட்டாள்.

எதிரில் இருந்த ஃபோட்டோ அவளை ஆணியடித்து நிறுத்தியது.

''அதுதான் எங்கம்மா'' என்றது சரண்யா சுட்டிக்காட்டி.

கம்பீரமான நாற்காலியில் மாதவி விறைத்து உட்கார்ந்திருந்தாள். இடது பக்கம் கொஞ்சமாய் தலை சாய்ந்திருந்தது. கைகள் கைப்பிடிகளில் பதியாமல் நீண்டிருந்தன. கண்கள் மூடியிருந்தன. நெற்றியில் பெரிய சிகப்புப் பொட்டு. மடியில் எட்டு மாத சரண்யாக்குட்டி. அவளின் வலதுபுறம் ரகுவரன் நின்றிருந்தான். மலைப்பாதையில் வண்டி இழுத்த மாதிரியான அயர்வு முகத்தில். தலையில் ஈரம் காயாமல் கூந்தல் அழுந்தியிருந்தது. அன்றைய மழை பற்றி சூர்யா சொன்னது நினைவுக்கு வந்தது.

திடீரென்று அவள் காதுகள் கவனமாயின.

''பானுவைப் பத்தி நீ என்ன நெனைக்கறே ரகு?'' என்று கிருஷ்ணமூர்த்தியின் கிசுகிசுப்பான குரல்.

''சரண்யா மேலே உசிரையே வச்சிருக்கா டா க்ருஷ்ணு.''

''வாங்க ஆண்ட்டி, கிச்சன் போலாம்'' என்று சரண்யா கை பிடித்து இழுத்தவுடன் பானுமதி மற்ற வார்த்தைகளைக் கேட்க முடியாமல் உள்ளே போனாள்.

அன்றைக்கிரவு வெகு நேரம் தூக்கம் வராமல் பானுமதி புரண்டு கொண்டிருந்தாள்.

''பானு ....'' பக்கத்துப் படுக்கையிலிருந்து சூர்யாவின் குரல் வந்தது. ''தூங்கிட்டியா?''

''இல்லே சூர்யா, ஏன்?'' என்று இருட்டில் பதிலை நழுவ விட்டாள்.

''உனக்கு ரகுவைப் பிடிச்சிருக்கா பானு?''

''ஏன் கேக்கறே?''

''சொல்லேன்.''

''பிடிச்சிருக்குன்னு சொல்றதை விட பாவமாயிருக்குன்னு சொன்னா சரியா இருக்கும். செத்துப்போன மாதவி மேல அவர் இன்னிக்கும் வச்சிருக்கிற அன்பு பிரமிப்பாயிருக்கு. சரண்யாவை சரியாப் பாத்துக்க முடியாம அல்லாடறச்சே, பேசாம வீட்டோட சமைதானமாப் போயிருக்கலாமேன்னு கோபமாயிருக்கு.''

''நான் சொல்றேன்னு தப்பா நெனைச்சிக்க மாட்டியே?''

''என்ன சூர்யா?''

''உனக்கோ சரண்யாவைப் பிடிச்சிருக்கு. ரகுவுக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. ஒரு பொம்பிளைத் துணையில்லாம அவன் கஷ்டப்படறதைப் பாக்கறப்போ, நீயே ஏன் அவனை கல்யாணம் செய்துக்கக் கூடாதுன்னு தோணுது....''

பானுமதியிடமிருந்து மூச்சு சப்தம் மட்டும் வந்தது. என்னவோ யோசிக்கிற மாதிரி நீளமாய் மௌனம் விழுந்தது.

''என்ன பானு, உனக்கு இஷ்டமில்லையா?''

''அப்படியில்லே சூர்யா.... நீ ரகுவை மொதல்ல கேட்டுடறது நல்லது.....''

''ரகு ரொம்ப லக்கி பானு. நாளைக்கே நான் அவன்கிட்டப் பேசறேன்...''

மறுநாள் பானுமதி படியிறங்கவில்லை. சரண்யாவைப் பார்க்கப் போகவில்லை. ரகுவரனைக் காண நகரவில்லை.

11

மூன்று நாளாயிற்று ரகுவரனைப் பார்த்து. அவனைப் பார்க்கக் கிளம்ப வேண்டும் என்று நினைக்கும் நேரத்தில் கடையிலிருந்து ஒரு பையன், சரண்யாவைப் பின்னால் வைத்து சைக்கிள் ஓட்டி வருவான்.

''மொதலாளி விட்டுட்டு வரச் சொன்னாரு.''

''ஆண்ட்டி'' என்று கைகளை விரித்துக் கொண்டு சரண்யா ஓடி வந்து தழுவிக்

நாம் பயன்படுத்தும் சமையல் எண்ணெய்களை மூன்று மாதம் வரைதான் வைத்து இருந்து உபயோகிக்கலாம். அதற்குமேல் அதனை வைத்து பயன்படுத்தினால், அதிலுள்ள உயிர்ச் சத்துக்கள் எல்லாம் அழிந்துவிடும். அதே நேரம் அந்த எண்ணெயில் அமிலத் தன்மையும் கூடிவிடும். இது உடம்புக்கு மிகவும் கெடுதி.

— என். மதுபாலன்

கொள்ளும். சூரியன் இறங்கும் நேரத்தில் அதே பையன் வந்து குழந்தையை அள்ளிச் செல்வான்.

'அவசரப்படாம இரு, பானு. அவன் ஒரு தீர்மானத்திற்கு வரட்டும்' என்று. சூர்யா ஆறுதலான குரலில் சொல்வான்.

சூர்யா அந்த எண்ணத்தை விதைத்ததி லிருந்து ஒரு அநாவசியமான முள் வந்து ஒட்டிக் கொண்டு விட்டதே என்று கூட எண்ணம் ஓடியது:

மூன்றும் நாள் காலை சரண்யா வந்தாள். மாலை கடைப் பையன் வந்த நேரம் பானுமதி அதற்கு மையிட்டுக் கொண்டிருந்தாள்.

''அம்மா .... மொதலாளி இந்த கடுதாசை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னாருங்க'' என்று கடைப் பையன் ஒரு நான்காய் மடித்த தாளை நீட்டினான். மைவிரலை கூந்தலில் ஒட்டி விட்டு நெற்றிமுடிச்சோடு அதை வாங்கினாள்.

அன்பு பானுமதி,

இரண்டு நாட்களாய் நான் தூங்கவில்லை.

சூர்யா அப்படி ஒரு யோசனை சொல்வான் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை.

மாதவியின் நிழல் என்றைக்கு என் வீட்டை விட்டு விலகியதோ, அன்றைக்கே என் வாழ்க்கை பாலைவனமாயிற்று.

கிட்டத்தட்ட பதினாறு மாதங்கள் நான் தனியனாய் விடப்பட்ட உணர்வு என்னைக் கொத்திக் கொண்டிருக்க, ஒரு சந்தோஷமான தென்றல் போல என் நினைவுகளில் நீங்கள் குறுக்கிட்டீர்கள். சரண்யா உங்களுடன் வெகு சுலபமாய் ஒட்டிக் கொண்டது. நீங்கள் அதன் மேல் காட்டும் பிரியம் பிரதிபலன் எதிர்பாராதது என்று எனக்குத் தெரியும். ஆனால் அதையே உங்களுடைய பலவீனமாய் நினைத்து நான் தவறான முடிவுகள் எடுக்க விரும்பவில்லை.

நீங்கள் மிக நேர்த்தியான பெண்தான். ஒரு அழகான குடும்பத்தை உருவாக்க, உருவாக்கி வழி நடத்தத் தேவையான அத்தனை குணங்களும் உங்களிடம் நான் கண்டிருக்கிறேன். ஆனால், என்னை மன்னிக்கவும், நீங்கள் மாதவி ஆக முடியாது. என்னுடைய நினைவுகளின் ஆதிக்கத்திலிருந்து மாதவியை விலக்க எனக்கு எண்ணமில்லை.

சரண்யா எனக்கு விலங்கிட்டிருந்தாள். இனி எனக்குக் கவலையில்லை. நீங்கள் சரண்யாவைப் பார்த்துக் கொள்வீர்கள்.

கிருஷ்ணமூர்த்தி மிக நல்ல இளைஞன். நேர்மையானவன். என் ஒரே நண்பன். என்னிடம் பேசும்போது உங்களைப் பற்றிச் சொன்னான். அவன் உங்களை நேசிப்பது பற்றிச் சொன்னான்.

அவன்பால் நீங்கள் ஈர்க்கப்பட்டிருந்தும், எனக்காக உங்கள் முடிவை திசை திருப்பிக் கொள்ள நீங்கள் சம்மதித்த மாதிரி என் மனத்திற்குப்பட்டது.

துணிகளை உலர் இயந்திரத்தினுல் உலர வைத்தால், பொத்தான்களைப் போட்டு விட்டு, துணியின் உட்பக்கம் வெளியே காணும்படித் திருப்பி விட்டால், பொத்தான்கள் உடையாது.

உங்களுக்கு விருப்பமிருந்தால் அவனுக்கு என் கிருஷ்ணமூர்த்திக்கு அதிர்ஷ்டம் கொடுங்கள்.

நீங்கள் இருவரும் சரண்யாவுக்கு சிறந்த பெற்றோர்களாவீர்கள் என்று நான் திடமாக நம்புகிறேன்.

என் நிம்மதி இனி கல்யாணத்தில் இல்லை. மாதவியைத் தேடிப் புறப்படுவதில்தான் இருக்கிறது. என்னை வலை விரிப் பிடிக்கும் முயற்சிகள் தயவு செய்து வேண்டாம்.

என் வீடு, கடை, மற்ற சொத்துக்கள் எல்லாம் உங்கள் இருவர் பெயருக்கும் மாற்றப்பட்டுவிட்டன. என் மாதவியின் ஃபோட்டோ மட்டும் எனக்கு. வாழ்த்துக்கள். வருகிறேன். சரண்யாவுக்கு என் அன்பு முத்தங்களுடன்,

ரகுவரன்.

பானுமதி அவசரமாய் மறுபடியும்படித்தாள்.

நெஞ்சுக் கூட்டுக்குள் சிக்கிய எதுவோ விடுதலை ஆன மாதிரி ஒரு உணர்வு வந்து தழுவிக் கொண்டது.

''மொதலாளி கடையிலே இருக்காரா?''

''அவரு காலையிலயே புறப்பட்டுப் போயிட்டாருங்கம்மா, சாயந்தரமா இந்த லெட்டரை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னாரு.... நான் வரேம்மா ....''

சைக்கிள் தெருமுனை திரும்பியதும், மோட்டார் சைக்கிள் தெருவில் நுழைந்தது.

இந்த வீட்டு வாசலில் வந்து நின்றது.

கிருஷ்ணமூர்த்தி அவசரமாய் இறங்கினான். சட்டைப் பையிலிருந்து வெள்ளைத் தாளை எடுத்தான். அது காற்றில் படபடக்கையில் ரகுவரனின் சாய்ந்த எழுத்துக்கள் தென்பட்டன. கிருஷ்ணமூர்த்தியின் குரலில் நடுக்கமிருந்தது.

''பானு .... பானு .... ரகு எனக்கு ஒரு லெட்டர் எழுதியிருக்கான்.''

''எனக்கும்தான் ....'' என்றாள் பானுமதி கையிலிருந்த கடிதத்தை வெறித்துக் கொண்டே. அவள் கண்களில் நீர் திரண்டு கன்னங்களில் இறங்கியது.

''பானு .... நீங்க .... நீங்க .... நீ அழக்கூடாது பானு ..... நீ அழக்கூடாது.''

கிருஷ்ணமூர்த்தியின் குரல் தழுதழுத்தது.

மாலை சூரியனின் ஆரஞ்சில் அவர்களிருவரையும் பார்த்துக் கொண்டு குழப்பமாய் சரண்யா நின்றது. அப்புறம் பானுமதியின் கையைப் பிடித்து இழுத்தது.

''ஆண்ட்டி .... நான் சாக்லேத் தரேன் .... அழாதீங்க ஆண்ட்டி ....''

''ஆண்ட்டி இல்ல.... அம்மான்னு சொல்லுடா ராஜாத்தி .....''



இப்போது கிடைக்கிறது
ஃப்ரெஷ்
தேங்காய் எண்ணெய்
100% தூய்மையானது,
"மைக்ரோ-ஃபில்டர்" செய்யப்பட்டது
"அக்மார்க்" —இந்த முத்திரையைத் தாங்கி வருவது ஃப்ரெஷ் மட்டுமே.
Fresh COCONUT OIL
Fresh COCONUT OIL
கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய அழுக்கு மற்றும் கசண்டுப் பொருட்களும்கூட "மைக்ரோ-ஃபில்டர்" வழியே வடிகட்டப்பட்டு, தூயதாய் வருகிறது ஃப்ரெஷ். ஆகவே அது மேலும் நீடித்த காலத்திற்கு "அன்றெடுத்த எண்ணெய்" ஆக "ஃப்ரெஷ்" ஆக நிலைத்திருக்கிறது.
ஆர்.டி. ஆயில் ப்ராடக்ட்ஸ் பிரைவெட் லிட்.,
தலைமை அலுவலகம் : ஆலப்புழை, கேரளா
தொழிற்சாலை : கோயமுத்தூர்-641 008
இந்தியாவின் கொப்பரை வர்த்தகத்தில் மிகப்பெரிய நிறுவனத்திடமிருந்து வருகிறது ஃப்ரெஷ்.
GKGE.M85.31Tm.

சிறுநீர்ப்பைக் கோளாறுகளால் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். நீர்க்கடுப்பு, எரிச்சல் எனப் பெரியவர்கள் மட்டுமல்ல, சிறு குழந்தைகள் கூட அவதிப்படுகிறார்கள். சிறுநீர் சம்பந்தப்பட்ட ஒரு முழுமையான மருத்துவ விளக்கம் இங்கு தரப்படுகிறது. இந்தியாவிலேயே முதல் பெண் 'யூராலஜிஸ்ட்' ஆன திருமதி லட்சுமி சங்கரன் விளக்குகிறார்—

# சிறுநீரகத்தின் பெருங்கதை

**சிறுநீரகத்தின் முக்கிய வேலை என்ன?**

டா: சிறுநீரகத் தமனி என்னும் ரத்தக்குழாய் மூலம் சுமார் 90% ரத்தம் சிறுநீரகத்திற்குச் செலுத்தப்படுகிறது. இந்த இரத்தத்திலிருந்து அதிகப்படியான யூரியா, உப்புக்கள், யூரிக் அமிலம், செயல்படா ஹார்மோன்கள், குளுகோஸ், நீர் ஆகியவை பிரிக்கப்படுகின்றன. ஆனால் கிட்னியின் விசேஷ உறிஞ்சும் தன்மை (absorption) தேவையான உப்புக்களையும், குளுகோஸ், மிகுதியாக நீர் ஆகியவற்றை மீண்டும் உறிஞ்சி இரத்தத்தில் சேர்த்து விடுகிறது. எஞ்சிய கழிவு சிறுநீராக வெளியேற்றப்படுகிறது.

**கிட்னி கழிவு உறுப்பாக மட்டும்தான் இயங்குகிறதா? வேறு ஏதேனும் வேலை செய்கிறதா?**

டா: செய்கிறது. நம் உடலின் வெப்ப நிலையை எப்போதும் 98.4 F—ல் வைக்கத் தோலும் கிட்னியும் இணைந்து செயல்படுகிறது. கோடையில் உடலின் வெம்மையைத் தணிக்க அதிகம் வியர்க்கும். அப்போது சிறுநீரகம் நிதானமாகச் செயல்பட்டுச் சிறிதளவு சிறுநீரையே வெளியேற்றும். குளிர்காலத்தில் உடல் வெப்ப நிலை குறையாமல் இருப்பதற்காக வியர்வை வராது. அப்போது கிட்னி மிகச் சுறுசுறுப்பாக இயங்கி அதிக சிறுநீரை வெளியேற்றும்.

மேலும் கிட்னி பிரிக்கும் சிறுநீரில் உள்ள கிருமிகளை சோதனை மூலம் ஆராய்வதன் மூலம் மலேரியா, மஞ்சள் காமாலை, டைபாயிடு, க்ஷயரோகம், யானைக்கால் போன்ற பல நோய்களைக் கண்டு பிடிக்க முடிகிறது.

**ஒருவருடைய கிட்னி பழுதடையவோ, இயங்காமல் போகவோ என்ன காரணம்?**

டா: பல் காரணங்களைக் கூறலாம்.

1. நமக்கு வரும் டான்ஸலைடிஸ் (tonsillitis) டீ.பி., பயோரியா எனப்படும் ஈறு வியாதி, ஸ்கேபியஸ் எனப்படும் தோல் வியாதி இவை தவிர டயாபடீஸ் எனப்படும் சர்க்கரை வியாதி இவற்றால் கிட்னி பாதிக்கப்படலாம். காரணம் இந்நோய்களை உண்டு பண்ணும் நோய்க் கிருமிகள் இரத்தத்தில் கலந்து சிறுநீரகத்திற்கு வரும்போது அதையும் தாக்குவதுதான்.

2. சாராயம் அருந்துவதால் இரத்தத்தில் அதிக அளவு யூரிக் அமிலம் சுரந்து, அதை கிட்னி பிரிக்கும் போது கல் உண்டாகி கிட்னி பாதிக்கப்படலாம்.

3. அசைவ உணவில் கல்லீரலை உண்பதாலும் சிறுநீரகம் பாதிக்கப்படலாம்.

4. புகை பிடிப்பதால் அதில் உள்ள லாக்னின் என்னும் நச்சு சிறுநீர்ப்பையைத் தாக்கி அரித்துப் புற்றுநோயை உண்டாக்கலாம். இது பரவி கிட்னியையும் தாக்கலாம்.

**"எந்தக் காரணத்தைக் கொண்டும் சிறுநீரை அடக்கி வைக்கக் கூடாது."**

**டாக்டர், 'கல்' என்கிறீர்களே? அது என்ன? எவ்வாறு ஏற்படுகிறது?**

டா: இது ஒரு சுவையான கேள்வி. முதலில் கல் என்பது அரிசியில் உள்ள கல் அல்ல. பல பெண்கள் இதனைத் தவறாகப் புரிந்து கொண்டு அரிசியில் அக்கறையாகக் கல் நீக்கிச் சமைக்கின்றனர். இக்கல் பல்லை உடைக்காமல் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் சிறுநீரகம் சம்பந்தமான கல் வேறு. நாம் குடிக்கும் நீரிலுள்ள கால்சியம், மக்னீசியம் உப்புக்களும், ஆக்ஸலேட், யூரிக் அமிலம் போன்றவைகளும் சில சமயம் எக்ஸ்ரேக்குக் கூடப் புலப்படாத அளவு சிறிய படிகமாக மாறிப் பின்னர் நாளடைவில் வளர்ந்து கற்களாக மாறுகின்றன.

> "சிறுநீரில் கல் என்பது அரிசியில் இருக்கும் கல் அல்ல!"

**கல் எங்கு ஏற்படும்? அதனால் விளையும் பாதிப்பு யாது?**

டா: கிட்னியில் உள்ள பிரமிட்ஸில் சிறு கல் அடைத்துக் கொண்டால் உறுத்தல், எரிச்சல், வலி ஏற்படும். அதேசமயம் பெல்விஸ் என்ற பகுதியில் ஏற்படும் கல் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது. இது ஒரு எலுமிச்சை அளவு முதல் பெரிய சாத்துக்குடி அளவு வரை வளரலாம். திடீரென்று வயிற்றுவலி ஏற்பட்டு மருத்துவரை அணுகும்போது எக்ஸ்—ரே மூலம் இது இருப்பது தெரியவரும். அடுத்து சிறுநீர்க் குழாயில் கல் இருந்தால் எரிச்சல், வலி தோன்றும். காரணம் ஒவ்வொரு முறை குழாய் விரிந்து சுருங்கும் போதும் கல் உறுத்தும்.

**கல் இருப்பதால் என்ன விளைவு ஏற்படும்?**

டா: சிறுநீர் கழிக்கும்போது வலி உண்டாகும். நீரின் அளவு குறையலாம். அல்லது மொத்தமாக சிறுநீரே வெளியேறாமல் சிறுநீர்ப்பை வீங்கலாம். எதுவாக இருந்தாலும் உடனே மருத்துவரை நாடுவது அவசியம்.

**வாழைப்பட்டை, வாழைத்தண்டுச் சாறு அருந்துவது பயன் தருமா?**

டா: இவை சிறுநீரின் அளவை அதிகரிக்கலாம். இதனால் மிகச் சிறிய கல் வெளியேறலாம். மற்றபடி மருத்துவத்தன்மை உண்டா என்பது எனக்குத் தெரியாது.

**கல்லை மருத்துவ முறையில் எவ்வாறு நீக்கலாம்?**

டா: சிறிய கல்லாக இருந்தால் மிகத் திறமை வாய்ந்த **Operative Instruments**—களைப் பயன்படுத்தி சிறுநீர்க் குழாய், சிறுநீர்ப்பை, ஏன் கிட்னியில் உள்ளதைக் கூட அறுவைச் சிகிச்சையின்றி எடுத்துவிடலாம். பெரிய அளவில் உள்ள கல்லை அறுவை சிகிச்சை மூலமே நீக்க முடியும்.

சிறுநீரகம்



**கல் ஆண், பெண் இருவருக்குமே வருமா?**

டா: வரும். ஆனால் ஆண்களுக்கு அதிகமாக வரும் வாய்ப்புள்ளது. காரணம் சிறுநீர்ப்புறவழியின் அளவு குறுகியிருப்பதாக இருக்கலாம்.

**சிறு குழந்தைகளுக்கு சிறுநீர் அடைப்பு எதைக் குறிக்கும்?**

டா: ஆண் குழந்தைகளின் சிறுநீர் கழிக்கும் உறுப்பின் துவாரத்தை மெல்லிய உறை ஒன்று மூடியிருக்கும். சில குழந்தைகளுக்கு இவ்வுறை மிகவும் இறுக்கமாக மூடியிருப்பதால் சிறுநீர் போகும்போதெல்லாம் அலறும்; வலியால் துடிக்கும்.
இதை சிறு ஆப்ரேஷன் மூலம் சரி செய்து விடலாம். சில குழந்தைகளுக்கு ஆபரேஷனுக்குப் பிறகும் சிறுநீர் கழிக்கும்போது நுனிப்பாகம் பலூன் போல உப்பி பிறகு சிறுநீர் வெளிப்படும். அப்போது குழந்தையின் தாய்தான் அருகில் இருந்து உறையைப் பின்னுக்குத் தள்ளி சிறுநீர் கழிக்கப் பழக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் நுனியை நீரில் கழுவ வேண்டும். இல்லாவிட்டால் உப்புப் படிந்து கல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

> "சிறு குழந்தை சிறுநீர் கழிக்கும்போது அலறி அழுதால் உடனே கவனிக்க வேண்டும்."

**சிறுநீருடன் இரத்தம் கலந்துவரக் காரணமென்ன?**

டா: சிறுநீருடன் இரத்தம் வெளிப்பட்டால் அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். க்ஷயரோகம், கிட்னியில் புற்றுநோய், சிறுநீர்ப்பையில் புற்றுநோய், நீர்க்கடுப்பு (**urinary infection**) இவற்றில் ஏதாவது ஒன்று இருந்தால் கூட சிறுநீருடன் இரத்தம் கலந்து வரும். இத்தகைய நிலையில் உடனடியாக டாக்டரிடம் காட்டித் தகுந்த சிகிச்சை பெற வேண்டும்.

**Kidney failure** என்பது என்ன? அதன் அறிகுறிகள் யாவை? இது நிரந்தரமானதா? தற்காலிகமானதா? சிகிச்சை என்ன?

கிட்னி ஃபெயிலியர் என்றால் என்ன?

டா: சாதாரணமாகச் சிறுநீரகம் முழுமையாகவோ, தற்காலிகமாகவோ தன் செயலை இழந்தால் அதனை **Kidney failure** என்கிறோம். இத்தகைய நிலையில் சிறுநீர் வெளியேறாது. இரத்தத்திலுள்ள கழிவுப் பொருட்கள் நீக்கப்படாததால் அவை காரணமாக வேறு தொல்லைகள் ஏற்படும். வயதானவர்களுக்கு வயோதிகம் காரணமாக இதயம் ஓய்வெடுத்துக் கொள்வது போல கிட்னியும் ஓய்வெடுத்துக் கொண்டுவிடும். இதற்கு சிகிச்சை ஒன்றுமில்லை. இதுதவிர அக்யூட் ஃபெயிலியர், க்ரோனிக் ஃபெயிலியர் என இருவகை ஏற்படும்.

அக்யூட் பெரும்பாலும் கர்ப்பிணிகளுக்கும், விஷம் சாப்பிடுவதனாலும், வயிற்றுப் போக்கினால் நீர் வற்றிய நிலையிலும் ஏற்படும். இது தற்காலிகமானது. ஆனால் திடீரென்று ஏற்படும். கர்ப்பிணிகளுக்குக் கடைசி மூன்று மாதங்களில் கை, கால் வீக்கம், முகவீக்கம், சிறுநீர் கழிக்காமை, வாந்தி, இரத்த அழுத்தம் அதிகமாதல் இவை இருந்தாலும் சிறுநீர்ச் சோதனையில் ஆல்பமின் இருந்தாலும் இந்தப் பாதிப்பு ஏற்படும். இதனால் பிரசவ சமயத்தில் வலிப்பு வரலாம். தாமதம் செய்யாமல் ஆபரேஷன் மூலம் குழந்தையை எடுத்துவிட்டால் தாய், சேய் காப்பாற்றப்படுவதுடன் சிறுநீரகத்தின் தற்காலிக செயலிழப்பும் பெரும்பாலும் தானே நீங்கிவிடும் வாய்ப்பும் உண்டு.

க்ரோனிக் ஃபெயிலியர் ஏற்கெனவே சர்க்கரை வியாதி, அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு வரும். இதற்கு நீண்ட கால சிகிச்சை தேவை. டயாலிஸிஸ் செய்யலாம். முடிந்தால் மாற்றுச் சிறுநீரக அறுவை செய்யலாம்.

**நீர்க்கடுப்பு என்பது யாது? அறிகுறிகள் யாவை?**

டா: நீர்க்கடுப்பை ஆங்கிலத்தில் **urinary infection** என்று கூறுகிறோம். சிறுநீர்ப்பாதையில் அழற்சி காரணமாகவோ சுகாதாரக் குறைவு காரணமாகவோ சிலபாக்டீரியாக்களால் சேதம் ஏற்படும். இதனால் சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், கடுப்பு, வலி உண்டாகும். சிறுநீரில் இரத்தமும் கலந்து வரும். இதனை உடனடியாகக் கவனிக்காவிட்டால் நோய் பரவி சிறுநீர்ப்பை, சிறுநீர்க் குழாய், சிறுநீரகம் என்று எல்லாப் பாகங்களையும் தாக்கிவிடும்.

**டாக்டர், பெண்களுக்கு நீர்க்கடுப்பு ஏன் வருகிறது?**

டா: பெண்களுக்கு, குறிப்பாக மாதவிலக்கு சமயத்தில் சுகாதார முறையில் துணிகளையும் (**Sanitary napkins**), உள் ஆடைகளையும் அணியாததால் வரலாம். சிறுநீர்ப் பாதையில் அழற்சி ஏற்பட்டு அதனாலும் வரலாம். பெண்கள் பிரயாணத்தின் போது சிறுநீர் கழிக்கக் கூச்சப்படுவார்கள். இதனால் வெகுநேரம் சிறுநீர் கழிக்க மாட்டார்கள். இதன் காரணமாக **urine concentration** அதிகமாக சிறுநீர்ப்பை அரிக்கப்படுவதால் நீர்க்கடுப்பு வரலாம்.

# வெய்யிலால் ஓயாது கறுப்பேறும் மேனியிலே வெளிப்படுமோ சிகப்பு நிறம்—ஞானத் தங்கமே!

பிறந்தபோது இருந்த மேனிநிறம் இன்று உமக்கில்லை. காலப் போக்கில் கறுத்துவரக் காரணம் என்ன? வெய்யிலா? ஆம். சூரிய ஒளியில் உள்ள (அல்ட்ரா-வயலெட்) ஊதாம்பரக் கதிர்கள். தவிர, உட்காரணமும் உண்டு: சருமத்திநுள் இருக்கும் மெலானின் என்ற கருநிறப் பொருள். இது அவரவர் தேகவாகுக்கு ஏற்ப அடர்ந்தோ, குறைந்தோ பரவும். மெலானின் பரவப் பரவ, மேன்மேலும் கறுத்துப் போவீர்கள். இதற்கு விடிவுநாள் வந்துவிட்டது இதோ...



## பலித்தது விஞ்ஞானத் தவம்

உயிரணுவின் மையத்தை ஊடுருவி, நிற வரம் கொணர்ந்தோம்: கருமையின் பரவலைக் கட்டுப்படுத்த, கரையவைக்க—உதித்தது ஒரு க்ரீம்: ஃபேர் அண்ட் லவ்லி. கடு ராசாயனமோ, கார பிளீச்சோ கலவாத மென்முறை...

## எவ்விதம் செயல்படுது ஃபேர் அண்ட் லவ்லி

உள்ளும் புறமுமாக 2 வழிகளிலே:

சருமத்தின் உட்புறம்: பாதுகாப்புடன் இதமாக உள்ளூர செயல்பட்டு, உடல் கறுப்பதைத் திசை திருப்புகிறது கண்முன்னே சிகப்பழகு மலர.

சருமத்தின் வெளிப்புறம்: ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமில் உள்ள சூரிய ஒளித்தடைப் பொருள்களின் ஒப்பில்லாக் கலவை, அல்ட்ரா-வயலெட் கதிர்களை உடம்பில் படவிடாமல், தடுக்கிறது உடல் கறுப்பதை: எனினும், சூரிய ஒளியின் சுகநலங்களை நீங்கள் ஈர்த்துக்கொள்ள முடியும்.

## ஆறே வாரங்களில் பார்ப்பீர் சிகப்பழகை

அன்றாடம் இரு தடவைகள் வீதம் 6 வாரங்கள் உபயோகியுங்கள் ஃபேர் அண்ட் லவ்லி. துவக்கிய புதிதில் சருமம் சற்றே கூசலாம்; க்ரீம் செயல்படுகிறது என்பதற்கு அதுவே அறிகுறி. ஆறே வாரங்களில் வண்ண மாறுதலைக் கண்ணாரக் காண்பீர்கள், பிறரும் காண்பார். சிகப்பழகுடன் நிலைபெற, வேளை தவறாமல் உபயோகித்து வாருங்கள் ஃபேர் அண்ட் லவ்லி.

சிகப்பழகு பற்றியும், ஃபேர் அண்ட் லவ்லி பற்றியும் மேலும் விவரமறிய எழுதுங்கள், இதுவே முகவரி:

FAIR AND LOVELY ADVISER,<br>
P.O. BOX 758,<br>
BOMBAY 400 021.

ஃபேர் அண்ட் லவ்லி

சிகப்பழகு க்ரீம்



**கண்காணும் சிகப்பழகு உமதாக்கும்...**
**இயற்கைக்கே உரிய இதமான வழியிலே.**

இந்துஸ்தான் லீவரின்
தரமான தயாரிப்பு

**புதிதாகத் திருமணமான பெண்களுக்கு வரும் Honey moon sickness என்பது என்ன?**

டா: புதிதாகத் திருமணமான பெண்ணிற்கு தாம்பத்திய உறவின் போது சிறுநீர்ப் பாதையில் அழற்சி ஏற்படலாம். இதனால் பாக்டீரியாக்கள் தாக்குவதால் சிறுநீர் கழிக்கும்போது கடுப்பு, எரிச்சல் ஏற்படும். குளிர் ஜுரம் வரும். சிறுநீருடன் இரத்தம் கலந்து வரும். மணமான பெண் புகுந்த வீட்டில் இருப்பதாலும் இத்தகைய அறிகுறி தன் கற்பிற்கு ஏதாவது களங்கம் கற்பிக்குமோ என்று அஞ்சுவதாலும் இதனைப் பிறரிடம் கூறத் தயங்குகிறாள். இதனால் நோயின் கடுமை அதிகரிக்கிறது. எனவே புதிதாக மணமான பெண்கள் இத்தகைய நீர்க் கடுப்பு இருந்தால் கட்டாயம் வீட்டிலுள்ள பெண்களிடம் கூறி மருத்துவச் சிகிச்சை பெற வேண்டியது அவசியம்.

சிறுநீரகத்தின் குறுக்குவெட்டுத் தோற்றம்.



**நீர்க்கடுப்பிற்கு வைத்தியம் எவ்வளவு காலம் செய்ய வேண்டும்? உணவில் கட்டுப்பாடு உண்டா?**

டா: என்னிடம் வியாதியின் அறிகுறியோடு வரும் பலர் நான் கொடுக்கும் மாத்திரைகளை நான் குறிப்பிடும் காலம் வரை சாப்பிடுவதில்லை. இரண்டு மூன்று நாட்கள் சாப்பிட்டுவிட்டு நோயின் அறிகுறி நீங்கியதும் நிறுத்திவிடுகிறார்கள். எனவே நோய் நீக்கப்படுவதற்கு முன்பே மருந்தை நிறுத்திவிடுகிறார்கள். இதனால் சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் பல மடங்கு அதிக வலி, எரிச்சல் இவற்றுடன் சிகிச்சைக்கு வருகிறார்கள். நோய் முற்றிலும் நீங்காவிட்டால் அது பின்னர் சிறுநீர்ப் பை, சிறுநீர்க் குழாய் ஆகியவற்றிற்குப் பரவி கிட்னியையும் தாக்கும் அளவிற்கு வளர்ந்து வரும். உணவில் கட்டுப்பாடு இல்லை. ஆனால் திரவ உணவை அதிகம் சேர்க்க வேண்டும். பால், மோர், இளநீர், பழச்சாறு சாப்பிடுவது நல்லது. மீண்டும் மீண்டும் சிறுநீர்க் கடுப்பு வந்தால், யூரின் கல்சர், செல் கௌண்ட் போன்ற சோதனைகள் மூலம் வேறு நோய் உள்ளதா என்று அறிய வேண்டும். சிறுநீர் பால் போலப் போனால் அவருக்கு யானைக்கால் நோய் இருக்கும் வாய்ப்பு உண்டு.

**ஆண்களுக்கு நீர்க்கடுப்பு வருமா டாக்டர்?**

டா: வரும். இளம் வயதில் தவறான பழக்கங்களினால் பெண்களுடன் தொடர்பு கொள்வதாலும், அடிக்கடி உடலுறவு கொள்வதாலும் வரலாம்.

**சிறு குழந்தைகளுக்கு நீர்க்கடுப்பு வருமா? என்ன அறிகுறிகள்?**

டா: இது ஒரு முக்கியமான கேள்வி. சிறு குழந்தைகள் சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் ஏற்பட்டு அழுவதாலும், வயிற்றுப் போக்கு, இடைவிடாமல் அழுதல், எடை கூடாமை இவற்றாலும் அவர்களுக்கு நீர்க்கடுப்பு ஏற்பட்டுள்ளதை அறியலாம். பெண் குழந்தைகளுக்கு ஜட்டி போட வேண்டியது மிகவும் அவசியம். மண், கல் உறுத்துவதாலும், வயல் வெளிகளில் நெல் கதிர் குத்துவதாலும் சிறுநீர்ப் பாதையில் புண் ஏற்பட்டு நீர்க்கடுப்பு ஏற்படலாம். அலங்காரமாக, அரைஞாணில் தொங்கும் ஆபரணங்களை வாங்கும் காசிற்குப் பத்து ஜட்டி வாங்கி குழந்தைக்கு அணிவித்தால் குழந்தையை நோயிலிருந்து காப்பாற்றலாம். நோயின் அறிகுறிகளைக் கண்டதும் டாக்டரிடம் காட்ட வேண்டும்.

புதியதிருமணப்பெண்ணிற்கு குளிர் ஜுரம் வந்தால் உடனே மருத்துவரை நாடுங்கள். சிறுநீர்க் கோளாறே இதற்குக் காரணம்.

**பதனீ சாப்பிடுவதும், கால் கட்டை விரல்களில் சுண்ணாம்பு தடவுவதும் கைவைத்தியமாக நீர்க்கடுப்பிற்குச்**

செய்கிறார்களே இதைப்பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள் டாக்டர்?

டா : பதனி உடம்புக்குக் குளிர்ச்சி தரும். சிறுநீரின் அளவை அதிகப்படுத்தும். ஆனால் கண்ணாம்பு தடவுவதில் எவ்வித மருத்துவப் பலனும் இல்லை. இந்நோய் உள் உறுப்புக்களைத் தாக்கும் தன்மை உடையதாக இருப்பதால் காலம் கடத்தாமல் டாக்டரிடம் சென்று சிகிச்சை பெறுவதே நல்லது.

சில பெண்களுக்கு நீர் ஒழுக்கு ஏற்படுவது ஏன்?

டா : கிராமங்களில் கர்ப்பிணிகளுக்கு வீட்டிலேயே பிரசவம் பார்க்கலாம். இதனால் சில சமயம் பிரசவம் நீண்ட நேரத் தாமதத்திற்குப் பிறகு ஏற்படுகிறது. இதுசமயம் குழந்தையின் தலை தொடர்ந்து பல மணிநேரம் சிறுநீர்ப் பையை அழுத்தி அதில் துளைகளை ஏற்படுத்துகிறது. இதனால் சிறுநீர் ஒழுக்கு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். சிறுநீர்ப் பாதையில் துளை ஏற்பட்டாலும் பிரசவ வழியாக நீர் ஒழுகிக் கொண்டே இருக்கும்.

சில பெண்களுக்கு இருமினாலும், தும்மினாலும், சிரித்தாலும் சிறுநீர் ஒழுக்கு ஏற்படுகிறதே ஏன்?

டா : முதுகுத்தண்டு வியாதியினாலும், சிறுநீர்ப்பாதை, சிறுநீர்ப்பை, இவற்றில் ஏற்படும் சில வியாதிகளினாலும் இவ்வாறு ஏற்படலாம். மருந்துகளாலும், மின் கதிர் சிகிச்சை மூலமும் சில உடற்பயிற்சி மூலமும் குணப்படுத்தலாம். எதுவும் சரியாகப் பலனளிக்காவிட்டால் அறுவைச் சிகிச்சை பலனளிக்கும்.

பெண்களுக்குப் பிரசவத்தின் போதோ அல்லது கருக்கலைப்பின் போதோ சிறுநீரகம் சம்பந்தமான உறுப்புக்கள் பாதிக்கப்படுமா?

> "பெண் குழந்தைகளுக்கு ஜட்டி போட வேண்டியது மிகவும் அவசியம்."

டா : இது கூட ஒரு அவசியமான கேள்வி. பொதுவாக சிரமமின்றி, பாதுகாப்பு எச்சரிக்கையுடன் நடக்கும் பிரசவத்திலும் கருக்கலைப்பிலும் இத்தகைய பாதிப்பு ஏற்படாது. ஆனால் பிரசவ சமயத்தில் முதலில் குழந்தையின் கைவரும் பிரசவத்தில் கர்ப்பப்பை வெடித்து விடலாம். இதனால் நாடித்துடிப்பு குறைந்து பெண் மயக்கமடைந்து விடுவாள். அப்போது அவசரத்தின் காரணமாக ஆயுதங்கள் பட்டு சிறுநீர்ப்பையில் துளை ஏற்படலாம். சில சமயம் சிறுநீர்க் குழாயும் துண்டிக்கப்படலாம். இதனை சிறுநீரக அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்திவிடலாம்.

அடுத்து கிராமப்புறங்களில் தவறான முறைகளில் கருக்கலைப்பு செய்வார்கள். இதனால் கர்ப்பப்பையில் அழற்சி ஏற்பட்டு அது சிறுநீர்ப்பை, சிறுநீரகம் இவற்றைப் பாதிக்கலாம். எனவே கருக்கலைப்பை அரசு மருத்துவ மனைகளிலோ முறையாகப் பயின்ற டாக்டர்களிடமோ செய்ய வேண்டும்.

கர்ப்பப்பையின் வாயில் புற்றுநோய் வரும்போது மின்கதிர் சிகிச்சை அளிப்பார்கள். அது சமயம்சிறுநீர்ப் பாதை, சிறுநீர்ப் பை பாதிக்கப்படலாம்.

கர்ப்பப் பையை நீக்கிய பெண்களின் சிறுநீர்பை தனியாக இயங்குவதில் பிரச்னை ஏதாவது உண்டா டாக்டர்?

டா : அப்படி எதுவும் இல்லை. சில பெண்கள் தங்கள் கர்ப்பப் பையை நீக்கியதும் சிறுநீர்ப்பை தனியாகத் தொங்குவது போல் உணருகிறார்கள். அடி வயிற்றைச் சுற்றி வலி இருப்பதாகவும், சிறுநீர்க் கழிக்கும்போது எரிச்சல் இருப்பதாகவும் கூறுகிறார்கள். ஆனால் இது தற்காலிக பயம்தான். கர்ப்பப் பையை நீக்கிய பின் சிறுநீர்ப்பை தனியாக இயங்கும். இதுகுறித்து பெண்கள் பயப்படத் தேவையில்லை.

பேட்டி : லக்ஷ்மி சங்கர்.

# எல்லைகளின் விளிம்பில்

வாஸந்தி

## 22

ஜி. எம்மின் அறைக்குத் தன் ராஜிநாமாக் கடிதத்தை அனுப்பிவிட்டு யாரிடமும் எதையும் பேசாமல் அவன் விருவிருவென்று நடந்து வெளியேறிய போது பல பார்வைகள் அவனைத் துளைத்ததை அவனால் உணர முடிந்தது. நான் வெளியேறுவது அவர்களுக்குச் சந்தோஷமாக இருக்கும் என்று அவன் கசப்புடன் நினைத்துக் கொண்டான்.

அவனுக்கு இங்கே வேலை ஆனதற்கானப் பின்னணிக் காரணங்கள் அவனுக்கு முன்னால் இவர்களுக்குத்தான் தெரிந்திருந்தது. சித்ராவுக்கும் கல்யாணம் ஆனதும் கிண்டல் நிறைந்த பேச்சுக்களும், பார்வைகளும் வெகு நாட்களுக்கு அவன் சுரணையில் உறைக்கவில்லை அப்போதிருந்த மனநிலையில். பொறுமைப் பிடித்தவர்கள் என்று ஒட்டுமொத்தமான' கணிப்பில் அவன் தன் வேலையில் ஈடுபட்டிருக்கிறான்.

அவர்கள் பொறுமைப்பட்டிருந்தால் அது மிக நியாயமானது என்று கொஞ்ச நாட்களாக அவனுக்குத் தோன்ற ஆரம்பித்திருந்தது. அவர்களது நிலையில்இருந்தால்இப்படித்தான் பொறுமைப் பட்டிருப்பேன் என்று அவன் நினைத்துக் கொண்டான். என் திறமையைப் பற்றி அவர்களுக்குச் சந்தேகம் ஏதும் இல்லாவிட்டாலும் என்' திறமைக்காகக் கிடைத்த வேலையில்லை, இது என்று அவர்களுக்குத் தெரியும்.

அவன் அவசரமாகத்தன்னுடைய காரைத் திறந்து அசுரத்தனமாகக் கிளப்பினான்.

'எத்தனைக் கேவலமான நிலைக்கு இறக்கப் பட்டிருக்கிறேன் என்று நினைக்க நினைக்க ஆத்திரம் கட்டுக்கடங்காமல் போயிற்று. மான அவமானத்தைப் பற்றிய பிரச்னையோ உணர்வோ நாகநாதனுக்குத் துளியும் கிடையாது என்று நிதர்சனமாய்ப் புரிந்தது. அவனை மாப்பிள்ளையாக வரித்தது ஒரு பிரத்தியேகக் காரணத்துக்காக. அவர் நினைத்த வழிக்கு அவன் வளைந்து கொடுக்க மறுத்தானானால் உறவைப் பற்றிய நினைப்பு அவருக்கு இருக்காது.' அவனது கௌரவத்தைப் பற்றிய கவலை அவருக்கு இல்லை...

இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு நான் என்னை ஆட்படுத்திக் கொண்டது எத்தனை முட்டாள் தனம்!

அவன் தன் கடிகாரத்தைப் பார்த்தான். 11.25 ஆகியிருந்தது. நாகநாதன் வேலை பார்க்கும் அலுவலகக் கட்டிடத்துக்கு வண்டியைத் திருப்பினான். ரிஸப்ஷனில் சென்று பதிவுச் சீட்டைத் தயாரிக்கும் போது நாகநாதன் இன்று வரவில்லை என்று தெரிந்தது.

'இன்றுஉம்மைவிடப்போவதில்லை' என்று தனக்குள் கறுவியபடி அவன் அவருடைய வீட்டிற்குச் சென்றான். அவன் உள்ளே நுழைந்து வரவேற்பறையை எட்டிப் பார்த்த போது நாகநாதன் ஏதோ ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். மேலோட்டமாக அருகில் எளிய தோற்றத்தில் ஒரு ஆள் கையைக்கோர்த்துநின்று கொண்டிருந்தான். ஃபைலில் இருக்கும் காகிதங்களை விரலால் எண்ணி விட்டுத் தன் பர்ஸைத் திறந்து அந்த ஆளிடம் பணத்தைக் கொடுத்தார். அந்த ஆள் வாயே திறக்காமல் ஒரு சின்ன சலாம் போட்டுவிட்டு வெளியில் வந்தான். பாலுவைக் கண்டு ஒரு திருட்டு விழி விழித்துச் சரேலென்று வெளியேறினான்.


தன்னுள் எழுந்த மெல்லிய சந்தேகத்தை ஒதுக்கி விட்டுத் தன்னுடைய பிரத்தியேக ஆத்திரத்துடன் பாலு உள்ளே நுழைந்தான். அவனை அந்த சமயத்தில் எதிர்பாராதவர் போல நாகநாதனின் முகம் லேசாகத் திடுக்கிட்டது. மறுவினாடி தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"உம்!" என்றார் ஒரு இகழ்ச்சிப் புன்னகையோடு.

"தனியா முடிவெடுக்கக் கூடிய தைரியம் வந்துடுத்து உனக்கு இப்ப?"

தன்னுடைய ராஜிநாமா விஷயத்தை அரோரா இவருக்கு ஃபோனில் தெரிவித்திருக்க வேண்டும் என்று அவனுக்குப் புரிந்தது.

"ஐ ஹேவ் நோ அதர் சாய்ஸ்!" என்றான் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத கோபத்தோடு.



''உங்க இஷ்டப்படி நா எந்தத் தில்லுமுல் லுக்கும் உடந்தையா இருக்க மாட்டேன்!''

நாகநாதன் தோளைக்குலுக்கிப்புன்னகைத் தார்.

''வெல்! தட் ஈஸ் யுவர் சாய்ஸ்!'' பிறகு முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு லேசான படபடப்புடன் பேசினார்.

''பாலு! உன்னைவிட நான் வயசில் பெரி யவன். அனுபவமுள்ளவன். உன்னுடைய வறட்டுலட்சியங்கள் உன்னை வாழ்க்கையிலே எந்தப் பெரிய இடத்துக்கும் கொண்டு போகப் போறதில்லே.''

''வேண்டியதில்லே எனக்கு அந்த இடம்!'' என்றான் பாலு ஆத்திரத்துடன்.

''சட்டத்துக்கு விரோதமாக காரியம் பண் ணிக்கிடைக்கிறபணமும்பதவியும்எனக்குத் தேவையில்லே!''

நாகநாதன் பலமாகச் சிரித்தார்.

''சட்டத்தை என்னமோ கழுத்திலே மாட் டிண்டு அலையற மாதிரின்னு பேசறே? அது எங்கேயிருக்கு சொல்லு! அதிலே மாட்டிக் காம இருக்க நிறைய வழிகள் இருக்கு. இதப் பார். அசட்டுத்தனமான உன் கொள்கைகளை விடு. உனக்குச் சின்ன வயசு. ஓரளவு புத்தி சாலித்தனம் இருக்கு. அழகான மனைவி. லைஃபை என்ஜாய் பண்ண வேண்டிய சமயத் திலே அதை நாசப்படுத்திக்காதே. பணம் தான் சகலமும் தெரிஞ்சுக்கோ. கலபமா சம்பாதிக்கலாம். நீ பயப்படற சட்டத்துக் குள்ளே அகப்பட்டுக்காமே பார்த்துக்க லாம். ஆத்திரப்பட்டுண்டு வேலையை ரிஸைன் பண்ணிண்டு... ஏதாவது முன் யோசனை இருக்கா உனக்கு? கையிலே வேறே வேலை இருக்கா?''

''என் கையிலே படிப்பு இருக்கு!''


''உடைப்பிலே போடு அதை! அதனாலே தான் உனக்கு வேலைக் கிடைச்சதுன்னு நினைக்கிறியா?''

**அவனுள் சுரீரென்று கோபம் படர்ந்தது.**

''மாயா திருப்பி அதைச் சொல்லி என்னைக் கோபப்படுத்தாதீங்கோ! எனக்கு வேறே வேலை கிடைக்காம போகாது! எல்லா இடத் திலேயும் உங்களைப் போல ஆட்கள் இருக்க மாட்டார்கள். தகுதிக்கு மதிப்பு இருக்கு இன்னும்!''

''இது நல்ல ஜோக்! எங்கிட்ட வரதுக்கு முன்னாடி எத்தனை இடத்திலே உன் தகுதிக்கு மதிப்புக்கிடைச்சது? கொஞ்சநாள் வேலைக்கு அலைஞ்சுத் திண்டாடினப்புறம் எங்கிட்டயே வரப் போறே. உன்னை நம்பி என் பெண்ணை உனக்குக் கல்யாணம் பண்ணி வெச்சுட் டேன்.. அவளைக் காப்பாத்த முடியாத நிலைக்கு உன்னை ஆளாக்கிக் கொண்டியானா நான் ரொம்பத் தீவிர முடிவை எடுக்க வேண்டி யிருக்கும்!''

''ஓ.கே! ஐ ஸீ வாட் யூ மீன்!'' என்றான் அவன் கோபத்துடன். ''உங்களுக்கு எல் லாமே ஒரு வியாபாரம். எனக்கு வேலையைக் கொடுத்து, பெண்ணையும் கொடுத்ததும்



வியாபாரம். ஆனா நீங்க பண்ணின தப்பு என்னை மாப்பிள்ளையா வரிச்சது! உங்களுடைய தில்லுமுல்லுகளுக்கு நா உடந்தையா இருப்பேன்னு எதிர்பார்த்தது. உங்களுக்கு மாப்பிள்ளையா இருந்திருக்க வேண்டியவன் பிரமோத் குப்தா! நான் இல்லே. யூ ஆர் எ சீட்! யூ ஆர் எ...''

திடீரென்று அவனுக்குத் தாங்கவில்லை. பல யுகத்து ஏமாற்றமும் துக்கமும் அதிர்ச்சியும் பொங்கிப் பொங்கி எழுந்து கண்களில் கரை கட்டி நின்றன.

நாகநாதன் எந்த வியப்பையோ சலனத்தையோ காண்பிக்காமல் அவனைத் தீர்க்கமாகப் பார்த்தார்.

''தட் இஸ் நன் ஆஃப் யுவர் பிஸினஸ்!'' என்றார், ஒரு கண்டிப்புடன். ''நான் என்னமோ உன்னைக் கட்டாயப்படுத்தி சித்ராவை உன் தலையிலே கட்டியமாதிரி இல்லே பேசறே? நீ அவளைக் கண்டு, என் பதவியைக் கண்டு மயங்கல்லே? அத்தனை அழகான பெண்டாட்டி என்னுடைய சொத்தோடு உனக்குக் கிடைக்க உன் வீட்டுக்கு என்ன பவிஷு இருந்தது? பெரிய லட்சியவாதி மாதிரி நடிக்காதே! என் பதவியைக் கண்டு உனக்கு மோகம்! பணத்தோடு அழகும் கொண்ட என் பெண் மேலே மோகம்! நீயா சம்மதிச்சுப் பண்ணிண்ட கல்யாணம். என்னை ஏமாத்துக்காரன்னு சொல்ல உனக்கு என்ன அதிகாரம் இருக்கு?''

அவன் சட்டென்று அடங்கிப் போனான். அடிவயிற்றிலிருந்து ஒரு அவமானச் சுருண்டு எழுந்தது.

''ஐ ஆம் ஸாரி! என்றான் மெல்லிய குரலில்.

''யூ ஆர் ரைட்! ஏமாத்தினது நீங்க இல்லே! என்னை நானே ஏமாத்திண்டேன்!''

அவன் மறுவிநாடி அங்கு நில்லாமல் வெளியேறினான்.

வண்டியைக் கிளப்பும் போது ஒரு கையாலாகாத்தன அவமான உணர்வு நெஞ்சை முட்டிற்று. எனக்கு இப்பொழுது பேச வார்த்தைகள் இல்லை என்று முணுமுணுத்துக் கொண்டான். அவர் சொல்வதில் ஓரளவு உண்மை இருக்கிறது. நான்தான் பொறுப்பு, என் வாழ்வில் ஏற்பட்டு விட்ட கோளாறுக்கு...

வீட்டை அடைந்த போது சித்ரா ஏதோ பத்திரிக்கையில் ஆழ்ந்திருந்தாள்.

அவன் நேரடியாக அவளிடம் தான் ராஜிநாமா செய்த விஷயத்தைச் சொன்னான்.

''இனிமேல் இந்த வீட்டில் இருக்க முடியாது. வேற வேலே கிடைக்கிற வரைக்கும் நான் எங்க அப்பா அம்மா வீட்டிலே இருக்கப் போறேன். உனக்கு இஷ்டமிருந்தா என்னோட வந்து அங்கே இருக்கலாம்!''

''இஷ்டமிருந்தாதானே?'' என்றாள் அவள் கோபமாக. ''நீ ஒரு பிழைக்கத் தெரியாதவன். அவ்வளவு நல்ல வேலையை சுலபமா ரிஸைன் பண்ணிட்டு வரது தைரியத்தினாலே இல்லே., முட்டாள் தனத்தினாலே! இதிலே என்னையும் நுழைக்கப் பார்க்கறே. தாங்க்யூ! நா அனாதையில்லே. எனக்கு எங்கப்பா வீடு இருக்கு!''

''சரி போ! உங்க அப்பனுடனேயே இரு!'' என்று அவன் தன் அறைக்குச் சென்று சொற்பமான தன் உடைமைகளைப் பெட்டியில் திணித்துக் கிளம்பினான்.

மார்பு வெகு நேரத்துக்குப் படபடத்துக் கொண்டிருந்தது.

தனது வாழ்வின் ஒரு முக்கியமான திருப்புமுனைக்கு வந்து நிற்கிற மாதிரி பிரமையேற்பட்டது. தன்து செய்கைக்கு மாலுவின் ஆதரவு நிச்சயம் இருக்கும் என்கிற சமாதானம் ஏற்பட்டது. நாகநாதன் சித்ராவுடன் இனிமேல் சமாதானம் ஏற்பட வழியே இல்லை என்று அவன் தனக்குள் வருத்தத்துடன் நினைத்துக் கொண்டான்.

அவன் வீட்டை அடைந்த போது வாசற் கதவு திறந்திருந்தது.

அம்மா கூடத்தில் யாரோ ஒரு வடக்கத்திய பெண்ணின் தோளை அணைத்துச் சமாதானமாகப் பேசிக் கொண்டிருந்தாள். அந்தப் பெண் அழுது கொண்டிருப்பது தெரிந்தது. அம்மாவின் கண்களிலும் நீர் இருந்தது.

(தொடரும்)



ஐஸ்கிரீம் தயார் செய்ய கஸ்டர்ட் பவுடரோ, ஐஸ் கிரீம் பவுடரோ தேவை என்பதில்லை. எளிய முறையில் தயார் செய்யும் ஐஸ்கிரீம். 'மில்க் பிரட்' அல்லது ரஸ்க் எதுவானும் வாங்கிக் கொள்ளுங்கள். அரை லிட்டர் பாலை கால் லிட்டராக அளவான சர்க்கரை போட்டுக் காய்ச்சுங்கள். பிரட் அல்லது 'ரஸ்க்'கைப் போட்டு ஊற வையுங்கள். ஊறி, ஆறியதும், மிக்ஸியில் நன்கு அடிக்கவும். வெனிலா அல்லது பிரியமான எஸன்ஸை விட்டு 'பிரீஸரில்' டிரேவில் வையுங்கள். 1 மணிக்குப் பிறகு எடுத்து மறுபடி மிக்ஸியில் போட்டு அடியுங்கள். மறுபடி 'பிரிஜ்' (குளிர் சாதன அறை) பிரீஸரில் வையுங்கள். நிறைய 'டுடி புருட்டி' பழங்கள் இருந்தாலும் போட்டு வைக்கவும். இப்போது ஒரு மணியில் 'ஐஸ்கிரீம்' ரெடி. சாப்பிட்டு விட்டால் விடாமல் செய்யத் துவங்குவீர்கள்.

—சித்ரா.

# இதற்கு என்ன செய்வது?



டி.ஆர்.ரமேஷ்

**ஜி. காயத்ரி தேவி, பொள்ளாச்சி.**

மூன்றுவருடங்களுக்குமுன்புஎனதுஎடை —84 கிலோவாக இருந்தது. ஸ்கிப் செய்தும், டயட்டில் இருந்தும் அப்போது 20 கிலோ குறைந்தது.

முன்பு ஸ்கிப் செய்யும் போது நன்ருக வேர்வை வெளியேறும். இப்போது 1000 தடவை ஸ்கிப் செய்தாலும் சுத்தமாக வேர்ப்பதே இல்லை.

நன்ருக வேர்த்தால்தான் உடல் இளைக்குமா? நான் உடல் இளைக்க மாத்திரைகள் சாப்பிடும் போது, எனது உறவினர்கள் அதைச்சாப்பிட்டால்பெராலிஸிஸ்வந்து விடும்எனச்சொன்னதால் 15நாளிலேயே நிறுத்தி விட்டேன்.

இப்போதைய எடை — 64 கிலோ. இன்னும் ஏழு கிலோ குறைய என்ன செய்ய வேண்டும்?

தொடர்ந்து ஒரே மாதிரியான பயிற்சியை, அதுவும் அதிக அளவில் செய்யும்போது உடம்பு அதற்கு மரத்துப் போய்விடுகிறது. (ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருப்பவர்களுக்கு ரயில் சப்தமே மரத்துப் போய் விடுவது போல) தினமும் தொடர்ந்து, வேகமாக மூன்றிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் நடந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

உடல் வேர்ப்பதற்கும், உடல் இளைப்பதற்கும் சம்பந்தமில்லை. உடம்பிலுள்ள துர்நீர் நீங்குகிறது. அவ்வளவுதான்.

மருத்துவரிடம் சென்று உங்களுடைய தைராய்ட் கிளாண்ட், ஹார்மோன் சரியாக இயங்குகின்றனவா எனப் பரிசோதியுங்கள்.

**ஏ. வசந்தி, கோவை.**

கடந்த இதழில் இதற்கு என்ன செய்ய வேண்டும் பகுதியில் மச்சத்தைப் போக்குவதற்கு பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்ளலாம் என்று கூறியிருந்தீர்கள் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்வதற்கு செலவு அதிகமாகுமா?

ஆமாம், செலவாகும். பிளாஸ்டிக் சர்ஜரி துறை உள்ள அரசாங்க மருத்துவமனையில் ஓரளவு செலவு குறைவாகச் செய்கிருர்கள். பெரிய பல நகரங்களில் இந்த வசதி இருக்கிறது.

**பெ. இராஜி, மாயூரம்.**

எனக்கு வயது 20. திருமணம் ஆகவில்லை. அடிக்கடி தலைவலி வருகிறது. அதுவும் வெயில், தலைக்குத் தண்ணீர் விட்டால் தலைவலியுடன் கண்வலியும் வருகிறது. மாதவிலக்குக் கோளாறுகளும் உண்டு. (2—3 மாதங்கள் தள்ளி வருவது, 4,3—ம் நாள் அதிக தலைவலியுடன் ஜுரம், உடல்வலியும் அதிகமாக உள்ளது: இது போன்ற தொல்லைகளும், படிக்கும்போது வலது கண் மட்டும் அதிகமாக வலிக்கிறது. தலையில் யாரோ கைவைத்து அழுத்துவது போன்ற பிரமையும், பாரமாகவும் உள்ளது. இதற்குவிளக்கமாகபதில்அளிக்கவும்.

உங்களுடைய கண்கள் பாதிக்கப்பட்டு இருக்கும் எனத்தோன்றுகிறது. கண் மருத்துவரை அணுகிப் பரிசோதித்துக் கண்ணாடி அணிந்து கொள்ளுங்கள். மாதவிலக்குச் சரியாக வருவதற்கு மாத்திரைகள் உள்ளன. பெண் மருத்துவரை அணுகினால் அவர் எழுதித் தருவார்.

**சாரதா, சென்னை—28.**

இல்வாழ்க்கையில் மிக துயரப்பட்டவன் நான். ஐந்து வருஷங்களுக்கு முன் ஒரு தரம் எனக்கு "ஹார்ட் அட்டாக்" வந்தது. வயிற்றில் கருப்பைமேல் கட்டியிருக்கு. ஆபரேஷன் செய்யணும் என்கிருர்கள். கட்டியில் வலி கிடையாது. ஐந்து வருஷமாக அதுவுமிருக்கிறது. அதனால் தொந்திரவும் இல்லை. உடல் பலஹீனமாக உள்ளது. நான் ஆபரேஷன் செய்து கொள்ளலாமா? இல்லை, அப்படியே விட்டு விடலாமா?

உங்களுடைய விரிவான கடிதத்தில் இருந்து நீங்கள் வயதானவர் என்று தெரிகிறது. பிளட் பிரஷர் தொந்தரவும் இருக்கும் போலிருக்கிறது. வயிற்றில் இருக்கும் கட்டி எத்தன்மையது என்று தெரியவில்லை. அறுபது வய

திற்குமேல், பலவித உடல் உபாதைகளுடன் மேஜர் ஆபரேஷனுக்கு உட்படுவது நல்லதல்ல. எனினும் கட்டியை நீக்குவது அவசியம் என மருத்துவர்கள் நினைப்பார்களேயானால் தக்க முன்னேற்பாடுகளை அவர்களே எடுத்துக் கொள்வார்கள். கவலைப்பட வேண்டாம்.

எஸ். ரமா, ஸ்ரீவில்லிபுத்தூர்.

நாம் அன்றாடம் உபயோகிக்கும் தீப்பெட்டிகளில் 50 குச்சிகள் என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் உள்ளே எண்ணிப் பார்த்தால் 30 அல்லது 32 குச்சிகள்தான் உள்ளன. இதற்கு என்ன செய்வது? யாரிடம் முறையிடுவது?

இது எந்த பிராண்ட் தீப்பெட்டி எனத் தெரிய வேண்டும். நிச்சயமாக நீங்கள் தொடர்ந்து உபயோகிக்கும் அத்தனைப் பெட்டிகளிலும் அப்படித்தான் இருக்கிறது என்றால் சம்பந்தப்பட்ட கம்பெனிகளுக்கும், 'சென்ட்ரல் எக்ஸைஸ் டிபார்ட்மெண்டிற்கும் எழுதலாம். உடைக்காத பெட்டியைக் கொண்டே நிரூபிக்க வேண்ம வரும்.

கற்பகம் சுமந்திரன், பழநி.

சென்ற இதழில் மோட்டார் வாகன விபத்து பற்றிச் சுருக்கமாகப் பதில் எழுதியிருந்தார்கள். அதைப்பற்றி விளக்கமாகக் கூற முடியுமா?

உங்களைப் போன்ற பெண்மணிகள் இதைப் பற்றி அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் விபத்துக்களில் குடும்பத் தலைவன் பாதிக்கப்படும் போது, ஏதுமறியாத மனைவியை இந்த மாதிரி சமயங்களில் நன்கு ஏமாற்றுகிறார்கள், இடைத்தரகர்கள். நன்கு பணம் சம்பாதித்து விடுகிறார்கள்.

ஒவ்வொரு வாகனமும் ஒருவருக்குச் சொந்தமாக இருப்பது போலவே, கட்டாயம் 'இன்ஷூர்' செய்ய வேண்டும் என்பது விதி. எனவே விபத்துக்கள் ஏற்படும் போது வாகனச் சொந்தக்காரர், இன்ஷூரன்ஸ் கம்பெனி இரண்டின் மீதும் சேர்த்தே வழக்குப் போட வேண்டும்.

இதற்கென்றே 'மோட்டார் வாகன விபத்து முறையீட்டு மன்றம்' என மாவட்ட நீதிமன்றங்களில் உள்ளது. அந்த மாவட்ட நீதிபதியே டிரிபியூனலாக அமருகிறார். அவரிடம் வழக்கை எடுத்துச் செல்ல வேண்டும்.

ஒருவருக்கு விபத்து ஏற்படுகிறது. அதனால் அவருடைய குடும்பமும் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறது என்பதை வைத்தே நஷ்ட ஈடு தரப்படுகிறது.

சம்பாதித்துக் கொண்டிருப்பவர், விபத்துக்குப்பின் சம்பாதிக்கும் திறனை இழப்பாரேயானால் அவர் பிற்காலத்தில் எவ்வளவு சம்பாதித்திருப்பார் என்பதை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்படுகிறது.

தவிரவும் மருத்துவச் செலவு, போக்குவரத்துச் செலவு, விபத்தினால் ஏற்பட்ட பொருள் நஷ்டம், மனக்கஷ்டங்கள், பிரச்னைகள் எனப் பலவும் ஆராயப்படுகின்றன. விபத்துக்களைப் பொறுத்தவரை விபத்துக்குள்ளானவரின் வாழ்க்கை முழுவதுமே ஆராயப்பட்டு விடுகிறது.

இதிலே இடைத்தரகர்களை நம்பி ஏமாறாமல் இருப்பதே முக்கியம். வழக்கறிஞரை வைத்து வாதிடுவதற்கு வசதியில்லையெனில், இலவச சட்ட உதவிக் குழுவை அணுகலாம்.

'இப்படி ஒரு பெண் தோன்றியதில்லை' என இன்னும் பல நூற்றாண்டுகளுக்கும் பிரமித்துக் கொண்டிருக்கும்படி செய்துவிட்டுப் போனவர் திருமதி இந்திரா காந்தி. அவருடைய பல்வேறு ஆளுமைகளையும் எடுத்துக் கூறுகிறது 'இந்திரா — சீடர்' எனும் ஆங்கிலப் புத்தகம். திரு. வேங்கடசுப்ரமணியனின் தலைமையில் ஒரு ஆசிரியர் குழாம் சிறப்பாக இப்புத்தகத்தைத் தொகுத்துள்ளது.

வெளியீட்டாளர்கள்:

TATA MC Graw – Hill Publishing Co. Ltd., 12/4, Asafali Road, New Delhi-110 002.


விலை ரூ. 24/–.

இல்லத்தரசிகள் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு மாறுகிறோம். 'கேஸ்' பிரச்னை பெரிய பிரச்னை. போகும் ஊரில் யார் டீலர், யாரிடம் சொல்வது என்பது தெரியாது. இந்தியாவிலுள்ள அனைத்து எரிவாயு விநியோகிப்பாளர்களின் முகவரிகளையும் தொகுத்து, வேறு பல பயனுள்ள செய்திகள், புகைப் படங்களுடன் புத்தகமாக வெளியிட்டுள்ளார்கள். தொகுப்பாளர்: இல. முனிவேலு.

வெளியீட்டாளர்கள்:

All India LPG Distributor's Federation, (Southern Region), 187/1, M. T. H. Road, Madras-49.

விலை ரூ. 50/–.



## புக்ஷெல்ஃப்

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு உண்டு என்ற உண்மையை கும்பகோணத்தில் உள்ள ''திரு இருதய ஆண்டவர் தொழுநோய் மருத்துவமனை'' செயல்படுத்திக் காட்டுகின்றது.

இம்மருத்துவமனை 1916—ஆம் ஆண்டில் ஐந்து தொழுநோயாளிகள் மட்டுமே தங்கக் கூடிய ஆசிரமமாக ஆரம்பிக்கப்பட்டாலும், தற்போது 770 படுக்கைகளோடு, இரத்த ஆய்வுக் கூடம், எக்ஸ்ரே பிரிவு, முடநீக்கி பயிற்சிப் பிரிவு, (**Physiotherapy**) தொழிற் பயிற்சிப் பிரிவு (**Occupation therapy**), கண் சிகிச்சைப் பிரிவு, சமூகநலத் துறை, காலணிகள், செயற்கைக்கால்செய்யும்பிரிவு, தொழுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஓர் நடுநிலைப்பள்ளி ஆகிய நவீன வசதிகள் அனைத்தையும் கொண்டு இந்தியாவிலேயே ஓர் முக்கியமான தொழுநோய் மருத்துவமனையாகச் செயலாற்றுகிறது. இங்கு தங்கியிருக்கும் சுமார் 770-உள் நோயாளிகளுக்கு மட்டுமின்றி தினமும் சராசரி 150 புற நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தொழுநோயின் ஆரம்பத்திலேயே அதாவது சிவப்பு அல்லது வெளிரிய, உணர்ச்சியற்ற, வியர்வையற்ற, உரோமங்களை இழந்த படைகளுடன் (தேமல்) வருபவர்கள் எந்த வித உடற்குறைபாடும் ஏற்படாமல் முற்றிலும் குணம் பெறுகின்றார்கள். இதற்கு மாறாக நோயை ஆரம்பத்திலிருந்தே மறைத்தோ, அசட்டையாகவோ இருப்பவர்களுக்கு கை, கால்களில் ஊனம் ஏற்பட வாய்ப்புள்ளது. சிறந்த அறுவை சிகிச்சையின் மூலம் ஊனமுற்ற கை, கால்களை நிவர்த்தி செய்வதுடன் தொழுநோயை எந்த நிலையிலும் குணமடையச் செய்கின்றது இம்மருத்துவமனை.

வேலையில்லாப் பிரச்னை தலைவிரித்தாடும் இன்றைய நிலையில் உறவினரால், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட தொழுநோயாளர்களின், அதிலும் உடல் ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது எளிதான செயலல்ல. பிச்சையெடுத்தோ அல்லது பிறரைச்சார்ந்து தான் வாழ முடியும் என்ற நிலையை மாற்றி, அவர்களாலும் சுயமாக வேலை செய்து கௌரவமான வாழ்க்கை நடத்த முடியும் என்பதை 'திரு இருதய ஆண்டவர் தொழுநோய் மருத்துவமனை' நடைமுறைப்படுத்தி வருகிறது.

குணமடைந்த, தகுதியான தொழுநோயாளிகளுக்குச் சுயவேலை வாய்ப்பளிக்க இந்திய அரசின் ''ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் (**Integrated Rural Devel opment Programme**) கீழ் தையல், நெசவு, பாய்தறி, காலணிகள் செய்தல், கலைப்படைப்புக்கள், (**Arts & Crafts**) அச்சிடுதல், பொம்மைகள் தயாரித்தல் போன்றவைகளில் பயிற்சி அளித்து, மருத்துவமனையிலிருந்தும், ஊராட்சி ஒன்றியத்திலிருந்தும், வங்கிகளின் மூலமாகவும் கடன் பெற்றுக் கொடுத்து சுயமாகத் தொழில் செய்து தன் சொந்தக் காலிலேயே நிற்க வகை செய்கின்றது இம்மருத்துவமனை.

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சைக்காகவும், மறுவாழ்வுக்காகவும் இம்மருத்துவமனை செய்து வரும் எல்லா வகைப் பணிகளையும் பாராட்டி மத்திய அரசாங்கம் இம்மருத்துவமனையை இந்தியாவிலேயே சிறந்த நிறுவனமாகத் தேர்ந்தெடுத்து தேசிய விருது வழங்கியுள்ளது. மருத்துவமனையின் நிர்வாகியான சங்கைக்குரிய சகோதரி ஆன்சில்லா அவர்கள் 1985, மே மாதம் 13—ம் நாள் புதுடெல்லியில் விஞ்ஞான பவனில் நடைபெற்ற விழாவில் உப ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களிடமிருந்து தேசிய விருதைப் பெற்றுக் கொண்டார்கள். தேசிய விருதுடன் ரூபாய் 50,000 (ஐம்பதாயிரம்) மதிப்புள்ள காசோலையையும் மருத்துவமனைக்காகப் பெற்றுக் கொண்டார்கள். இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுப் பணிபுரிந்து வரும் திரு. டேவிட் அவர்களும் இந்தியாவில் சிறந்த ஊனமுற்ற பணியாளருக்கான தேசிய விருதைப் பெற்றார்.

— கோபால்

# தேசிய விருது பெற்ற தமிழக மருத்துவமனை



நீரைக் கொதிக்க வைத்தல், பாட்டிலை
கிருமி நீக்கம் செய்தல், வெப்பநிலை சோதனை
செய்தல்—ஆகிய பிரச்சனைகள் இல்லை.



புதிதாகப் பிறந்த குழந்தை உணவைப் பெற்றிட எத்தகைய சுலபமான, வசதியான, இயல்பான வழி இருக்கிறது பார்த்தீர்களா?

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இயல்பாக நடந்த நீண்ட சோதனை கணிப்பின் மூலம் இயற்கை கண்டு கொண்டுள்ளது:

குழந்தைக்கான தாய்ப்பாலே உன்னத உணவாக்குபவை அதில் இயல்பாக சரிவிகிதமாகக் கலந்துள்ள உடல் வளர்ச்சிச் சத்துக்கள் (புரதம்), சக்தி தரும் சத்துக்கள் (கார்போ ஹைட்ரேட்டுகள், கொழுப்பு) ஆரோக்கியமான பாதுகாப்புச் சத்துக்கள் (வைட்டமின்கள்) ஆகும்.

## தூய்மைக்கேடு பிரச்சினை இல்லை.

உங்கள் குழந்தை, முலையிலிருந்து பாலை நேரடியாக குடிப்பதால் தூய்மைக்கேடு ஏற்படும் அபாயம் அதில் இல்லை தயாரிப்பு அல்லது பாலின் வெப்பநிலையை சோதித்தல் போன்ற பிரச்சினைகளும் அதில் இல்லை. அத்துடன் வயிற்றில் வாயுக்கோளாறுகள் மற்றும் இதர நோய்களிலிருந்து உங்கள் குழந்தையை பாதுகாத்திட தாய்ப்பாலில் நோய் எதிர்ப்புப் பொருள் இயல்பாகவே உள்ளது —இன்னும் இதர நன்மைகள்கூட அதிலே —உதாரணம் ஸ்கர்வியைத் தடுத்திட வைட்டமின் 'சி'. முலைப்பால் உண்ட குழந்தை பாதுகாப்பும் தன்னம்பிக்கையும் பெறுகிறது. காரணம் நீங்கள் குழந்தையை அரவணைத்து பாசத்தையும் சேர்த்தல்லவா பாலூட்டுகிறீர்கள்

## நாளும் பிரபலமடைகிறது

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேல் நாடுகளிலும்கூட முலைப்பால் கொடுத்தல் மிக அதிகமாக பிரபலமாகி வருகிறது.,

## உலகளாவிப் பிரபலமடைகிறது.

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேலை நாடுகளிலும் கூட முலைப்பால் கொடுத்தல் மிகவும் அதிகமாக பிரபலமாகி வருகிறது.

உங்கள் உடல் நல பாதிப்பு அல்லது பால் பற்றுக்குறை ஆகியவற்றால் நீங்கள் குழந்தைக்கு பால் கொடுக்கமுடியாமல் போனால் என்ன செய்வது?

உங்கள் குழந்தைக்கு நீங்கள் சிறந்த 'தாய்ப்பால் மாற்று' தேர்ந்தெடுக்க வேண்டும்.

## ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல்ஸ்ப்ரே

அமுல்ஸ்ப்ரே-நன்கு சமச்சீராக கலக்கப்பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போ ஹைட்ரேடுகள், சரியாகக் கலந்துள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெதுவெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது. முன்னாலேயே அதை பசைபோல் தயாரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

## சிக்கனமானது

டின்னில் அடைக்கப்பட்டுள்ள குழந்தை உணவுகளில் மிகவும் சிக்கனமானது, அமுல் ஸ்ப்ரே. காரணம், அது இந்தியாவின் 'வெண்மைப் புரட்சிக்கு முன்னோடியான நவீன பால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

ஆனால் கொதிக்க வைத்த நீர், சுகாதார முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பால் புட்டிகள் உபயோகித்தலை உறுதி செய்து கொள்ளுங்கள். பால் கலக்கப்படும்போது அதிகம் நீராகி விடுவதை தவிர்ப்பதற்கும், போதுமான ஊட்டச் சத்துக்களை உறுதி செய்வதற்கும் டின்மீது குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை கவனமாக பின்பற்றுக.




# அமுல்ஸ்ப்ரே

## தாய்ப்பாலுக்கு அடுத்தது தான்.

**இலவசம்! அமுல் வளர்ப்பு வழி—**
இதில் அடங்கியுள்ளவை: கருத்தரித்தல், பேறு காலத்திற்கு முன் கவனிப்பு, பிரசவம், தாய்ப்பால் ஊட்டுதல், வெளியில் கிடைக்கும் உணவு வகைகள், லேசான தானிய உணவு தருதல், குழந்தையின் அன்றாடக் கடன்கள், குழந்தையின் வளர்ச்சி, நோய்த் தடுப்பு, முதலுதவி, பொதுவான நோய்கள், நோயுற்ற குழந்தையைப் பாதுகாத்தல். தமிழ், இந்தி, மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம், தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில்.

உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் ரூ. 1.25 தபால் தலை ஒட்டி எழுதுக இம் முகவரிக்கு: தபால் பெட்டி எண் 10124, பம்பாய் 400 001.

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட்,
தபால் பெட்டி எண் 10, ஆனந்த் 388 001, குஜராத் மாநிலம்.

# கோடுகள் கோலமாவதில்லை

விகாஸ் மென்ட்டல் இன்ஸ்டிடியூட்.

ஓ! எத்தனை அழகான சூழ்நிலையில் அமைந்திருக்கிறது. மைசூரில் எங்கேயிருந்து பார்த்தாலும் தெரியும் சாமுண்டி மலை, இங்கே பின்னணியாக அழகு சேர்க்கிறது. ஊருக்கு வெளியே இருப்பதால் அமைதி ஆட்சி புரிகிறது. ஒரு மென்ட்டல் இன்ஸ்டிடியூட்டுக்கு இது அவசியம் இல்லையோ. கட்டிடங்களைச் சுற்றி பச்சைப் பசேலென தோட்டம். முன் பக்கம் பெரிய லான். நடுவில் தொட்டி நீரில் பூவும் மொட்டுமாய் தலையசைக்கும் தாமரை. பச்சைக் குடைகளாய்க் கவிந்திருக்கும் மரங்களின் கீழே ஆங்காங்கே மேடைகள்.

திடீரென அவள் மனதே லேசானது போல இருக்கிறது. மெலிதாக பாட வேண்டும் போல் ஒரு சந்தோஷம் உள்ளுக்குள் தலை தூக்குகிறது. மெள்ள ஹிந்தோளத்தை முனகிக் கொண்டே நிதானமாக நடந்து முகப்புக் கட்டிடத்தினுள்ளே படியேறுகிறாள். வராந்தாவில் முக்காலியில் அமர்ந்திருந்த பையன் தலையில் குல்லாயைச் சரிசெய்து கொண்டு கன்னடத்தில் என்னவோ கேட்கிறான். புரியாமல் திகைத்து, உடனே சுதாரித்து, டாக்டர் கிருபாகரன் என்று டைரக்டரின் பெயரைச் சொல்லுகிறாள் காதம்பரி.

"பன்னி" (வாங்க) என்று அழைத்துக் கொண்டு எழுந்து வழிகாட்டுகிறான் பையன். பன்னி பன்னி என்று தனக்குள் சொல்லிப் பார்த்துக் கொள்கிறாள் காதம்பரி. இனிமேல் இந்த உச்சரிப்பெல்லாம் காதுக்குப் பழக வேண்டியிருக்கும். சீக்கிரத்திலேயே கன்னடம் கற்றுக் கொண்டுவிட வேண்டும். டாக்டர்கள், நர்ஸ்கள்கூட ஆங்கிலத்தில் பேசினாலும், நோயாளிகள், குறிப்பாக இந்த மாதிரி நோயாளிகளைப் பரிசோதிக்கும்போது அவர்கள் மொழியிலேயே பேசினால்தான் எண்ணங்களை சரளமாக வெளியிடுவார்கள்.

"வெல்கம் டாக்டர் காதம்பரி....."

எழுந்து நின்று கைகுவிக்கும் டாக்டர் கிருபாகரன், நடுத்தர வயதுக்காரர்தான். அவள் எதிர்பார்த்திருந்தபடி வயதானவருமில்லை, வழுக்கைத் தலையுமில்லை.

அவருடைய அறையும் பளிச்சென்று துடைத்து வைத்தாற்போல் இருக்கிறது. நுழைந்ததும், கண்ணில் படும்படி கலையுணர்வோடு செய்து வைத்திருந்த இகேபானா. மேலே, ரொம்ப மாடர்னாக இல்லாத ஒரு பெயிண்டிங்கில் உருவங்களை ரசிக்க முடிகிறது. மேஜை மேல் சாமான்கள் அதனதன் இடத்தில் இருக்கின்றன அவளுக்குப் பிடித்த மாதிரி. ஒரு நொடியில் எல்லாம் காதம்பரியின் கண்ணில் பட்டு மனதில் படிகின்றன.

"நம்ம ஸரௌண்டிங்ஸ் அழகா, ஆரோக்யமா இருந்தா, அதுவே பாதி மனசுக்குத் தெம்பு இல்லையா...." முறுவலிக்கிறார் கிருபாகரன்.

இதுவரை அவள் வேலை செய்த கவர்ன்மென்ட் ஹாஸ்பிடலோடு சட்டென்று ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அங்கும் டாக்டர்கள் சிகிச்சைக்கு வருபவர்களிடம் அக்கறையுள்ளவர்கள்தான். காதம்பரியேகூட நேரம் காலம் பாராமல் வேலை செய்திருக்கிறாளே. ஒரு ஓவர்டைம் உண்டா, மூச்! போகட்டும், ஆஸ்பத்திரியைத்தான் இந்த மாதிரி வைக்க முடியுமோ. கீழே யாரையும் அதட்டி வேலை வாங்க முடியாது.



அங்கேயும் முன்புறம் நீர் தொட்டி இருந்தது. தண்ணீர் இல்லாமல் காய்ந்து குப்பையும் சத்தையும் அடைந்து, தோட்ட வேலைக்கான சாமான்களை அதில் போட்டு வைத்திருந்தார்கள். தோட்டக்காரர்கள். மேலும் சித்திரம், மலர் அலங்காரம் என்றெல்லாம் அழகுபடுத்த ஆகாது! அப்படி யாரும் ஒரு ரூபாய் அதிகம் செலவிட்டாலும் ஆயிரம் கேள்விக்கு சமாதானம் சொல்லி சமாளிக்கும்படி இருக்கும்.

அவள் பயணத்தைப் பற்றி விசாரிக்கிறார் கிருபாகரன்.

விகாஸ் மெண்ட்டல் இன்ஸ்டிடியூட் பிறந்ததைப் பற்றி, கடந்த வருடங்களின் வளர்ச்சியைப் பற்றிச் சொல்லுகிறார். ஏழு டாக்டர் நண்பர்கள் இந்த மாதிரி முயிற்சியில் ஈடுபட வேண்டுமென்று துணிந்து, தனியார் முயற்சியாக ஆரம்பித்ததையும் பற்றிச் சொல்கிறார். அவர்கள் எல்லோருமே வெளிநாட்டில் பட்டங்கள் வாங்கி அங்கேயே ரிஸர்ச் செய்தும், வெற்றிகரமாக பணியாற்றியும் வந்தவர்கள். ஏதோ ஒரு உந்துதலினாலும், அரசாங்கம் இப்படித் திரும்பி வருகிறவர்களுக்குச் சலுகைகள் அளிப்பதாய் அறிவித்திருந்தாலும், தாய் நாட்டிற்கு வந்து இப்படியொரு முயற்சியில் இறங்கியதையெல்லாம் விவரிக்கிறார்.

“ஓ. அப்படியா. இங்கே காலை வெச்சதுமே எனக்குப் பிடிச்சுப் போச்சு. கேட்டதும், இப்போ ரொம்ப சந்தோஷமா இருக்கு.... நிஜம்மா சொல்றேன். உங்க ஆஃபரை ஒத்துண்டதுக்கு நான் ரொம்ப சந்தோஷப்படறேன்” காதம்பரி முழு மனதாய் முறுவலிக்கிறாள்.



''ஊருக்குக் கொஞ்சம் தள்ளிதான். ஆனு லும் பாதகமில்லே. இவ்வளவு பெரிய இடமும் நிம்மதியான சூழ்நிலையும் ஊருக்குள்ள எப்படி கிடைக்கும். பின்னுடி சாமுண்டி மலேயும் மேலே கோவிலும் தெரியறதே. கவனிச்சிங்களோ....''

''ம். முதல்ல அதான் கண்ணிலே பட்டுது.

''இங்கே வரவங்க எல்லாருக்குமே அது ரொம்பப் பிடிக்கிறது. ஒருநாள் காலேயில வந்திருந்து பாருங்க. எத்தினி பேர் முதல் காரியமா வெளிலே வந்து அதைப் பார்த்து கன்னத்திலே போட்டுக்கறுங்கன்னு தெரியும். மனசுக்கு ஒரு தைரியம் தரது. அதுதானே முக்கியம்..... ஆ, நல்லவேளே நீங்க காரை கொண்டு வந்துட்டிங்க. டிரான்ஸ்போர்ட் பிராப்ளம் இல்லே. இங்கே காம்பவுண்ட் லேயே டாக்டர்ஸுக்கு குவார்ட்டர்ஸ் கட்ட னும்னு கூட ஒரு பிளான் இருக்கு. நாமெல் லாம் ஒரு பெரிய ஃபாமிலியாட்டம் இருந்துட லாம். ஆனு, நாளாகும். பண வசதியையும் பாக்கனுமே. ஆமாம், உங்களுக்குப் பாத்து வெச்ச விடு சரியாயிருக்கா....''

''நல்லாவே இருக்கு....''

''மைசூரிலே விடு கிடைக்கிறது கொஞ்சம் சிரமம். நேத்திக்கு என் வொய்ஃபை போய் பார்த்துட்டு வரச்சொன்னேன். பின்னுடி சூளாய் லீக் ஆகுதுன்னு சொன்னு. ஐ வில் செண்ட் எ ப்ளம்பர்....''

ஒருவர் இன்னொருவர் விஷயத்தில் இவ் வளவு அக்கறை செலுத்தமுடியுமா....சின்னச் சின்ன விஷயங்களேக் கூட கவனித்து செய்து.....

''உங்களே எப்படி 'தாங்க்' பண்ணற துன்னே தெரியல்லே. வாயாலே வெறுமே தாங்க்யூன்னு போறுது.....''

''நீங்க ஒண்ணும் சொல்லவே வேண்டாம். உங்க சௌகரியமெல்லாம் சரியாயிருந்தா தானே நீங்க அதைப் பத்தி கவலேப்படாமே, பேஷண்ட்க பேர்லே முழு அக்கறை செலுத் தலாம். காபி சாப்பிட றீங்களா?''

அவளுககுக் காபி வரவழைத்துத் தருகிருர் அவளுடைய பொறுப்புகளே, அவர்கள் வேலே செய்யும் விதத்தை விளக்குகிருர். அவளு டைய அறைக்கு அழைத்துப் போய் காண்பிக் கிருர். மற்ற டாக்டர்களே அழைத்து மூர்த்தி, சந்தர், ராம்குமார், வஸந்த் என்று ஒவ்வொரு வராய் அறிமுகம் செய்து வைக்கிருர். அந்தப் பையனேக் கூப்பிட்டு லீலாவை அழைத்து வரச் சொல்கிருர்.

''மேட்ரன்'' என்று அறிமுகம் செய்து வைத்திருக்கவேண்டியதேயில்லே. லீலாவைப் பார்த்தாலே தெரிகிறது.

''எனக்கு ஒரு அப்பாயிண்ட்மென்ட் இருக்கு. அதனுலே லீலா உங்களே இன்ஸ்டி டியூட் முழுக்க சுத்திக் காட்டுவா. பெஸ்ட் ஆஃப் லக்.....'' என்று விடை பெறுகிருர்.

அந்தப் பண்பு அவளேத் தொட, லீலா வுடன் உள் கட்டிடத்துக்குப் போகிருள்.

மாடியிலே ஆக்குபேஷனல் தெரபி, ரிக் ரியேஷன், சின்ன லேப்ரரி, என்று இருக்கிறது. நடுவில் பெரியதாய் முற்றம். மேலே குறுக் குக் கம்பிகளுடன் மெல்லிய வலேக்கம்பியும் பொருத்தியிருக்கிறது. பட்சி தொந்தரவைத் தடுக்க என்று விளக்குகிருள் லீலா.

கட்டிடத்தின் இடது பக்கவாட்டிலிருந்த வெளி வராந்தா அவுட் பேஷண்டாகியிருக் கிறது. வெளியே காட்டேஜ் போல சின்னச் சின்ன கட்டிடங்கள் குடும்பச் சூழ்நிலே சீக் கிரம் குணப்படுத்தும் என்கிற பேஷண்டு களுக்கு. அதன் பக்கத்திலேயே நர்ஸுகளுக் கும் இதர சில வேலேக்காரர்களுக்குமான கட்டிடம். காதம்பரி எதிர்பார்த்ததை விட ரொம்பப் பெரியதாக, நன்ருக இருக்கிறது விகாஸ்.

சுற்றிப் பார்த்துவிட்டு ஃபிமேல் வார்ட் வழியே திரும்புகிருர்கள். ஆளுக்கொரு மூலேயையோ கூரையையோ வெறித்துக் கொண்டிருக்கும் இந்த இருபது பெண்களும் தங்களுக்குள் என்னென்ன யோசித்துக்

புடலங்காய் விதைகளேச் சட்னி மட்டு மல்ல, ருசியான பொடி தயாரிக்கலாம். விதைகளே நல்ல வெயிலில் உலர்த்தி விடவும். அளவான மிளகாய் வற்றல், கடலேப் பருப்பு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம் இவற்றை வறுத்து உப்பு சேர்த்து மிக்ஸியில் பொடித்துக் கொள் ளுங்கள். பொடி விஷயம்தான். பிரமிப் பான ருசி கிடைக்கும்.

—சித்ரா.



கொண்டைக்கடலே போன்றவை சுண்டல் செய்யும் போது உருவத்தில் பருத்து இருந்தால் நன்ருக இருக்கும். முதல்நாளே ஊறவைத்தால்கூட 1 மணி நேரம் வெயிலில் வையுங்கள். பிறகு வேக வைத்தால் கடலே சுருக்கமின்றிப் பெரிதாகவும் வெந்தும் காணும்.

—சித்ரா.

கொண்டிருப்பார்கள்...... திடீரென்று யாரோ தோளில் தட்ட, திடுக்கிட்டுத் திரும்புகிறாள் காதம்பரி. தன்னுடைய அகன்ற கண்கள் சோகத்தைகொட்ட, நோயாளியொருத்தி மௌனமாய் இவள் கண்ணுக்குள்ளே ஊடுருவுவது போல் பார்க்கிறாள்.

ஸ்ஸ்ஸ்...என்று மெல்ல விலக்குகிறாள் லீலா. கையை எடுத்தாலும் கூடவே நடக்கிறாள் அவள். கன்னடத்தில் முணு முணுக்கிறாள். லீலாவைப் பார்க்கிறாள் காதம்பரி.

"டாக்டர் சந்தரோட பேஷண்ட். ஹஸ்பண்ட் கூட போகணும்ங்குது. போகவிடாம யாரோ தடுக்கறமாதிரி பிரமை.... அவளுக்குள்ளே ஒரு பியர் காம்ப்ளெக்ஸ்..... நார்மலா இருக்கச்சே அவளைப் பார்த்தா இங்கே ஒரு கேஸ்னு நம்மாலே நம்பவே முடியாதுங்க. மண்ணியிலே அவ்வளவு நல்லா கைவேலை பண்ணுவா....."

வார்டிலிருந்து இவர்கள் வெளியேறுமுன் டக்கென்று காதம்பரியின் காலில் விழுகிறாள் அந்தப் பெண். "டாக்டரே...." அவள் அழைப்பிலிருந்த பாவம்..... ஒருகணம் திகைத்து, பின் மெல்ல குனிந்து அவளைத் தட்டிக் கொடுத்துவிட்டு வெளியேறுகிறாள். டக்கென்று கம்பிக்கதவை சாத்திவிடுகிறாள் காவல் ஆயா. வார்டிலிருந்த மற்றவர்கள் கவனம் இங்கே திரும்பவில்லை. ஒரே இடத்திலிருந்தாலும், ஒவ்வொருவரும் தனித்தனி உலகங்களில் சஞ்சரிக்கும் இதுவே ஒரு தனி உலகமில்லையோ..... கொஞ்ச தூரம் வந்து திரும்பிப் பார்க்கையில், கம்பியில் முகம் அழுந்த, அந்தப் பெண் இவர்களையே பார்ப்பது தெரிகிறது. அவநம்பிக்கை ஊசலாடும் அந்தக் கண்கள்....

தோட்டத்து மைனாக்களை நினைவூட்டவில்லையோ! எப்படியாவது கணவனுடன் போய்ச் சேர வேண்டும் என்று துடிக்கும் அவள் எப்படியாவது அவனை விட்டு விலகிவிட வேண்டும் என்று முனைந்து விவாகரத்து செய்துவிட்டதால் — அவள் உள்ளே.... தான் வெளியே.... அவள் சந்திக்க நேர்ந்த முதல் பேஷண்டின் கதையே இதுவா.....

"பஸ்ஸ்ஸ்" என்று இண்டர்காம் ஒலிக்கிறது. டாக்டர் கிருபாகரன்.

"காதம்பரி, எல்லாம் பாத்திங்களா, பிடிச்சிருக்கா....."

"ரொம்ப. இப்படியிருக்கும்னு நான் நினைக்கவேயில்லை.."

"குட். லஞ்சுக்கு என்ன பண்ணப் போறீங்க..."

"இங்கே கான்டீன்லே ஏதாவது....."


"ஐ வாண்ட் டு டேக் யூ ஹோம். வரீங்களா....."

"ஓ யெஸ். நான் ரெடி. மிஸஸ் கிருபாகரனையும் பார்த்துச் சொல்லு வேண்டாமா. எனக்காக எவ்வளவு சிரமம் எடுத்துகிட்டு வீட்டை ரெடி பண்ணி வெச்சிருக்காங்க."

"ஓ.கே. ஒரு மணிக்கு ரெடியாயிருங்க."

(தொடரும்)

# சந்தன மாலை



கோவிலில் சந்தனக் காப்பு செய்த சந்தனம் வில்லைகளாக மலிவாகக் கிடைக்கும். இந்தச் சந்தனத்துடன், பன்னீர், நீர்விட்டு ஊற வைத்து மீண்டும் மாலை செய்யலாம்.

ஊற வைத்த சந்தனத்தை சுத்தமான பலகையில் மெல்லியதாகத் தடவிக் கொள்ளுங்கள். பாரிஜாத வடிவில் (5 இதழ்கள்) அச்சில் வைத்து அழுத்திக் கொண்டேபோங்கள். நிழலில் காய்ந்து விடும்.

அச்சிற்கு எங்கே போவது? வேண்டாத பல்பின் தலைபாக அலுமினியப் பகுதியை எடுத்து " இந்த மாதிரி வளைத்து வைத்துக் கொள்ளுங்கள். இதுவே போதுமானது. காய்ந்து போகும் முன்பே வில்லைகளில் ஓட்டை இடுங்கள். வில்லைகளை எடுத்து நல்ல நூலில் 1" வில்லை, இரண்டு சிகப்பு பிளாஸ்டிக் மணிகள் விதமோ, அல்லது சிகப்பு உருண்டை ஒயர் வாங்கி அரை இஞ்சில் வெட்டி வைத்துக் கொண்டோ கோர்க்கலாம். இப்போது எந்த அளவில் மாலை தேவையோ தயார் செய்து படங்களுக்குப் போடலாம். கவர்ச்சியோடு மணமாகவும் இருக்கும்.

—"சித்ரா."

# திருமண மலர்

சங்கீதத்தில் டிப்ளமா பாஸ் செய்து டியூஷன் மூலம் மாதம் ரூ. 500/—க்கு மேல் சம்பாதிக்கும் திருவாதிரை நட்சத்திரம் பாரத்வாஜ கோத்திரம் 29 வயது பெண்ணிற்கு நிரந்தரமான உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும் பெட்டி எண்: 2434.

மத்திய அரசில் நிரந்தர தொழில் செய்யும் மாதம் 1300 ரூபாய் வருமானம் உள்ள எஸ். எஸ். எல். சி. படித்த இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 33 வயதுடைய ஏழ்மையான கௌரவமான வரனுக்கு அரசு தொழில் செய்யும் பெண்ணோ, செய்யக் கூடிய தகுதியுடைய அழகிய பெண் தேவை. ஜாதி மத பேதமில்லை. வரதட்சிணை இல்லை. ஜாதகம் இல்லை. பெட்டி எண்: 2435.

பி. யூ. ஸி. படித்த மத்திய சர்க்காரில் (ரயில்வேயில்) ரூ. 1000/— பெறும் நல்ல அழகான சிவந்த பலிஜா நாயுடு வகுப்பைச் சேர்ந்த வயது 30 (வயது உடைய) ஒரே மகனுக்கு நல்ல வேலை பார்க்கும் அல்லது பார்க்காத அழகான நல்ல குணநல பண்புகள் அமைந்த பெண் தேவை. பெட்டி எண்: 2436.

கா ஜூ-லு. பலிஜா நல்ல குடும்பம், 30 வயது சிவந்த குடும்பப்பாங்கான வீட்டை நன்கு நிர்வகிக்கக் கூடிய பட்டதாரிப் பெண்ணுக்கு அதே ஜாதியில் தகுந்த மணமகன் தேவை. நன்ருகச் செய்து கொடுக்கப்படும். மணமகன் விவரம், ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2437.

திருநெல்வேலி சைவ வேளாளர் பிள்ளை 30 வயது பி. ஏ. நல்ல தோற்றம் ரூ 7 லட்சம் சொத்து வசதியும் விவாகரத்து ஆன, குழந்தையில்லாத மணமகனுக்கு படித்த நிறமுள்ள அழகான அதே வகுப்பைச் சேர்ந்த பெண் தேவை. பெட்டி எண்: 2438.

இந்து நாடார் (காரைக்காலில் நாயக்கர், பாண்டிச்சேரியில் கிராமணி, மற்ற இடங்களில் நாடார் என்றும் கூறுவர்.) பி. யூ. ஸி. வரை படித்த நல்ல அழகுள்ள 5 அடி 1 அங்குலம் உயரமுள்ள சிவப்பு நிறமுள்ள குடும்பப்பாங்கான பெண்ணுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த அழகுள்ள அரசு உத்தியோகத்தில் நிரந்தர பணிபுரிபவரோ (அ) வேறு நிரந்தரமான சொந்தத் தொழில் உள்ளவரோ 32 வயதுக்குள் உள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 2439.

பிராமணன், வடமாள் கௌண்டின்ய கோத்திர பூரட்டாதி நட்சத்திரம் ரூபாய் 850/— சம்பாதிக்கும் சென்னை தொலைபேசி நிலைய கோட்டக்கர் ஆகப் பணிபுரியும் வயது 31 பையனுக்கு வேலைக்குப் போகும் பெண் மட்டும் தேவை. உட்பிரிவு பாதகமில்லை. பெட்டி எண்: 2440.

மிருகசீரிஷம், ஆசாரி, வயது 35, வருமானம் ரூ. 1000/— விரைவில் சென்னைக்கு மாறுதலில் வர உள்ள வரனுக்கு, சென்னையில் அரசுப் பணியில் அல்லது நல்ல வசதியான, அழகான, தெய்வ சிந்தையுடைய மணமகள் தேவை. ஊனமுற்றோரும், விவாகரத்தானோரும் எம்மதமும் சம்மதம். பெட்டி எண்: 2441.

* எம். பி. பி. எஸ். (ஹவுஸ் சர்ஜன்) 24/175 ஆதி திராவிட இளைஞனுக்கு 20—க்கு உட்பட்ட பட்டதாரி அல்லது எம். பி. பி. எஸ். படிக்கும் பெண் தேவை. ஜாதகம் அல்லது சரியான பிறந்த தேதியும் பிறந்த நேரமும் குறித்து பெற்றோர் எழுதவும். பெட்டி எண்: 2442.

மாத்வ, கன்னட பிராமணர் — மௌத்கல்ய கோத்திரம் — கிருத்திகா நட்சத்திரம் — வயது 22, எஸ். எஸ். எல். ஸி., வீட்டு வேலைகளில் தேர்ச்சி பெற்ற பெண்ணிற்கு படித்த மத்திய/மாநில/நல்ல உத்தியோகத்தில் உள்ள வரன் தேவை. பெண்ணிற்கு ஜாதகம் இல்லை. உடனே தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2443.

ஐயர், ஆத்ரேய கோத்திரம், பிருஹசரணம், பரணி, 30 வயது, 5' 4'' உயரம், பி.யு.ஸி. ஜூனியர் அஸிஸ்டெண்ட், மாநில அரசு, சென்னை, ரூ. 700/— சம்பளம் பெறும் பெண்ணுக்கு மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2444.

பாரத்வாஜ கோத்திரம் கண்டரமாணிக்க பிரஹசரணம், உத்திராடம் முதல் பாதம் வயது 27, உயரம் 4' 10'' எஸ்.எஸ்.எல்.ஸி., தட்டெழுத்து, சுருக்கெழுத்து பாஸ் செய்த வேலைக்குப் போகாத குடும்பப்பாங்கான பெண்ணிற்கு மத்திய, மாநில அரசிலோ, அல்லது நிரந்தர கம்பெனியிலோ வேலை பார்க்கும் வரன் தேவை. குழந்தை இல்லாத தாரம் இழந்தவர்களும் 36, 35—க்குள் ஏற்றுக் கொள்ளப்படும். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சி. ராமமூர்த்தி, 1—ஏ, செல்வராஜ் தெரு, கணபதிபுரம், குரோம்பேட்டை, சென்னை—600 044.

பாரத்வாஜ கோத்திரம், வடமாள், பூராடம், 3—ம் பாதம்-வயது 20, உயரம் 5' 3'' தட்டெழுத்து, சுருக்கெழுத்து தெரிந்த +2 படித்த வேலைக்குப் போகும் திறமையுள்ள அழகான குடும்பப்பாங்கான பெண்ணிற்கு அதே பிரிவைச் சேர்ந்த தனியார் அல்லது அரசாங்கத்தில் வேலை பார்க்கும் மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. முகவரி: எஸ். சுவாமிநாதன், நம். 2—ஏ, செல்வராஜ் தெரு, கணபதிபுரம், குரோம்பேட்டை, சென்னை—600 044.

ஆத்ரேய கோத்திரம், பிரஹசரணம், ரோகிணி, எஸ். எஸ். எல். ஸி. படித்த 25 வயது 5' 7'' அழகான குடும்பப்பாங்குள்ள காது கேளாத பெண்ணுக்கு நல்ல குணம், கருணை உள்ளம்கொண்ட பரந்தமனப்பான்மை உள்ள மணமகன் தேவை. இந்த மாதிரி குறை அல்லது மற்ற உடல் ஊனம் உள்ள பிராமணர்களும் ஏனைய பிரிவினர்களும் விரும்பினால் ஊனம் எதுவும் இல்லா

தவர்களும் விண்ணப்பிக்கலாம். மத்திய மாநில அரசு உத்தியோகம் மற்றும் நிரந்தர உத்தியோகத்தில் இருப்பவர் குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். கடைசி வரை வைத்துக் காப்பாற்ற வேண்டும். பெட்டி எண்: 2445.

பாண்டிச்சேரி மாநில அரசில், மாதம் ரூ. 1200/— பெறும், வேலையை விட விரும்பாத, ஐயர், கௌசிக — வடமாள், சித்திரை, 31 வயது ஆசிரியைக்கு, மாற்றல் வசதியுள்ள மத்திய, மாநில, பாங்க் அல்லது தனியார் நிறுவனத்திலிருக்கும் மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2446.

15 வயதில் இரு கண்களிலும் பார்வை இழந்து தற்பொழுது 30 வயதான பட்டதாரி சென்னையில் இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கியில் டெலிபோன் ஆபரேட்டராக பணிபுரியும் மாதம் ரூ. 1400/— சம்பளம் பெறும் துளுவ வேளாளர் பையனுக்குக் குறைந்தது எஸ். எஸ். எல். சி. வரை படித்த 25 வயதிற்குள் மணமகள் தேவை. எந்த ஜாதியினராயினும் பரவாயில்லை. பெட்டி எண்: 2447.

பி. காம் படித்து புவனேஸ்வரத்தில் மத்திய அரசு நிறுவனத்தில் வேலை பார்க்கும் மணமகனுக்கு குடும்பப்பாங்கான மணமகள் தேவை. வயது 27, உயரம் 156 செ.மீ. சம்பளம் ரூ 1250/— பெறும் இவர் பலிஜ செட்டியார். உட்பிரிவுகள் சம்மதம். பெண் சைவமாயிருப்பின் நல்லது. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2448.

27/165 பட்டதாரி அசைவ காரான வேளாளர் மணமகனுக்கு மணமகள் தேவை. வேலை பார்க்கும் பெண்ணாயிருந்தால் நல்லது. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். எஸ். ராஜப்பா, சி—63, ஹவுஸிங் யூனிட், இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோயம்புத்தூர்—641021, தமிழ்நாடு.

27 வயது நடக்கும் படையாச்சி — வன்னிய குல க்ஷத்திரியர் வகுப்பு — அரசினர் கலைக்கல்லூரி — உதவி பேராசிரியர் படிப்பு — எம். எஸ். ஸி. — எம். பில். — வசதியுள்ள மணமகனுக்கு — அதே வகுப்பைச் சேர்ந்த படித்த பட்டதாரி குடும்பப்பாங்கான செவ்வாய் தோஷம் உள்ள, பெண் தேவை. வேலையில் உள்ளவர்களும் தெரிவிக்கலாம். ஜாதகம் அனுப்பவும். வரதட்சிணை தேவை இல்லை. பெட்டி எண்: 2449.

அரசு துறையில் ரூபாய் 1000/— சம்பளம் பெறும் 35 வயது நிரம்பிய விதவையும், விதிவசத்தால் தாய்மை நிலையை இழந்த நாயர் பெண்ணுக்கு பரந்த மனப்பான்மையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: எஸ். சாந்தா விஜயகுமார், எல்ஐ.ஸி. ஆஃப் இந்தியா, தபால் பெட்டி எண்: 11, பாங்க் ரோடு, உதகமண்டலம்—643001.

ஹரித கோத்திரம், பூராடம் நட்சத்திரம்., வயது 34, டில்லியில் ஸ்டெனோவாக வேலை பார்க்கும் ரூ. 1900/— வருமானமுள்ள ஐயர் பையனுக்கு, மத்திய அரசு பாங்கில், அல்லது மாற்றிக் கொள்ளக் கூடிய வேலையில் இருக்கும் மணமகள் தேவை. ஜாதகம் மற்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2450.

மத்திய அரசு சென்னை நிறுவனத்தில் வேலை பார்க்கும் பலிஜ செட்டியார் 29/165/1300 மணமகனுக்கு, சென்னை/மாற்றும் பெறும் மணமகள் தேவை. ஒரே மகனான இவர் இரட்டைப் பட்டதாரி, ஆயில்யம் 3—ம் பாதம், உட்பிரிவுகள் சம்மதம். பெண் சைவமாயிருப்பின் நன்று. விளம்பரத்தின் நோக்கம் நல்ல துணைக்காக. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2451.

சைவ (கார்காத்த) வேளாளர் வகுப்பு, வயது 30, உயரம் 5' 4'' நல்ல நிறம், தமிழ் பண்டிட் வேலை (மாதம் சம்பளம் 850/—) பார்க்கும் பெண்ணிற்கு நல்ல வேலையில் உள்ள 35 வயதிற்கு மேற்படாத அதே வகுப்பைச் சேர்ந்த மணமகன் தேவை. பெட்டி எண்: 2452.

இராஜ கம்பள நாயுடு பெண், பி. எஸ்ஸி., பி.எட்., படித்து தனியார் நிறுவனம் ஒன்றில் ரூ. 750—ல் வேலையில் இருக்கும் சுமாரான அழகுடைய, நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த பெண்ணிற்கு, அதே பிரிவில் (அ) நாயுடுவில் மற்ற எந்த பிரிவைச் சார்ந்திருக்கலாம், படித்து வேலையில் உள்ள (அ) படித்துவிட்டு சொந்தத் தொழில் செய்யக் கூடிய வரன் தேவை. பெட்டி எண்: 2453.

பாரத்வாஜ கோத்திரம், பிரஹசரணம், உத்திர நட்சத்திரம், பி. எஸ்.ஸி. படித்த 25/155 செ.மீ., டெலிபோன் ஆபரேட்டர் ஆக ரூ. 800/— வருமானமுள்ள, கைவேலைகள் தெரிந்த குடும்பப்பாங்கான பெண்ணுக்கு 30 வயதிற்குள் பட்டம் பெற்று வேலை பார்க்கும் பையன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2454.

நெல்லை மாவட்டம் சைவ வேளாளர் நடுத்தர வகுப்பு, வயது 24, கார்த்திகை நட்சத்திரம், 5' 4'' உயரம், நல்ல நிறம், எம். ஏ. தேர்வு எழுதியுள்ள, தட்டச்சு தேறியுள்ள, தையல் வீட்டு வேலையில் தேர்ச்சியுள்ள, சொந்த வீடு உள்ள பெண்ணுக்கு, அரசுத்துறை அல்லது வங்கியில் வேலை பார்க்கும் வரன் தேவை. ஜாதகம் குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2455.

நல்ல வசதியான முதலியார் வகுப்பைச் சேர்ந்த (பம்பாய்) நல்ல அழகு, சிவந்த நிறம், வயது 22, 156 செ.மீ. பி. காம்., பட்டதாரிப் பெண்ணுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த பட்டதாரி, உயர்ந்த உத்தியோகத்திலுள்ள அழகான மணமகன் தேவை. பெட்டி எண்: 2456.

ஸ்மார்த்தா தேசிஸ்த்தா மராத்தி, ஆத்ரேய கோத்திரம், பூரட்டாதி, வயது 30, உயரம் ஐந்தடி எஸ். எஸ். எல். சி., பாலசேவிகா வேலை பார்க்கும் பெண்ணிற்கு மத்திய/மாநில/நல்ல உத்தியோகத்தில் உள்ள வரன் தேவை. மாத்வா தேசிஸ்த்தாவும் சம்மதம். பெட்டி எண்: 2457.

வடமாள், நைத்ருபகாஸ்யப கோத்திரம் ஹஸ்தம், 27 வயது, நல்ல சிகப்பு நிறமுள்ள சற்று பருமனுள்ள பத்தாவது வரை படித்திருக்கும் பெண்ணிற்கு மத்திய/மாநில அரசாங்கத்தில் சாதாரண உத்தியோகத்தில் பணிபுரியும் மணமகன் தேவை. திருமணம் சுமாராக செய்து கொடுக்கப்படும். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். வி. கிருஷ்ணமூர்த்தி, டைப்—2, 38/4, ஆர்ட்னன்ஸ் எஸ்டேட், திருச்சி—16.

இந்து ரெட்டியார், குடும்பப்பாங்கான வசதியுள்ள கான்வெண்ட் டீச்சர் 36/160 செ.மீ./800—க்கு பரந்த

திருமணமலர்ப் பகுதியில் விளம்பரம் செய்ய கட்டணம் ரூ 30/— தொகையை 'மங்கையர்மலர்' என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்ப வேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒருவருக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். பதில் அனுப்புபவர்கள் "விளம்பரதாரர், பெட்டி எண்... c/o மங்கையர் மலர், கிண்டி; சென்னை 600 032. என்ற விலாசத்துக்கு அனுப்பவும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.

மனப்பான்மையுள்ள மணமகள் தேவை. ஜாதி வேறு பாடில்லை. தாரம் இழந்தவர், விவாகரத்தானவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 2458.

வன்னியர் படையாச்சி வகுப்பைச் சேர்ந்த, மத்திய அரசு கம்பெனியில் மாதம் ரூ. 2000/— சம்பாதிக்கும், 5' 2'' உயரமுள்ள, 32 வயது மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த, செவ்வாய் தோஷம் இல்லாத, நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2459.

பள்ளி ஆசிரியராக வேலை பார்க்கும், கார்காத்தார் குலத்தைச் சேர்ந்த 26 வயது மணமகனுக்கு, அதே குலத்தைச் சேர்ந்த படித்து மாற்றத்தக்க வேலையிலிருக்கும் அழகான மணமகள் தேவை. பள்ளி ஆசிரியராயிருந்தால் நல்லது. குடும்ப விவரம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2460.

சௌராஷ்டிரா வகுப்பைச் சேர்ந்த பி. எஸ்ஸி., எம். பி. பி. எஸ். படித்த, 29 வயதான, வசதியுள்ள வரனிற்கு, அதே வகுப்பைச் சேர்ந்த எம். பி. பி. எஸ். படித்த அழகான மணமகள் தேவை. ஜாதகம் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2461.

பத்மசாலா எம். எஸ்ஸி., பி. எட்., படித்த நடுத்தர குடும்பப்பெண் வயது, 25, உத்தியோகம் — மாத வருமானம் ரூ. 1300/— அதே இனத்தைச் சேர்ந்த நல்ல மணமகன் தேவை. குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2462.

துளுவ வேளாளர், 24 வயது, உயரம் 165 செ.மீ. பி.ஏ. வரை படித்த குடும்பப்பாங்கான ரேவதி நட்சத்திரம் இரண்டாமிடத்தில் செவ்வாய் தோஷமுள்ள பெண்ணிற்கு மணமகன் தேவை. குடும்ப விபரம் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2463.

சாண்டில்ய கோத்திரம், வடமாள், உத்திரட்டாதி, பி.காம் வரை படித்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பெங்களூரில் வேலை பார்க்கும் 26 வயது மாநிறம், முகத்தில் லேசாக அம்மை வடு உள்ள செவ்வாய் தோஷமுள்ள பெண்ணுக்கு நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 2464.

வன்னிய குல க்ஷத்திரிய 30 வயது தமிழக அரசு தலைமைச் செயலகப் பணி, எம். ஏ. எம்பில். சம்பளம் ரூ 1000 மாதம் வாங்கும் மணமகனுக்கு படித்து அரசில் பணி புரியும் அழகுள்ள சைவம், ஆத்மஞானம், நல்ல குணமுள்ள இதே குலத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. பெட்டி எண்: 2465

18 வயது வடமாள், ஆத்ரேய கோத்திரம் திருவோண நக்ஷத்திரம், எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்து, இங்கிலீஷ் டைப்ரைட்டிங் பாஸ் செய்த 5' 5'' உயரம் உள்ள, சிவந்த மேனியுடைய பெண்ணுக்கு வரதட்சிணை வாங்காத மாப்பிள்ளை தேவை. பிரஹசரணம். அர்த்த சாஸ்திரம் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2466.

செங்குந்தார் முதலியார் வகுப்பைச் சேர்ந்த 29 வயதுள்ள, சிவந்த அழகான சுமார் 5 3/4 அடி உயரமுள்ள சொந்தத்தில் தொழில் செய்யும் எம். ஏ. பட்டதாரியான, மாதம் ரூ 2000/— வருமானமுள்ள மணமகனுக்கு, சற்று வசதியுள்ள, அழகான, அதே வகுப்பைச் சேர்ந்த, குறைந்த பட்சம் எஸ். எஸ். எல். ஸி. படித்த மணமகள் தேவை. பெட்டி எண்: 2467.

வயது 29, பிரஹசரணம். சங்க்ருதி கோத்திரம். அனுஷ நக்ஷத்திரம். எஸ்.எஸ்.எல்.ஸி. அழகான குடும்பப்பாங்கான பெண்ணிற்கு மாதம் ரூ 1000/—க்குக் குறையாத வருமானம் உள்ள படித்த மணமகன் தேவை. உட்பிரிவுகளும் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2468.

இந்து, விஸ்வகர்மா, தெலுங்கு, வாட்டம்வார் குலத்திற்குப் பொருத்தமிகு பி. ஏ. பி. எட். (எம். ஏ. படித்து வரும்) அரசுப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராக நிரந்தரப் பணியாற்றும் (34/5' 3'') மணநம்பிக்கு குணநலனும், படிப்பும் மிக்க, 28 வயதுக்குட்பட்ட மணநங்கை (மிருந்து) ஜாதகக் குறிப்பு, இதரக் குறிப்புக்களுடன் வரவேற்கப்படுகிறார். பெட்டி எண்: 2469

இந்து கவரா நாயுடு இனத்தைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்ற மத்திய அரசுப் பணியில் மாத வருமானம் ரூ 1500 வயது 31, பட்டதாரி மணமகனுக்கு அதே/வேறு இனத்தைச் சேர்ந்த, படித்த வேலையுள்ள/இல்லாத மணமகள் தேவை. விவாகரத்து பெற்றவரும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 2470.

வடமாள், பாரத்வாஜ கோத்திரம், அஸ்வனி நக்ஷத்திரம் 32 வயது எஸ்.எஸ்.எல்.ஸி. 148 செ.மீ (4' 8'') உயரம் அழகான, குடும்பப்பாங்கான தெய்வ பக்தி உள்ள தனியார் கம்பெனியில் வேலை ரூ 500/— வருமானமுள்ள பெண்ணுக்கு நிரந்தர தனியார் அலுவலகம் வங்கி, அரசு வேலையிலுள்ள வரன் தேவை. உட்பிரிவு சம்மதம். குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2471.

சங்க்ருதி கோத்ரம் பிரஹசரணம், விசாக நக்ஷத்திரம். திருச்சியில் மாநில அரசு நிறுவனத்தில் மாதம் ரூ 1,300/— வருமானம் உள்ள 36 வயது பையனுக்கு மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். வயது 31க்குள் இருக்க வேண்டும். (ஒரு விபத்தினால் வலது கை சற்று மெலிந்து (முழங்கையின் கீழ்பாகம் மட்டும்) காணப்படும்). பெட்டி எண்: 2472.

அழகும் ஆரோக்கியமுமுள்ள, குடும்பப்பாங்கான, பிரஹசரண பி. காம். பட்டதாரி, 23 வயது, ஹரித கோத்திரம், மூல நட்சத்திரம், 3—ம் பாதம் சுத்த ஜாதகம், 5 அடி உயரமுள்ள பெண்ணுக்கு நல்ல உத்தியோகத்திலுள்ள பட்டதாரிப் பையன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2473.

29 வயது, சிவந்த மேனி, எஸ். எஸ். எல். ஸி., சொந்தத் தொழில், நிரந்தர வருமானம், நல்ல வசதியுள்ள முஸ்லீம் மதத்தைச் சார்ந்த மணமகனுக்கு, சிவப்பு நிறத்தில், நல்ல அழகுள்ள, எஸ். எஸ். எல். ஸி. வரை படித்த மணமகள் தேவை. எளிய முறையில் திருமணம் செய்யப்படும். (தையலில் தேர்ச்சிப் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது). முழு விவரங்களுடன் விண்ணப்பிக்க. பெட்டி எண்: 2474.

பிரஹசரணம், ஹரிதகோத்திரம், திருவோணநட்சத்திரம், வயது 34, எம். ஏ., பட்டதாரி, தமிழக அரசில் சமூக நல நிறுவனத்தில் கண்காணிப்பாளராக (**Superintendent** ஆக) மாதம் 1500/— சம்பளம் பெறும் அழகான குடும்பப் பெண்ணிற்கு 36/39 வயது வரையுள்ள எல்லாவற்றிலும் நல்ல தகுதியுள்ள பையன் தேவை. உட்பிரிவுகள் (பிராமணர்களில்) விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 2475.

அகமுடைய வகுப்பு, வயது 35, பி. காம்., வரை படித்து மாநில அரசில் டைப்பிஸ்ட்டாக வேலை பார்க்கும் உடல் ஊனமுற்ற, சைவ உணவுப் பழக்கமுள்ள பையனுக்கு தியாக உள்ளமும், தியாக சிந்தனையுமுள்ள படித்த பெண் தேவை. ஜாதி பேதமில்லை. வரதட்சிணை இல்லை. குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2476.

தெலுங்கு பிராமண வெங்கி நாடு பிரிவைச் சேர்ந்த பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த 28 வயது பி. ஏ., சங்கீதத்தில் வாய்ப்பாட்டு, வீணை, வயலின், தேர்ச்சி பெற்ற பெண்ணுக்கு (மூல நட்சத்திரம்) நிரந்தர வேலையில், நல்ல குடும்பத்தில் உள்ள வரன் தேவை. எந்த உட்பிரிவாகிலும் ஆட்சேபனை இல்லை. பெட்டி எண்: 2477.

ஐந்து வருடங்களுக்கு முன் மணமாகி இரண்டே மாதங்களில் பலவித இன்னல்களுக்கும், கொடுமைகளுக்கும் பலியாக்கப்பட்டு விவாகரத்துப் பெற்ற 28 வயது பிராமணப் பெண்ணிற்கு பரந்த நோக்கம் கொண்ட 40 வயதிற்குட்பட்ட பிராமண மணமகன் தேவை. விவாகரத்துப் பெற்றவராயினும், தாரமிழந்தவராயினும் சம்மதம். பெட்டி எண்: 2478.

தெலுங்கு பிராமணன், பாரத்வாஜ கோத்திரம், மொலக நாடு, மஸ்கட்டில் வேலை பார்க்கும் வரன் பி.ஏ. பட்டதாரி, 33 வயது, உயரம் 5' 6'' நட்சத்திரம் ஆயில்யம் கடைசி பாதம், சுத்த ஜாதகம் உள்ள வரனுக்கு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாகவும் பட்டப்படிப்போ அல்லது எஸ். எஸ். எல். சி. படித்த உயரமாயும் அழகாயும் குடும்பப்பாங்குடனுமுள்ள பெண் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2479.

ஆத்ரேய கோத்திரம், பிரஹசரணம், ரேவதி நட்சத்திரம், வயது 28, பி. ஏ. பி. எட்., தனியார் பள்ளியில் டீச்சராக உள்ள அழகான பெண்ணுக்கு தகுதியான வேலையில் உள்ள மாப்பிள்ளை தேவை. பட்டதாரி அல்லது டிப்ளமா பெற்றிருக்க வேண்டும். குடும்ப விவரங்களுடன் ஜாதகத்துடனும் விண்ணப்பிக்கவும். உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 2480.

மாத்வ தேஷஸ்தா, மௌன பார்க்கவ கோத்திரம், பரணி, 32 வயதுள்ள எஸ். எஸ். எல். சி., டைப்ரைட்டிங் (இரண்டும் ஹையர்) தற்போது டீச்சராக உள்ள பெண்ணிற்கு வரன் தேவை. ஜாதகம் இல்லை. கன்னடம் மற்றும் பிராமண வகுப்பினர் விண்ணப்பிக்கலாம். எளிய முறையில் திருமணம். பெட்டி எண்: 2481.

கார்காத்த வேளாள இனத்தைச் சேர்ந்த 25 வயது நிரம்பிய பி. ஏ. படித்து தமிழ்நாடு அரசாங்கத்தில் பணிபுரியும் அழகும், குடும்பப்பாங்கும் உள்ள பெண்ணிற்கு மணமகன் அதே இனத்தில் தேவை. குடும்ப விவரங்களுடன் தொழில் முதலியன எழுதவும். பெட்டி எண்: 2482.

திருநெல்வேலி சைவ வேளாளர் இனத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அரசாங்க அதிகாரியின் 25 வயதான மகன் 5' 6'' வங்கியில் பணி ரூ. 1500/- வருமானம் அதே இனத்தைச் சேர்ந்த நல்ல குடும்பப் பெண் தேவை. ஜாதக, மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2483.

தாய் தந்தையர் உயர்ந்த வேலையிலும் சுமார் 4 லட்சம் மதிப்புள்ள சொத்தும், இரண்டே பையன்கள் உள்ள சோழிய வெள்ளாளர் குடும்பத்தைச் சேர்ந்த பி. ஏ. படித்த அழகான, 23 வயதுள்ள முதல் பையனுக்கு தொழில் முதலீடு செய்ய ஓரளவு வசதியுள்ள அழகான பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண்: 2484.

கௌண்டின்ய கோத்திரம், உத்திரட்டாதி நட்சத்திரம், 30 வயது, உயரம் 150 செ. மீ., குடும்பப்பாங்கான பி. எஸ்ஸி. பி. எட். பட்டதாரியான வடமாள், பிராமணப் பெண்ணிற்கு 33 முதல் 36 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. வயலினில் நல்ல தேர்ச்சி. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2485.

சாண்டில்ய கோத்திரம், ரோஹிணி நட்சத்திரம், 24 வயது, உயரம் 158 செ. மீ., குடும்பப்பாங்கான பி. காம். பட்டதாரியான வடமாள் பிராமணப் பெண்ணிற்கு, 28 முதல் 30 வயதுக்குட்பட்ட நல்ல உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2486.

விச்வாமித்ர கோத்திரம், திருவோணம், வயது 38, உயரம் 5 அடி, கால் சிறிது ஊனம், பத்தாவது வரை படிப்பு. குடும்பப்பாங்கான வடமாள் பிராமணப் பெண், நிரந்தர வருமானமுள்ள மணமகன் தேவை. இரண்டாம் தாரமாய் இருந்தாலும் பாதகமில்லை. பெட்டி எண்: 2487.

சின்ன செட்ல கோத்திரம், கோமுட்டிச் செட்டியார் சமூகம், வயது 44, உயரம் 5 அடி, புதுநிறம், சொந்த வியாபாரம், மாதம் 1000 ரூபாய் வருமானம் உள்ள தாய், தந்தை இல்லாத தனி நபருக்கு அதே சமூகத்தைச் சேர்ந்த பெண் தேவை. விருப்பம் உள்ளவர்கள் பெண் ஜாதகத்துடன் முழு விபரங்களும் தெரிவிக்கவும். ஆர். ராமன், 181, மேலரத வீதி, நெல்லை—627 006.

வடமாள், மௌத்கல்ய கோத்திரம், மிருகசீரிஷம், 28 வயதுள்ள, நிறமான, பி. ஏ., தட்டெழுத்து, சுருக்கெழுத்து படித்துத் தனியார் கம்பெனியில் பணிபுரியும் அழகுள்ள, குடும்பப்பாங்கான பிராமணப் பெண்ணுக்கு நல்ல உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண்: 2488.

செங்குந்த முதலியார், வயது 34, அரசினர் மேல்நிலைப்பள்ளி, முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர், மாத வருவாய் ரூ. 1400 மற்றும் இதர வருவாய், முதல் மனைவி இறந்து விட்டார். குழந்தைகள் உண்டு. மறுமணம் செய்து கொள்ள — நல்ல குடும்பத்திலிருந்து மருத்துவப் படிப்பு முடித்தவராகவோ, வங்கிப் பணியுள்ளவராகவோ, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியையாகவோ அல்லது படித்த, பணியிலில்லாத, இதே இனத்தைச் சார்ந்த மணமகள் தேவை. உட்பிரிவுகளும் சம்மதமே. பெட்டி எண்: 2489.

முதலியார் வகுப்பைச் சேர்ந்த, 46 வயதுள்ள, இது வரை திருமணமாகாத, 5' 7'' உயரமும், மாநிறமுமான, அரசாங்கத்தில் கம்ப்யூட்டர் ப்ரோக்ராமராக ரூ. 3000/- சம்பாதிக்கும் மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. அலுவலில் இருப்பவராக இருத்தல் நலம். விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2490.

ஹரிதகோத்திரம், ப்ரஹசரணம், பரணி நட்சத்திரம், எம். ஏ. பி. எட்., கேந்திரிய வித்யாலயா திருச்சியில் டீச்சராகப் பணிபுரியும் இளம்பிள்ளை வாதத்தினால் இடது கை சிறிது ஊனமுற்ற அழகிய நற்குணமுள்ள வீட்டு வேலைகளிலும் தேர்ச்சி பெற்ற 35 வயதுப் பெண்ணுக்கு நல்ல வேலையில் நற்குணமும், பரந்த மனப்பான்மையும் கொண்ட 36—43 வயதுக்குள் உள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 2491.

Invited alliance from Sowrashtra bridegroom employed/Business for 30, fair slim girl, No Dowry. Simple marriage. Reply with horoscope, family name & Gothra to Box No. 2492.

Alliance invited from decently employed, purely Vegetarian Pillai/Chettiar boy for 26 years, fair, M.A. B.Ed., Saiva Chettiar girl. Early marriage. Reply to Box No. 2493.

Wanted Telugu speaking, well educated and decently employed Naidu groom, around 45, for good looking, tall and slim girl employed in Central Govt. Decent marriage. Box No. 2494.

Wanted Non-Kousika Madhva Kannada, Officer Govt./Bank/Public Sector Organisation, groom for 1957 born fair slim 163 cms. Bespectacled soft spoken graduate, employed Social Orgn., girl affluent family. Reply No. 2495.

Wanted suitable match for 33 year Vadama Iyer hailing from Kerala, well employed in Public Sector from graduate Iyer girls preferably employed around 27 years. Box No. 2496.

Alliance invited from parents of professionally qualified boys maximum 28 years for (M. A.) charming, slim, Brahacharanam, Moudhgalya girl, 21/168 only daughter of Senior Public Sector Executive. Box No. 2497.

Alliance invited from wellsettled qualified boys for decent goodlooking Bharadwaja Vadamal girl, 32, Revathi, graduate, only daughter, born and educated in Bombay. Reply with Horoscope. Details to Box No. 2498.

Alliance invited from fair, respectable graduate Mudhaliar/Thuluva Vellala girl for a 29 years Thuluva Vellala boy B. Sc., D.B.M. Employed in Central Govt. drawing four figure, settled in Banga-

lore. Apply with reference and Horoscope. Box No. 2499.

Broad minded decently employed match India/Abroad from same caste only for charming graduate employed Iyer girl 28, innocent Divorcee. Without encumberance reply with Horoscope details. Box No. 2500.

Alliance invited for Bharadwaja, Vathimal, Rohini, 22, 160 cms, graduate, Bank employed girl. D/o. Central Govt. Officer. From employed, graduate, Tamil Iyer boys, 25—30 years. Subsect no bar. Contact with horoscope. Box No. 2501.

Groom for Brahacharanam girl, Sangruthi Gothram, Bharani, age 29, height 153 cms. Beautiful healthy and competent in household duties. Educated upto S. S. L. C. Those looking for efficient and obedient housewife only need apply with horoscope. Box No. 2502.

Boy aged 33 decently employed and well to do circumstace desires matrimonial alliance from south Indian Brahmin graduate Bank employed good looking or employed on decent terms. write to Box No. 2503.

Wanted suitable bride employed for Vadakalai Iyengar boy 32, B. Sc., Central Government Poona, Kousika Gothram, Revathi. Other Brahmin communities acceptable. Apply Box No. 2504.

Wanted Sowrashtra girl, fair, undergoing Graduation/Graduate, below 23, hailing from decent, well-to-do family, having Parents, for well-to-do Sowrashtra boy (only son) B. Sc. 24/170/1300 Central Government Employee. Respond with horoscope and family details. Box No. 2505

Maharashtrian Maratha Kshathriya bride aged 33. 155 cms, B. Sc., Central Government Officer, drawing 2000/- p.m. Bangalore settled requires suitable bridegroom. Caste no bar. Box No. 2506.

Hindu bride permanently employed at Madras or transferable for Handsome boy 30, Strict Vegetarian with secured savings Matriculate permanent Clerk reputed firm, Madras. Caste no bar. Box No. 2507.

Saiva Vellala Pillai, graduate boy, 28½/178/2000, reputed concern North, owns House, Plot in South seeks, tall, fair, employed/well educated girl. Job arranged for unemployed. Caste no bar. Box No. 2508.

Suitable match for goodlooking and broadminded Company executive, Divorcee, 45. No bars including for widows with one or two minor children. Box No. 2509.

We belong to Thuluva Vellala Mudhaliar, Vegetarian boy-5'4" 7.3.53 P. U. C., employed in Garden Woodroffe Company, Pallavaram. Now confirmed Rs. 450/- 86 Jan Rs. 550/-, 87 Jan Rs. 650/-. Want a charming Mudhaliar girl Vegetarian, employed. Box No. 2510.

Wanted from Non-Naithrupa Kasyapa goodlooking fair bride, domestically well trained employed/unemployed for Vadakalai fair double diploma Engineer Rs. 1,500/- Makam, 41, 5'3," employed at Madras. Thenkalai no bar. Write with horoscope and family details Box No. 2511.

Alliance invited from Non-Naithrupa Kasyapa Iyengar groom well placed for graduate beautiful, very fair complexioned girl, 33, Vadakalai Sathayam, 5' 2," well versed in Domestic chores. Thenkalai no bar. Apply with horoscope family details. Box No. 2512.

Alliance for Vadakalai boy age 28, executive in Multinational Corp. Calcutta, invited from Non-Kousika Iyengar/Iyer bride. Career based girl preferred. Respond with details to Mr. Murthi, 16, Purlia Road, Ranchi-834001.

Alliance invited from parents of girls, preferably from Teachers, transferable, for a Telugu Brahmin, Teleganya, Kousika, Makam, 41, 1600, 5'7", (M.A. M.Ed. Box No. 2513.

Bharadwaja/Brahacharanam Iyer/Revathi /29 years/174 cms/1800/graduate/groom working in reputed firm at Madras seeks alliance from Bank/Govt. Employed Iyer girl of respectable family. Groom wears Hearing Aid in one ear. Apply with horoscope and family details. Box No. 2514.

Alliance from decently employed, Gajula Balija grooms for goodlooking, slim, fair, P.U.C. Girl. Star Revathi. 32 years. Decent immediate marriage. Reply with details to Box No. 2515.

Wanted fair very beautiful Bride preferably employed below 25 for Tamil Iyer Kousika — Uttiratadhi Groom 30/165 cms employed multinational company in Bangalore. Salary 1500. Subsect no bar. Apply Box No. 2516.

தெலுங்கு பிராமணன். வெலநாடு. கௌசிக கோத்ரம். வயது 26. உயரம் 5' 2''. கலர். எஸ்.எஸ்.எல்.சி. தட்டச்சு தமிழ். ஆங்கிலம் தேர்வு. வேலையில் இல்லை. பெண்ணிற்கு வங்கி. அரசுத்துறையில் உள்ள மணமகன் தேவை. நல்லபடியான திருமணம். பெண்ணுக்கு அண்ணன் பி.எஸ்.சி. வயது 29. அனந்தம். சென்னையில் அரசு வங்கியில் வேலை. மாதம் 2100/-. வங்கி அல்லது நல்ல வேலையில் உள்ள அழகுள்ள பெண் தேவை. பெண் கொடுத்து பெண் எடுக்கவும் சம்மதம். பெட்டி எண்: 2517.

வடமாள் காஸ்யபம் உத்திரம் 4. தமிழ் ஸ்மார்த்த பிராமணன் வடார்காடு. 5' 2''. சிகப்பு நிறம். தனியார்துறை சம்பளம் ரூ. 350/- மணமகளுக்கு அரசாங்கம், தனியார்துறை, கம்பெனி, பேக்டரியில் வேலையிலுள்ள 34/40 வயது பிராமண மணமகள் தேவை. ஐயரில் எந்த உட்பிரிவும் சம்மதம். குடும்ப விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2518.

தஞ்சை மாவட்டம். வசதியான செங்குந்தர் முதலியார். அழகான கம்பீரமான, வாட்டசாட்டமான, தோற்றம் 5' 9'' பரணி நட்சத்திரம் சொந்த தொழில் ரூ 2000 மாதவருமானம் (பி.எஸ்ஸி) சைவம், வயது 35க்கு. செங்குந்தர் சிவப்பான அழகான பண்புள்ள குடும்பப் பெண் தேவை. ஜாதகம் அடிப்படை. பெட்டி எண்; 2519.

வைக்குறி. பிரஹசரணம், ஸ்மார்த்த 28 வயது. 5 அடி. கைத்தொழிலான வேலை பார்க்கும் பெண்ணுக்கும். ஸ்டேட் பாங்கில் வேலை பார்க்கும் 31 வயது 5½ அடி பையனுக்கும் மணமகன்/மணமகள் தேவை. மனப் பொருத்தம் முக்கியம். உட்பிரிவுகள் விலக்கல்ல. பெண் கொடுத்து பெண் எடுக்கவும் சம்மதம். வரதட்சணை இல்லை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2520.

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras (Phone: 431543)
Assistant Editor: Manjula Ramesh.




daCunha GCM/123/85/TM

REGISTERED No. TN MS (S) 231
Registered as a Newspaper in Sri Lanka

